
# கடவுளரும் மனிதரும்



பவானி

"Gods and Men", a collection of 14 stories, is Bhavani's first book. Educated at the Ladies' College, Colombo, and the University of Ceylon, Peradeniya, Bhavani entered the field of Tamil Literature as a short story writer, while still a student, just over 3 years ago, with the publication of her first story, "Arppanam" in the "Ilangkathir", the magazine of the Tamil Society of the University of Ceylon. Since then her stories have appeared in various journals and literary magazines

Stories in "Gods and Men" have a touching lyrical quality and a depth of perception and understanding of human nature. Beyond the beauty and tragedy of the situations portrayed in the stories is a compassionate humanism which pleads for sympathy for mere men in sordid situations hovering in the shadows besides those who reach the heights of gods. As much as the poetry and beauty in these stories touch the heart their message is invariably disturbing.

There is no story in the book with the title "Gods and Men" but the title is representative of all the stories and the author's vision.

அ. யேசுராசா,
குருநகர்,
27-10-70

# கடவுளரும் மனிதரும்

......மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.
—புறநானூறு

# கடவுளரும் மனிதரும்

பவானி

முதற் பதிப்பு — 1962

ஏக உரிமைகளும்
ஆசிரியருக்கே

கல்கோ அச்சகம்
கொழும்பு

மூன்று வருட காலத்துள் அவ்வப்போது பின்வரும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட கதைகளைக் கொண்ட இதுவே என் முதல் புத்தகம்:

வீரகேசரி (உன்னை உணர, மனிதன், அழியாப்புகழ், அன்பின் விலை) சுதந்திரன் (சரியா தப்பா? புதிர்) ஈழநாடு (ஜீவநதி) கலைச்செல்வி (காப்பு, மன்னிப்பாரா?) மரகதம் (விடிவைநோக்கி) இளங்கதிர் (அர்ப்பணம்) தேனருவி (சந்திப்பு) திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்க ஆண்டு மலர் (பிரார்த்தனை) திரைக் கலை (நிறைவு) சங்கம் (வாழ்வது எதற்காக?) இப் பத்திரிகைகளினதும் சஞ்சிகைகளினதும் ஆசிரியர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

முதன் முறையாகப் பிரசுரிக்கப்படும் பின்வரும் கதைகளும் இத்தொகுதியில் இடம் பெறுகின்றன: மீண்டும் வந்தது வசந்தம், கனவு, கானல்.

இக்கதைகளுக்குச் சித்திரம் வரைந்த ஓவியர், 'சி' "இக்கதைகளைத்தான் உணர்ந்து, ரசித்து அந்த ரசனையை வெளியிடும் முயற்சியின் உருவமே இச்சித்திரங்கள்," என்கிறார்.

"சிக்கல்"
8, சால்ஸ் சர்க்கஸ்,
கொழும்பு-3.

பவானி ஆழ்வாப்பிள்ளை

என் அன்னைக்கும் தந்தைக்கும்



# அழியாப்புகழ்

**வா**ன் முகட்டின் உச்சியைத் தொட்டுவிட்டது முழு நிலவு. ஆனால் அந்தப் புல்மேட்டில் சாய்ந்து கிடந்த அமலனோ இன்னும் அசையவில்லை. வான் வெளியிலே நிலைத்த அவன் கண்களில் ஒரு தாகம், நிறைவின்மை. ஆயிரம் கற்பனைகளை உள்ளத்திலே தோற்றித் தோற்றி அழித்தும் அவன் தேடிய பூரணத்துவம் கிட்டவில்லை. சிறிது தூரத்தில் அவனையே பார்த்துக் கால் கடுக்க நின்ற மதுராவின் பொறுமை எல்லையற்றதா? வெகு நேரமாய் நிற்கிறாள். அவள் வரவை உணர்ந்து, முகம் மலரத் துள்ளி எழுந்து, "உனக்காகத் தான் காத்திருந்தேன் மதுரா!" என்றெல்லாம் சொல்லுவான் என்றெண்ணி மகிழ்ந்து நின்றாள். ஆனால் அமலன் அவளை எங்கே கவனித்தான்? பொறுமையிழந்த மதுரா தானாகவே அமலனுக்கு அருகில் வந்து அமர்ந்தாள். ஒரு நொடி அவளை நோக்கிய அமலனின் விழிகள் மீண்டும் நிலவில் நீண்டு நிலைத்தன.

"அமலா, விழிதேயும்படி பார்க்க அந்நிலவில் என்ன அற்புதத்தைக் கண்டாய்?"

"என் மதுராவின் வடிவழகைக் கண்டும் உன் முகத்தைக் காட்ட என்ன தைரியம் உனக்கு என்று கேட்டுக் கொண்டிருந்தேன்", என்று சொல்லுவான் என்று மதுரா நினைத்திருந்தால் ஏமாற்றமே அடைந்தாள்.

"மதுரா, இவ்வுலகிலே ஆதி மனிதனும் இந் நிலவைத் தான் கண்டு களித்தான். அதே நிலவு இன்றும் ஒளி வீசுகிறது. நாளையும் ஒளி வீசும். இந்த நிலவைப்போல நானும் நிலைபெறவேண்டும். தேய்ந்து, மாய்ந்து, வளர்ந்து

நிறையும் நிலவாக அல்ல. தேயாத இன்றைய முழு நிலவாக உலக வானிலே அமலநாதனின் உருவம் நிலைக்க வேண்டும் மதுரா!'' தொடர்ந்து ஏக்கப் பெருமூச்சு. யார்? மதுராவா? அமலனா? மதுரா அமலனை எண்ணி ஏங்கினாள். அமலன் அமரத்துவத்தை எண்ணி ஏங்கினான். அமலனின் பிரச்சினை இதுதான். எப்போது பார்த்தாலும் இதே பேச்சுத் தானா? தூக்கத்திலும் விழிப்பிலும் அவன் உள்ளத்தை ஆக்கிரமித்த எண்ணம் இதுதானா? அவன் உள்ளத்திலே ஆட்சி புரியக் கனவு கண்ட மதுராவுக்குத் தோல்விதானா? அமலனின் விபரீத ஆசையை — அவளைப் பொறுத்த அளவில் விபரீத ஆசை தான் — அறிந்து கொண்ட நாள் முதலாக அவனை நோக்கி ஓடும் தன் உள்ளத்தைத் தடுத்து நிறுத்தி வேறு வழியில்செலுத்த எவ்வளவோ முயன்றாள் மதுரா. மதுரா பெண்மையின் முழு நிறைவையும் பெற்று வாழ விரும்பினாள். ஆனால் தன் உள்ள உணர்ச்சிகளுக்கு அணைபோட வழியறியாது தவித்தாள். எப்போதாவது அமலனின் வாயிலிருந்து உதிரும் அன்பு மொழிக்காகச் சாதகப் பட்சி போல் தவங்கிடந்தாள். அமலனுக்கு அவள் மேல் அன்பு இல்லையென்று அல்ல மதுராவிடம் அவனுக்கு அன்பு, பற்றுதல் எல்லாம் உண்டு. ஆனால்...... அவன் லட்சியத்தின் முன்?...... அவன் இதய தாகத்தின் முன்?...... மதுராவுக்கு ஆத்திரத்தில் உதடுகள் துடித்தன.

''அமலா, இத்தனை இளம் வயதிலேயே குருதேவரே போற்றும்படியான உயிர்ச்சிற்பங்களைச் செதுக்கியிருக்கிறாய். உன் வாழ்க்கையே உன்முன் விரிந்து கிடக்கிறது. உன் கை உளிக்கு ஓய்வு கொடுக்கப்போகிறாயா என்ன? நீ விட்டுச் செல்லும் சிற்பச் செல்வங்களில் நீ என்றும் வாழ்ந்து கொண்டிருப்பாய். உன் லட்சியம் நிறையவில்லையா?'' அமலன் திரும்பாமலே பேசினான்.

''மதுரா, நதியின் போக்கிலே நிமிர்ந்து நிற்கும் குன்றும் நதிப் பெருக்கால் அரிக்கப்பட்டுக் காலக்கிரமத்தில் தேய்ந்து தேய்ந்து நதிப்படுகையில் மறைந்துவிடும். அப்

படித்தான் இச்சிற்பங்களும்! கால வெள்ளத்தில் கரையாத சின்னத்தை, உலகம் உள்ளளவும் என்னை வாழவைக்கும் சின்னத்தை நான் சமைக்கவேண்டும் மதுரா! அமலநாதன் என்ருெருவன் வாழ்ந்தான் என்பதை உலகம் மறந்துவிடுமோ என்று நினைக்கவே என் மனம் நடுங்குகிறது. நான் வாழவேண்டும் மதுரா! வரலாற்றிலே நான் வாழவேண்டும்''. அமலன் தன் இதயதாபத்தைக் கொட்டித்தீர்த்தான்.

''அமலா, உனக்குச் சதா இதே நினைவுதானு? வெறிதானு? ஆம் அமலா! இது உன் கண்களைத் திரையிட்டுத் தடுமாறச் செய்யும் வெறிதான். இந்த வெறியிலே உனக்கு எதுவுமே லட்சியமில்லையா?...... நான்கூட லட்சியமில்லையா?'' மதுராவின் உள்ள ஆதங்கம் பெண்மையின் கட்டுப்பாட்டையும் மீறி எழுந்தது.

''நீ கூட லட்சியமில்லைத்தான்—ஆ!...... மதுரா........'' சொல்லிக்கொண்டே திரும்பிய அமலன் சட்டென்று நிமிர்ந்தான், அவன் உள்ளத்தில் ஏதோவொரு உணர்ச்சி பொங்கி எழுந்தது. மதுரா எவ்வளவு அழகாக விளங்கினுள். நிலவொளியைத் தூரிகையில் குழைத்துத் தீட்டிய சித்திரம் போல் மதுராவின் முகம் பொன்னிறம் வீசியது. அதிலே இருள் குவளையென இரு விழிகள். கனியிதழ்கள் மெல்லத் துடித்தன ..........மெல்லிய, நீண்ட மென்கழுத்து...... இளமையின் இன்பமென ஏறெடுத்து நிற்கும் இளமார்பு...... ..............அத்தனையையும் கண்களால் பருகினுன்.

''மதுரா எவ்வளவு அழகாக இருக்கிருய்!'' அமலன் அவள் கையைப் பற்றி முரட்டுத்தனமாக இழுத்தான் ..... ..... ..... மெல்ல மெல்ல அவன் முகம் குனிந்தது. மதுராவின் கண்கள் இயல்பாக மூடின ........ இயற்கையே ஒரு கணம் இயக்கமிழந்து நின்றது போல் ............ ஆனுல், பாவம் மதுரா! அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. அமலனை ஏதோ ஒரு உணர்வு உந்தியது. அவன் விரல்கள் துடித்தன. துள்ளியெழுந்தான்.

"மதுரா, இந்த அற்புத அழகு மறைந்துவிடுவதா? .." அமலன் மதுராவின் கையைப்பற்றி அவளைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு ஓடினான். அவன் குடிசையின் பின்புறத்தில் முடிந்ததும் முடியாததுமான சிற்ப வடிவங்களும் வெறும் பாறைகளும் கிடந்தன. அங்கு வந்ததும்தான் அமலன் நின்றான்.

"இப்படிஉட்கார் மதுரா" என்றுவிட்டுத் தன்உளியை எடுத்தான். மதுராவின் ஏமாற்றம் ஆத்திரமாய்க் குமுறியது.

"முடியாது அமலா! நான் மாட்டவே மாட்டேன்!",

"மதுரா, எனக்காக இந்தச் சிறு உதவி செய்ய மாட்டாயா?" மதுரா அவனை ஏறிட்டுப்பார்த்தாள்.

"எதற்காகச் செய்ய வேண்டும் அமலா? எனக்கென்று உன் எண்ணத்தில் என்றாவது இடம் கொடுத்திருக்கிறாயா? உனக்கு நான் ஏன் உதவ வேண்டும்? " அமலனின் கை மெல்ல அவள் தோளை வளைத்து அணைத்தது.

"மதுரா, இது என்ன குழந்தைத்தனம்? என் உள்ள அந்தரங்கமெல்லாம் உன் ஒருத்திக்குத்தானே சொந்தம்? நீயே என்னைப் புரிந்து கொள்ள மறுத்தால் ? ... ... மதுரா எனக்காக ......... " மதுரா நெட்டுயிர்த்தாள்.

"எப்படியும் உன் உள்ளத்திலே எனக்கு இரண்டாம் இடம்தானே அமலா?" மதுரா நிலவொளியில் தரையில் அமர்ந்தாள். நிலவின் பாலொளி மதுராவிற்கு ஓர் அமானுஷிகத் தன்மையை அளித்தது. அமலன் செதுக்கலானான். மதுரா அவனையே கண்கொட்டாமல் பார்த்திருந்தாள். மெல்ல மெல்ல அவள் உள்ளத்தின் தாகம், ஆதுரம் எல்லாம் வாடும் உதடுகளில், ஏங்கும் கண்களில், பிரதிபலிக்கலாயிற்று ... ... ... அமலன் செதுக்கிக்கொண்டேயிருந்தான். ...... ...... ...... ......

●

முடிந்த சிற்ப வடிவின் முன் அமலன் அமர்ந்திருந்தான். பின்புறமிருந்து அவன் தோள்களில் இரு மெல்லிய கரங்கள் பதிந்தன. அமலன் திரும்பாமலே பேசினான்.

"மதுரா, பார் என் படைப்பை!" அப்போதுதான் மதுரா சிற்பத்தைப் பார்த்தாள்.

"ஆ! நான் —"

"ஆமாம் மதுரா! நீதான்! நீயேதான்! என் ஜீவ சிருஷ்டி!" அமலன் எக்களித்தான். அவன் முகத்திலே கர்வம் தெறித்தது. உண்மையில் அது வெறும் சிற்பமாக இல்லை! வெறும் கல்லாக இல்லை. அந்தச் சிற்ப வடிவிலே மதுராவின் உருவத்தை மட்டுமல்ல, அவள் உயிரை, உணர்வை அமலன் சிறைபிடித்து விட்டான். மதுராவே அமர்ந்திருப்பதுபோல் ஒரு பிரமை. பட்டப்பகல்தான்! ஆனால் அந்தச் சிற்பத்தைப் பார்க்கப் பார்க்க அமலன் அதைச் செதுக்கிய சூழல் — அந்த வசீகர நிலவொளி, அது எழுப்பிய மாய உணர்வு எல்லாமே தோற்றமா யிற்று ............ மதுரா உதட்டைக் கடித்தாள். சிற்ப வடிவத்தின் முகத்தில் தெரிந்த ஆழ்ந்த ஏக்கமும் தாப மும் அவள் முகத்திலும்! ...... ...... ...... அந்தச் சிற்பத்திலே கலை அம்சத்தைக் காணும் அமலனின் உள்ளம் அதிலே தெரியும் பெண்ணின் உள்ளத்தைக் காணும் உணர்வற்-றதா? அமலா என்று அழுதது அவள் உள்ளம். கண்களை நீர் குருடாக்க மதுரா திரும்பி ஓடினாள்.

அதற்குப்பின் ஒரு வாரமாக எப்படியோ அவள் அமலனின் குடிசைப் பக்கம் போகாமலே இருந்தாள். ஆனால் அமலன் அவளைப்பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. அன்று அந்தி மாலையின் ஏகாந்தத்தோடு தன் உள்ளத் தனிமையை உறவு பூணவிட்டுத் தன் குடிசை வாசலில் அமர்ந்திருந்தாள் மதுரா. தொலைவில் ஒரு உருவம் விரைந்து வந்து கொண்டிருந்தது. அமலனா? ஆமாம், அமலன்தான்! அவளைத் தேடி வருகிறான்! உள்ளம் துடிக்க அவள் இருந்தாள். அமலன் அவளிடம் தான் வந்தான் — ஆனந்தப்பரவசனாய் வந்தான்.

"மதுரா என் கனவு நிறைவேறும் வழி கண்டுவிட்டேன்! கால ஏட்டிலே என் பெயரைப் பொறிக்க வழி

கண்டுவிட்டேன்! கேள்விப்படவில்லையா நீ? மதுரா, எங்கள் மாமன்னர் ராஜராஜ சோழர் தஞ்சையிலே திருக்கோயில் எடுக்க முடிவு செய்துள்ளார். அக்கோயில் கட்டும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தமிழ் நாட்டிலே மிகச் சிறந்த சிற்பியைத் தேர்ந்தெடுக்கப் போகிறாராம். அதற்காகச் சிற்ப விழா நடத்தவிருக்கிறார் மாமன்னர் ...... ...... ......" மதுரா இடைமறித்தாள்.

"கேள்விப்பட்டேன். ஆனால் அதற்கென்ன அமலா?"

"என்ன மதுரா, புரியவில்லையா? தஞ்சைக் கோயிலை என் பொறுப்பில் மட்டும் மாமன்னர் கொடுத்தாரானால் ... ...... ... தஞ்சைக் கோயிலைக் கட்டிய சிற்பி அமலநாதனின் புகழ் கோயிலோடு வாழுமே! வரலாற்றில் இடம் பெறுமே!"

"அமலா, நீ வெறும் கானலை நம்பி ஓடுகிறாய்!" அமலன் சிரித்தான்.

"பைத்தியக்காரி! கானல் நீராய்ச் சாரமற்று மறைந்துவிடக் கூடிய வாழ்வை நிலையுள்ளதொன்றாக்கத் தானே போகிறேன். இன்னும் ஒரு திங்களில் சிற்ப விழா மதுரா. நாளை உதயத்தில் நான் உறையூருக்குப் பயணமாகிறேன் ................" அவள் மௌனத்தை அப்பொழுது தான் உணர்ந்தவன் போல் நிறுத்தினான்.

"என்ன மதுரா, உனக்கு சந்தோஷமாகவில்லையா?"

"போகிறாயா அமலா? நீ போகத்தான் போகிறாயா?" மெல்ல முணுமுணுத்தாள். பின்பு நிமிர்ந்து தயக்கத்தோடு கேட்டாள்,

"அமலா, ...... நீ அன்று செதுக்கினாயே ...... என்னைப் போலொரு சிற்பம்! ...... அதை ...... எனக்குத் தந்துவிட்டுப் போகிறாயா?" அமலன் உரத்துச் சிரித்தான்.

"அதைத்தானே போட்டியில் சேர்க்கப்போகிறேன் மதுரா! அந்த ஒரு சிற்பம் தானே எனக்கு வெற்றியளிக்கப் போகிறது ...... போய் வருகிறேன் மதுரா"

"என்னை மறந்துவிட மாட்டாயே அமலா? ...... ......" அமலன் ஒரு கணம் அவளைக் கனிவோடு நோக்கினான்.

"இல்லை மதுரா. மறக்கமாட்டேன்." திரும்பி நடந்தான். இருள் அவன் உருவை விழுங்கிய பின்னும் மதுரா அவன் போன வழியைப் பார்த்திருந்தாள்.

சிற்பப் போட்டி முடிந்து விட்டது. ஆயிரமாயிரம் சிற்பங்களில், வெவ்வேறு கற்பனைக் கோணங்களில், மாமன்னரைக் கவர்ந்தது அமலநாதனின் ஜீவ சிருஷ்டி தான். அமலநாதன் அதிசயிக்கவில்லை. அது அவன் எதிர் பார்த்த முடிவுதான்.

"அமலநாதா, இளைஞனாயிருக்கிறாயே! தஞ்சையின் கற்கோயில் — கலைக் கோயிலாய்த் திகழ வேண்டும். உன்னிடம் அந்தக் கலை பரிபூரணமாய் நிறைந்திருக்கிறது. எத்தனை காலமானாலும் கவலையில்லை. அவகாசமெடுத்து நீ எனக்கொரு அற்புதக் கலைச் சின்னத்தை ஆக்கித்தர வேண்டும்." அமலன் உடம்பை வளைத்து வணங்கினான்.

"மகாப்பிரபு, என் பாக்கியமே பாக்கியம்!"

தஞ்சையில் உருவாகப்போகும் கோயிலின் திட்டம் அமலனின் கற்பனையில் உருவாக ஒரு வருடமாயிற்று. கோயி லின் ஒரு கல் கூடத் தவறாது அவன் திட்டத்தில் இடம்பெற் றது. திட்டத்தை மன்னரிடம் சமர்ப்பித்தான். ராஜ ராஜ சோழருக்கு ஆத்ம திருப்தி. கோயில் வேலைகள் ஆரம்ப மாயிற்று. ஆயிரமாயிரம் சிற்பிகள் அமலநாதனின் கீழ் ஓயாது ஒழியாது உழைத்தார்கள். மெல்ல மெல்ல பிருகதீஸ்வரரின் ஆலயம் உருவாயிற்று. ஆயிரமாயிரம் கைகள் ஆக்கவேலையில் பங்குபற்றின. அவற்றில் இரண்டு தான் அமலனின் கைகளும். ஆனால் அவன் ஒருவனின் கற்பனைதான் அந்த ஆலயத்தைத் தோற்றுவித்தது. நாட் கள் நலிந்து, மாதங்கள் தேய்ந்து, வருடங்கள் நழுவி ஓடின. ராஜ ராஜன் சொல்லியிருந்தான் 'எத்தனை கால மானாலும் கவலையில்லை, என்று. அமலன் தன் கலைக் கனவு

களை எல்லாம் ஊட்டி வளர்த்தான் ஆலயத்தை. அவனை வாழ்விக்கப் போகும் ஆலயம் அல்லவா? எத்தனை வருடங்கள் உருண்டனவோ அமலன் அறியான். மன்னர் அடிக்கடி ஆலயத்தைப் பார்வையிட்டுச் செல்வார். ஒரு நாள் திருக்கோயில் பூர்த்தி பெற்று விட்டது என்று மன்னருக்குச் செய்தி வந்தது. வானளாவும் கோபுரத்தை அண்ணாந்து நோக்கிய மன்னரின் மனம் பூரித்து விம்மியது.

"அமலநாதா, நீ மகாசிற்பி. கோபுரத்தின் சிகரமாய் அமைந்த விமானம் கலையின் சிகரத்தையல்லவா உணர்த்துகிறது," என்றார் மன்னர்பிரான். கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்தினார் ராஜராஜசோழர். அப்பொழுது அமலநாதனையும் கௌரவித்தார்.

"இந்தக் கோயிலை அமைத்துதவிய அமலநாதனுக்குச் சிற்பச் சக்கரவர்த்தி என்னும் விருதை வழங்குகிறேன்," என்று ராஜராஜர் கூறியதும் மக்கள் ஆரவாரித்தனர். அமலநாதன் தன்னையே மறந்தான். விருதை நினைத்தல்ல. "இந்தக் கோயிலை அமைத்துதவிய அமலநாதர்" என்ற சொற்கள்தான் அவனைக் கிறங்கச் செய்தன. மன்னரே கூறிவிட்டாரே! இனி என்ன?

அமலநாதன் காஞ்சியிலே தங்கிவிட்டான். புகழ்ப் போதையிலே மூழ்கித் திளைத்தான். தஞ்சை ஆலயம் உருவாகி நான்காவது வருடம் மாமன்னர் ராஜராஜ சோழர் புகழுடம்பெய்தினார். இளவரசர் ராஜேந்திரர் அரியணை ஏறினார்...... காலம் கனவேகமாய் ஓடி மறைந்தது. இப்பொழுது அமலநாதருக்கு எழுபது வயதிருக்கும். ஓய்வு பெற்று வாழ்ந்து வருகிறார். இப்பொழுது அவருக்கு வாழ்க்கையின் எல்லைக் கோட்டை மிதிக்கும் உணர்வு தோன்றுகிறது. கொஞ்ச நாட்களாகவே அவர் உள்ளத்தை ஒரு ஆசை அரித்துவந்தது. மீண்டுமொரு முறை தஞ்சைப் பெரிய கோயிலைப் பார்த்துவிட்டுக் கண்களை மூடவேண்டும் என்றொரு தூண்டுதல். ஒருநாள் சிஷ்யர்களிலொருவனான சுதாமனைத் துணையாக அழைத்துக்கொண்டு புறப்பட்டே விட்டார். கோயிலில் ஒரு

இடம் விடாது சுற்றிச் சுற்றி வந்தார்; நின்று நின்று கண்களால் பருகினார். பழைய நினைவுகள் பசுமை மாறாது மனதில் கூடின. ஒரு படியாக அமலநாதர் வெளிப் பிரகாரத்திற்கு வந்து கோயில் கோபுரத்தையும் விமானத்தையும் நிமிர்ந்து நோக்கினார். அவர் உள்ளப் பெருமிதமும் அப்படியே நிமிர்ந்து வளர்ந்தது...அருகில் மூன்று நான்கு இளைஞர்கள் கூடி நின்றனர். அமலநாதருக்குத் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. தன்பெருமையைப் பிறர் வாயிலிருந்தே கேட்டுவிடும் ஆவல். அவர்களை நெருங்கினார்.

"ஐயா. இந்தக் கோயிலை யார் கட்டியது, தெரியுமா?" என்றார். அவ்விளைஞன் சிரித்தான்.

"இவ்வளவு காலம் வாழ்ந்துவிட்டீர் பெரியவரே, இது தெரியாதா? ராஜராஜ சோழர் கட்டிய கோயிலாகும் இது!" அமலநாதருக்குத் தஞ்சைக் கோபுரமே தலையில் சரிந்தது போலிருந்தது. வெறும் ஏமாற்றமா? அவர் மனோரதம் அவர் கண்முன்னாலேயே தூள் தூளாகக் கண்டார். எப்படியெல்லாம் மனப்பால் குடித்திருந்தார்...

"சிச்சீ முட்டாள்! ராஜராஜ சோழன் கோயிலைக் கட்டுவித்தான். கட்டியவன் நான் தெரியுமா? இந்தக் கோயிலைக் கற்பனைக் கருவிலே காத்து, வளர்த்து, ஆக்கிய சிற்பி நான், தெரியுமா? சிற்பச் சக்கரவர்த்தி அமலநாதன் தெரியுமா?" படபடத்தார்.

"நீர் ஒருவர்தானா பெரியவரே? எத்தனையோ ஆயிரம் சிற்பிகளின் கை உளிகள்தான் இந்தக் கோயிலை உருவாக்க உழைத்தன. அவர்கள் எல்லோருமே தத்தம் பெயர்களைப் பொறித்துவிட்டா போனார்கள்? இந்த ராஜராஜேஸ்வரம் ராஜ ராஜ சோழன் அமைத்த ஆலயம் தான்!" அவன் போய்விட்டான். அமலநாதர் அடங்கி ஒடுங்கிப்போனார். அவர் பெருமிதமும், வீறும் போன இடம் தெரியவில்லை. அப்பொழுதுதான் முதுமை வரப்

பெற்றவர் போல் முதுகு கூனக், கண்கள் மங்க, மன மொடிந்து நின்ருர். அவர் உள்ளத்திலே ஒளிக்கீற்றுப் போலொரு எண்ணம் ஓடியது. ''தன்னைச சிறுமைப் படுத்தி என்னைப் பெருமைப்படுத்திய மாமன்னனின் புகழ் வாழ்கிறது. இறைவா, மனிதனின் ஆணவமும் அகந்தையும் வலுவிழந்து அவன் உன்னிலே தன்னை இழந்துவிடவேண்டிய உந்தன் சந்நிதியை. என் ஆண வத்தை வாழவைக்கும் கருவியாக்க முயன்றேனே! உன் னைத் தவிர நித்தியம் என்றேது?'' அமலநாதர் ஏதோ அற்புதத்தை உணர்ந்தவர் போல் நின்ருர். மெல்ல மெல்ல மாண்டவர் உலகிலிருந்து வருவது போலொரு குரல் அமலநாதரின் செவிப்புலனைத் தொட்டது.

''நீ போகப் போகிருயா அமலா?''

''என்னை மறந்துவிட மாட்டாயே அமலா?''

''மதுரா! மதுரா!'' அமலநாதர் வாய்விட்டே கூவிவிட்டார். சுதாமன் பதறிவிட்டான்.

''சுதாமா, நான் இப்பொழுதே மதுராவைப் பார்க் கவேண்டும்! புறப்படு!''

உதயத்திலே அமலநாதர் மதுராவின் குடிசையை அடைந்தார். எத்தனையோ ஆண்டுகள் கழித்து வருகிருர். இளைஞராய், இதயமற்றவராய்ச் சென்றவர், முதிய வராய், ஒரு பெண்ணுக்கிழைத்த துரோகப் பெருஞ் சுமையோடு வருகிருர். மதுரா அவரை அறிந்துகொள் வாளா? படபடக்கும் நெஞ்சொடு வாசலில் நின்று மெல்ல அழைத்தார். பதிலில்லை. திறந்த வாசலூடே எட்டிப் பார்த்தார். மதுரா ஒரு பாயில் கிடந்தாள். மதுராவா? ஆமாம். காலத்தின் கீறல் விழுந்த முகத் தொடு, முதுமையின் வற்றிய உடம்பொடு மதுராதான். ஆனல் அமலநாதரின் கண்களுக்கு அந்த உருவிலும் அன்று

நிலவொளியில் அமர்ந்த மங்கை தோன்றினுள். அவளருகில் அமர்ந்தார்.

" மதுரா." மதுராவின் குழி விழுந்த கண்கள் திறந்தன.

" வந்துவிட்டீர்களா? " அவள் உதடுகள் முணுமுணுத்தன. அவள் முகத்தின் சுருக்கங்களெல்லாம் நிறைந்து மலர்வது போல முகத்திலொரு பிரகாசம். அமலநாதர் சொல்லொணுக் கசப்போடு பேசினுர்.

" ஆமாம் மதுரா! ஊழி வரை என் புகழை நிலை நாட்டச் சென்றேன். அது ஒரு தலைமுறைக்குக் கூட வாழவில்லையென்பதை என் காதாலேயே கேட்டுவிட்டேன். "

" இல்லையில்லை! உங்கள் பெயர் வாழும், தஞ்சைக் கோயிலைக் கட்டிய மகாசிற்பியென...."

" இல்லை மதுரா! இல்லை! தஞ்சைக் கோயிலைக் கட்டியவன் ராஜராஜ சோழன். ஒரு பெண்ணின் இதயத்திலே கோயில் கட்டி வீற்றிருக்கும் பாக்கியத்தை உதாசீனம் செய்த என்னை இவ்வுலகம் அறியவே வேண்டாம். ஒரு பெண்ணின் உள்ள உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ள முடியாமற்போன நானும் கலைஞு?... என்னை உன்னுல் மன்னிக்கத்தான் முடியுமா மதுரா? "மெல்ல முறுவலித்தாள் மதுரா. அவள் தலை சாய்ந்துவிட்டது. காலமெல்லாம் ஏங்கி ஏங்கி நிழல் வாழ்க்கை நடத்தியவள் இனி என்றுமே அவர் நினைவில் நிழலாகி விட்டாள். மனமொடிந்து நின்றவருக்கு மனச்சாந்தி அளித்திருக்கக் கூடியவள் மறைந்துவிட்டாள். இனி அவருக்கு எவ்விதத்தில் நிம்மதி? அமலநாதர் அழவில்லை. அது வெறும் கண்ணீரால் கழுவிவிடும் துன்பமல்ல.



# அன்பின் லீலை

வாயிலருகில் முக்காலிமேல் பன்னீர் செம்பு தனியே நின்றது. சந்தனக்கோப்பை தரையில் விழுந்து நசுங்கிக்கிடந்தது. அதிலிருந்து பெருகிப் பளபளக்கும் கறுப்புத்தரையில் பெரிய பொட்டுப்போல் பரவி உறைந்துவிட்ட சந்தனத்தை விரிந்து, வெறித்த கண்களால் கட்டுண்டவள் போல் உன்னிப்பாய்ப் பார்த்திருந்த இரத்தினு சுவரோடு சுவராய் ஒருக்களித்துச் சாய்ந்திருந்தாள். அருகில், பிரம்பு நாற்காலியுள் முடங்கிக் கிடந்தார் கருணாகரர். அவரது கம்பீரமான உருவிலும், களை சிந்தும் முகத்திலும் ஒருநொடியில் இத்தனை பெரிய மாறுதல் ஏற்படக்கூடுமா? ஒரு மனிதன் கணப்பொழுதில் மூப்படையக்கூடுமா? கூனிக் குறுகிய வடிவும், ஜீவனற்ற முகமும், மங்கிய கண்களுமாகக் கருணாகரர் உள்ளம் நைந்து, சிதைந்த கிழவராகிவிட்டார். ஆடுமகன் விதியின் சூழ்ச்சிச் சுழலிலே மீட்சியின்றி மூழ்கிவிட்டார்..தான் மட்டுமல்ல..தன்னோடு இரத்தினுவையும் சேர்த்து மூழ்கடித்து விட்டார். அவள் செய்யாத பாவத்திற்காக அவள் அவதியுறவேண்டுமா? அன்றி, அவள் பாபத்தின் சின்னம் என்று சமூகம் கணித்துவிட்டதால் பரிதவிக்க வேண்டியவளா? கந்தையா—அந்தக் கிழம்—அவர் வாழ்க்கையில் குறுக்கே குறுக்கே வந்து விழக் கங்கணம் கட்டிக்கொண்டதோ என்னவோ?.....கருணாகரர் இரத்தினுவைப் பார்க்கும் தைரியமற்றவராய் முகத்தை

மார்பின்மேல் கவிழ்த்துக்கொண்டார். இன்னுஞ் சிறிது நேரத்தில் இரத்தினு அவரைக் கேட்கப்போகிறுள். கந்தையா நடந்துகொண்ட விதத்திற்குக் காரணம் கேட்கப் போகிறுள். அவளுக்கு என்ன சொல்வது? தன் வாழ்க்கையின் அவலத்தை எடுத்துச்சொல்வதா? எப்படிச் சொல்வது? தன் வாழ்க்கையின் கறை அவள் மேல் படியாது இத்தனை வருஷமாகப் பாதுகாத்தும் இன்று அது அவள் வாழ்க்கையையே கண்ணிமைப் பொழுதில் கருக்கி விட்டதே! இரத்தினு, நானுவது வாழ்ந்தேன்—வருடமொன்ருனுலும் வான் நிறைந்த இன்பம், என் வாழ் நாள் முழுவதுமே மணக்கும் இன்பத்தோடு வாழ்ந்தோம் சரோவும் நானும். ஆனுல் நீ—நீ இனி என்றைக்குமே வாழ முடியாது இரத்தினு. உன்னை எவனும் மணக்கமாட்டான், என்று மௌனமாய்ப் புலம்பியது அவர்உள்ளம் .அதிர்ந்துவிட்ட அவர் மனதிலே சித்திரத் தொடர்போலக் கடந்த நிகழ்ச்சிகள் தோன்றின. அன்று ஞாயிற்றுக்கிழமை-விஸ்ராந்தியாகப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த கருணுகரரை இரத்தினு - அவர் பெற்ற பெண் - தேடி வந்தாள். மேசை மேல் சாய்ந்து தன் கைவிரல் நகத்தைச் சப்பியபடி வெகுநேரம் பேசாமல் நின்ருள். அது அவளுக்கே உரித்தான பழக்கம். இரத்தினு தன் வட்டக்கரிய விழிகளைக் கூசியபடி நகத்தைச் சப்பினுல், அது இரத்தினு தன் தந்தையைக் 'காக்காய்' பிடிக்க ஆயத்தமாகிருள் என்று அர்த்தம்!

"என்னம்மா?" என்று மெல்லத் தூண்டினுர் கருணுகரர்.

"அப்பா. . . அப்பா, என் திருமண விஷயத்தில் என் விருப்பப்படிதானே நடப்பீர்கள்?" சுவரைப் பார்த்துக் கேட்டாள்.

"இதிலென்ன சந்தேகம் இரத்தினு?"

"அப்படியானுல், நான்... ஒருவரை விரும்புகிறேன்

அப்பா. அவரைக் கல்யாணம் செய்துகொள்ளத் தடையே தும்......" இரத்தினு தன் விரல்களைக் கவனமாய் ஆராய்ந் தாள். கருணுகரர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"விவரமாய்ச் சொல்லம்மா" என்ருர். இரத்தினு சொன்னுள்—ஸ்ரீதரைப் பற்றி, அவன் அன்பு இதயத்தைப் பற்றியெல்லாம் சொன்னுள். தந்தை சம்மதித்தால் ஸ்ரீதர் பெண் பார்க்கத் தன் வீட்டாரை அழைத்து வருவான் என்றும் சொன்னுள். கருணுகரர் மறுபேச்சில்லாமல் சரியென்ருர். அதன் விளைவுதான் இப்பொழுது தந்தையும் மகளும் பேயறைந்தவர் போல் சமைந்து போய் இருந்த னர்... ...

அன்று சரியாக ஐந்து மணிக்கு வாசலில் 'கார்' வந்து நின்றது. கருணுகரர் வாசலுக்கு விரைந்தார். 'கார'ருகே நின்ற இளைஞன் மேல்தான் அவர் கண்கள் முதல் விழுந் தன.

"நமஸ்காரம்" என்று கைகுவித்தான். அவன் அழ கனல்ல என்பதை முதல் பார்வையில் கருணுகரர் கண்டு கொண்டார். ஆனுல் அவன் முகத்தில் நிலவிய பாவம், கண்களில் தேங்கிய உணர்ச்சி — அது அவன் உள்ளத்தின் தன்மையோ, ஆத்மாவின் இனிமையோ என்னவோ— ஏதோ ஒரு உருத்தெரியாக் கவர்ச்சி மனதைக் கொள்ளைகொண்டது. அவனுடைய மெல்லிய உதடுகள் களங்கமற்ற மலரிதழ்போல இனிமையாய் மலர்ந்தன. பின்னுல்.....அவன் தந்தைபோலும்...... கருணுகரர் கைகூப் பிஞர்.

"வாருங்கள்! வாருங்கள்!", என்று உபசரித்தார். ஸ்ரீதர் பின்னுல் திரும்பினுன்.

"இவர் என் தாத்தா." கடைசியாக இறங்கிய கிழவர் படியேறி நிமிர்ந்தார். அந்த முகத்தை, அந்த மனிதரைக் கருணுகரர் மறக்கமுடியுமா? கருணுகரரின் இதயம் ஒரு

கணம் ஓய்ந்து, பின் மும்மடங்கு வேகத்தோடு துடிக்கலாயிற்று. கழுத்து நரம்புகள் புடைத்து இறுகி, நாவரண்டுவிட்டது. நெற்றியில் வியர்வை அரும்பியது-எல்லாம் ஒரு கணத்துள். கிழவர் முகத்தை முன்னே தள்ளிக் கூர்ந்து பார்த்தார்..படலம் படர்ந்த பூனைக் கண்களில் திடீரென்று நினைவு பிறந்தது.

"அட பாவி! கருணாகரா! நீயா? என்ன துணிச்சலடா உனக்கு! உன் பெண்ணை என் பேரன் தலையில் கட்டவா? வாடா ஸ்ரீதரா! ஆகாதடா இந்த வீட்டுச் சம்மந்தம்! வா போகலாம்!" அவர் திரும்பிய வேகத்தில் மேஜை மேலிருந்த சந்தனக் கோப்பை அவர் கைபட்டுத் தரையில் விழுந்தது......ஸ்ரீதர் திகைத்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் கிழவர் அவன் தந்தை காதில் ஏதோ குசு குசுத்தார். அவ்வளவு தான்! அவர் "வா ஸ்ரீதர்" என்று உறுமிவிட்டுக் கிழவரோடு காரில் ஏறிவிட்டார். ஸ்ரீதர் ஒரு கணம் கருணாகரருக்கு அப்பால் பார்த்தான். சுவரில் சாய்ந்தபடி நின்றாள் இரத்தினா. அவள் கண்கள் ஸ்ரீதரைக் கெஞ்சின...... ஸ்ரீதர் மெல்லத் திரும்பிக் காரில் ஏறினான். கார் உறுமிக் கொண்டு பாய்ந்தது ...... இரத்தினா நிற்கச் சக்தியற்றவள் போல் சுவரோடு சாய்ந்துவிட்டாள்.

வெளியே அந்தி நிழல்கள் நீண்டு, வளர்ந்து, தேய்ந்து கவிந்துவிட்ட் இருளில் ஒன்றி மறைந்தன. வீட்டினுள்ளும் இருள் புகுந்து பரவியது. தந்தையும் மகளும் ஒரு வார்த்தை பேசவில்லை. இடம் விட்டு அசையவில்லை. இரு இதயங்களும் அவ்விருளை வரவேற்றன. அந்த இருள் தங்கும் வரை இரத்தினாவிடமிருந்து தன் ரகசியத்தை மறைத்துவிடலாம் என்ற பைத்தியக்கார எண்ணம் கருணாகரருக்கு. உலகத்திற்கும் தனக்குமிடையே தொடர்பறுத்த அந்த இருளிலே, மாலை நடந்த நிகழ்ச்சி பயங்கரக் கனவுதான் என்று தன்னை ஏமாற்றிக் கொண்டாள் இரத்தினா. இருவரும் விளக்கை ஏற்றி அந்த இருளைக் கலைக்க விரும்பவில்லை. மூலையில் பதுங்கித் தன் காயங்

களை நக்கிக் கொடுக்கும் விலங்குபோல இருளின் மறைவிலே தத்தம் இதயத்தில் பட்ட காயத்தைத் தடவிக் கொடுக்க முயன்றன அவ்விரு உள்ளங்களும்.

வாசலில் சப்பாத்துச் சத்தம் கேட்டது.. செருமல் கேட்டது. ஆனல் மனதை எங்கோ நிலைக்க விட்ட அவ்விருவர் செவிப்புலனிலும் அச்சத்தம் ஏற வில்லை. வாசலில் நின்ற மனிதர் இரண்டு மூன்று தடவை உரத்துக் குரல் கொடுத்ததும்தான் கருணுகரர் விழித்துக் கொண்டார்.

"யாரது?" என்ருர் கருணுகரர். பெருந்தயக்கத் தோடு பதில் வந்தது.

"நான் ... ... நான்தான் ... ... ஸ்ரீதர் ... ... ... !"

"ஸ்ரீதரா?" ஏதோ விளங்காத புதிருக்கு விடை காண்பது போலத் தடுமாறிய கருணுகரரின் மனதில் திடீரென்று உணர்வு முற்ருக விழித்துக்கொண்டது. 'விறுக்' கென்று எழுந்து விளக்கை ஏற்றினுர். பளிச் சென்று பாய்ந்த ஒளியில் மூவரும் கண்களைக் கூசிக் கொண்டனர். கருணுகரர் மௌனமாக ஸ்ரீதரைப் பார்த் தவாறு நின்ருர். இரத்தினு கவிழ்ந்த தலை நிமிராமல் அவன் வந்ததை உணராதவள் போல அப்படியே இருந் தாள். ஸ்ரீதர் கருணுகரரைப் பார்த்துத் தெளிவாகப் பேசினுன்.

"மிஸ்டர் கருணுகரர், நான் இரத்தினுவை முழு மனதோடு காதலிக்கிறேன். இரத்தினுவுக்கும் எனக்கும் கல்யாணம் கனவில் கூட நடக்கக்கூடாதென் கிருர் என் தந்தை. இரத்தினுவை என் மனைவி என்ற நிலையில் வைத்து எண்ணியபின் வேறெந்தப் பெண்ணை யும் அந்நிலையில் வைத்து எண்ணுவது என் மனத் தாலும் உடலாலும் அறவே முடியாத காரியம். அதனுல் தான் உங்களைக் கேட்கிறேன் — மறைக்காமல் சொல்

லுங்கள். என் பாட்டனர் சொல்லுவது உண்மையா? உங்கள் வார்த்தையில் எங்கள் வாழ்வு தங்கியிருக்கிறது என்பதைக் கருதியாவது நடந்ததைச் சொல்வீர்களா?'' கருணுகரர் எங்கோ பார்த்தவாறு, விரக்தியோடு,

'' கந்தையாதான் சொல்லியிருப்பாரே'' என்ருர்.

'' மிஸ்டர் கருணுகரன், எந்தப் பிரச்சினைக்கும் இரண்டு வித .விளக்கங்கள் இருக்கக்கூடுமல்லவா? என் தந்தையினதும், என் பாட்டனதும் வாதத்தைக் கேட்டு விட்டேன். ஆனல் உங்கள் வாதம்தான் நியாயமான தெனப்பட்டால் இரத்தினவை நான் — இல்லை. அகாரண மாய் உங்கள் உள்ளத்தில் நான் நம்பிக்கையை வளர்க்க விரும்பவில்லை. உங்கள் கதையைக் கேட்டபின் இரத்தி-ணவை மணப்பது என் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பட்டால் இரத்தின என்னை மன்னிக்கட்டும்.'' ஸ்ரீதரின் குரல் இலேசாக நடுங்கியது.கருணுகரர் கதிரையில் மெல்ல உட்கார்ந்தார்.

''உட்காரப்பா ஸ்ரீதர். இவ்வளவு நாளும் நான் இரத்தி ணவிற்குக் கூட இதைச் சொல்லாமல் ஒளித்துவிட்டேன். ஹூம்! பெரும்பிழை செய்துவிட்டேன். என்ருே அவ ளுக்குச் சொல்லியிருக்க வேண்டும் ... ...'' அவரையும் மீறி அவர் கண்கள் இரத்தினவை நோக்கின.இரத்தினவின் ஆழக் கருவிழிகள் அவரையே வெறித்துப் பார்த்தன — வேதனை கொப்பளிக்கும் கண்கள், வெளிறி உயிரிழந்த முகம் — இரத்தினவா? ... இல்லை. இது சரோவின் முகம். இருபது ஆண்டுகளுக்கு முன் — அன்று — சரோவும் இப்படித்தான் அவரைப் பார்த்தாள். பேச்சிழந்து,ஊமை யாய் அவரைப் பார்த்தாள்— இதே வேதனைக் கண்களால் ...கருணுகரர் இதயத்தை நெருடிவிட்டார்.அவர் கண்கள். பனித்தன.

'' ஸ்ரீதர், இந்த என் மகளுக்காகத்தான் நான் என்ருே வெறுத்துவிட்ட வாழ்வை இன்னும் பற்றி நிற்கிறேன்.

இவனுக்காகத்தான் இன்று குற்றவாளிக் கூண்டில் ஏறவும் விசாரணை செய்யப்படவும் சம்மதிக்கிறேன். ஆனால்... ... ஆனால் ஸ்ரீதர் ... கடவுள் சாட்சியாக நான் ஒரு குற்றமும் செய்யவில்லையப்பா. சந்தர்ப்பவசத்தால் ஒன்று நடந்தால் நாமே அதற்கு முழுப் பொறுப்பாளிகளா? .. ஸ்ரீதர், அப்போது எனக்கு ஏழு வயது ... மனிதச் செயல்களின் காரணங்களை ஆய்ந்தறியும் பருவமல்ல. ஆனால், மனிதச் செயல்கள்,பசுமரத்தாணி போல் மனதில் பச்சையாய்ப் பதிந்துவிடும் பருவம் ... என் தந்தை உல்லாசப் பிரியர் ... ... '' கருணாகரர் கதை சொன்னாரா? இல்லையில்லை. அவர் வாழ்ந்து, முடிந்து, மறந்து விட முயன்ற நாட்களை மீண்டும் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர் ஸ்ரீதரை மறந்தார்! இரத்தினாவை மறந்தார்! தன் நா சொற்களை உருவாக்கி உதிர்க்கும் நினைவையே மறந்தார். கருணாகரருக்கு நினைவு தெரியும் பருவம் முதல் அவர் மனதில் ஒரு விஷயம் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. அது, தன் தந்தை ஆறுமுகத்துக்குத் தன் தாயைக் கண்டாலே பிடிக்காது என்பதுதான்.ஆறுமுகம் உல்லாசப்பிரியர். சிற்றின்ப உணர்வு மிகுந்தவர். அவர் மனைவியோ அதற்கு நேரெதிர். ஆனால் இதெல்லாம் இப்படி விளக்கமாகக் குழந்தை கருணாகரனுக்குப் புரியவில்லை. தன் தந்தை தாயோடு அன்பாக, இனிமையாக ஒரு நாள் கூட, ஒரு சொல் கூடப் பேசியதில்லை. அவள் மீது எரிந்து விழுவதற்கும், திட்டுவதற்கு மட்டுமே அவளோடு பேசினார். அடிக்கடி சேர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்கு வீட்டுப் பக்கமே வராது இருந்து விடுவார்என்பதுதான் அவனுக்குத் தெரிந்தது. கருணாகரனுக்கு ஒரு தங்கை, மூன்று வயதுக் குழந்தையும் இருந்தாள். மனைவியையும் மகளையும் விஷமென வெறுத்த ஆறுமுகத்திற்குக் கருணாகரன் மேலோ கொள்ளை ஆசை. "நீ அப்பன் அச்சில் வார்த்தெடுத்த பிள்ளையடா" என்று அடிக்கடி சொல்வார். கருணாகரன் உருவத்தில், முகச்சாயலில் சரியாக ஆறுமுகத்தின் மறு வார்ப்பாகவே இருந்தான். கருணாகரனுக்கு ஏழு வயது நடக்கும் பொழுது, ஒரு நாள் கருணாகரனையும் அழைத்துக்

கொண்டு ஆறுமுகம் வீட்டை விட்டு வெளியேறினர். அதன் பின் அவர் வீடு திரும்பவேயில்லை. யாழ்ப்பாண மண்ணை விட்டு வெளியேறிய ஆறுமுகமும் கருணாகரனும் மறு நாள் கருணாகரன் முன்பு போயிராத ஒரு புது வீட்டை அடைந்தனர். அங்கிருந்த ஒரு பெண்ணைக் கருணாகரனுக்கு காட்டி, "இவள்தான் இனி உன் அம்மா" என்றார் ஆறு முகம். அங்குதான் கருணாகரன் வளர்ந்து வாலிபனானான். ஆறுமுகம் இன்பத்திலே திளைத்து வாழ்ந்தாலும் கருணா கரனைக் கவனத்தோடு வளர்த்தார். கருணாகரன் படித்து 'டாக்டரா'னான். முதல் வகுப்பில் தேறிய கருணாகரனுக் குக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வேலை ஒப்புக்கொள் ளும்படி உத்தரவு வந்தது. ஆனால் வேலை ஏற்குமுன் தந்தைக்குக் கொள்ளி வைக்க வேண்டுமென்பது அவன் விதி. தன் மனைவியாய் வாழ்ந்தவளைக் காட்டி,

"என்னைத் தவிர இவளுக்கொரு நாதியுமில்லை. இந்த வீட்டையும், என்பொருளையும் இவளுக்கு எழுதிவிட் டேன். உன்னைப் படிப்பித்துவிட்டேன். கருணாகரா..." என்று கூறிக்கொண்டே ஆறுமுகம் மறைந்துவிட்டார்...

கருணாகரன் கொழும்புக்கு வந்து வேலையேற்றுக் கிட் டத்தட்ட ஒரு வருடம் ஓடிவிட்டது. ஒரு நாள் காலை, நினைவு தப்பிய நிலையில் தன் தாயை ஒரு இளம் பெண் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தாள். கருணாகரன் தான் நோயாளியைக் கவனிக்க வேண்டிநேர்ந்தது. ஆனால் ஆஸ்பத்திரியில் சேர்த்து ஒரு மணி நேரத்தில் அம் மாது நினைவு திரும்பாமலே இறந்துவிட்டாள். அந்தப் பெண்— அழகான பெண், பாவம் கண்ணீர் வரண்ட கண்களால் வெறித்துப் பார்த்தவாறு விக்கித்து நின்றாள். அவளைக் கண்டதுமுதல் கருணாகரனின் உள்ளத்திலே ஏதோ வொரு இனந்தெரியா ஏக்கம். மெல்ல அவளை விசாரிக்க லானான். அவனை மருண்ட கண்களால் பார்த்தவள், "அம்மா... அம்மாதான் எனக்கிருந்தாள்.....இப்போ ..... நான்... நான்.....ஐயோ அம்மா! ." கண்ணீர் அணையு டைத்த வெள்ளமாய்ப் பொங்கிற்று. கைக்குட்டையை வாயிலடைத்து விம்மலை அடக்கமுயன்றாள். அவள்—சரோ

ஜினிக்கு இருந்ததெல்லாம் ஒரு அம்மாதான். பயிற்றப் பட்டஆசிரியையான சரோவுக்குக் கொழும்பில் வேலை. தாயும் மகளும் விடுதியொன்றில் அறை எடுத்து இருந்து வந்தனர். இதையெல்லாம் கருணாகரன் மெல்லக் கேள்வி போட்டுஅவளிடம் கேட்டறிந்தான். சிறகொடிந்த பறவையாய்த் துடித்து நின்ற சரோவுக்குத் தாயின் ஈமக்கிரியைகளைச் செய்வதற்கான ஒழுங்குகளையெல்லாம் கருணாகரன்தான் செய்ய உதவினான். ஆனால், அதெல்லாம் நடந்து பழங்கதையான பின்பும் கருணாகரனால் சரோவை மறக்கமுடியவில்லை. சரோவின் சிவந்த மேனியழகையும், புரண்டு மிரளும் நீள்விழிகளையும், கூர்மையான நாசியையும் நினைக்க நினைக்க அவன் இதயம் பாய்ந்து துடித்தது. அந்தக் கொள்ளை அழகைத் தன்கரங்களிலே சிறைப்பிடிக்கத், தன் இதயத்தோடு அணைத்துக் கொள்ள ஏங்கினான். அடிக்கடி சரோவைச் சந்திக்கலானான். அவர்களிடையே பிறந்த பாசம், அன்பாய் இறுகி, அளப்பரும் காதலாய் மலர்ந்தது. ஊரைக் கூட்டி மேளம் கொட்டாமலே இறைவன் ஒருவனே சாட்சியும், சொந்தமும் இனமும் சனமுமாய்க் கருணாகரன் சரோவுக்குத் தாலி கட்டினான். சரோவும் கருணாகரனும் காதல் உலகிலே களித்தனர். மாதங்கள் மறைந்தன. சரோ கருவுற்றதும் கருணாகரனின் இன்பக் கிண்ணம் நிரம்பித்துளும்பியது. சரோவின் பிரசவத்திற்கு இன்னும் இரு மாதங்கள் இருக்கும்பொழுது கருணாகரனுக்கு யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு மாற்றல் உத்தரவு வந்தது.இருவரும் யாழ்ப்பாணம் வந்து ஒரு வாரத்திற்கு ஒன்றும் விசேஷமாய் நடக்கவில்லை. இருந்தும் கருணாகரன் மனதில் இனந்தெரியாத திகில் ஊடாடியது.........

அன்று 'பஸ்' ஸில் ஏறிய கருணாகரன் காலியாயிருந்த ஒரே இடத்தில் போய் அமர்ந்தான். அவனருகில் இருந்த முதியவர் -- அவர் பெயர் கந்தையா -- அவனை உற்று உற்று நோக்கினார். கந்தையா ஆறுமுகத்தின் ஊர்க்காரர். இன்னும் சொல்லப்போனால் ஆறுமுகத்தின் பக்கத்து வீட்டுக்காரர். கருணாகரனைக் கண்ட கந்தையாவுக்கு மாறாத

இளமையொடு வாலிபனுன ஆறுமுகத்தைக் கண்ட பிரமை ஏற்பட்டது. இவன் ஆறுமுகத்தின் மகன்தான் என்று அவருக்கு நிச்சயமாகப்பட்டது. அவனை விசாரிக்கலானுர். கேள்விகளும் பதில்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கருணுகரனின் தந்தையும், கந்தையாவின் நண்பரும் ஒரே ஆறுமுகம்தான் என்பது சந்தேகமற நிறுவப்பட்டது. கருணுகரனின் தங்கைக்கு வேற்றூரில் வேலை கிடைத்து மூன்று வருஷங்களுக்குமுன் தாயும் அவளும் ஊரை விட்டே போனவர்கள் இதுவரை திரும்பவில்லை என்ருர் கந்தையா. வீட்டிற்கு வந்து தன்மனைவியையும் கண்டு செல்லும்படி கந்தையாவை அழைத்தான் கருணுகரன். கதவைத்திறந்த சரோவைக் கண்டதும் கந்தையா கூவிவிட்டார்.

“ பிள்ளை ... நீயா ? ... நீயா ? தம்பி... இவள் உன்னுடைய ... மனைவியர ? ” கந்தையா குழறினுர். “ தம்பி...... இவள் உன் தங்கச்சி. உன் கூடப் பிறந்தவள்......சகோதரி! பிள்ளை, இவன் உன் அண்ணன் !...... எனக்குத் தெரியும் இவன் ஆறுமுகத்தின் மகன்...... ” வயிறும் பிள்ளையுமாய் நின்ற சரோவை ஏற இறங்கப் பார்த்தார் கந்தையா. “ சிச்சி !. என்ன அவலச்சீவியம்...... அதுக்குள்ளை பிள்ளையுங்கூட...... ” அவர் மேலும் ஒரு கணம் நிற்கவில்லை. போய் விட்டார். கருணுகரன் சரோவைப் பார்க்க முடியாதவனுய் நின்ருன். சரோ விழித்துக் கொண்டவள் போலக் கேட்டாள்,

“ உண்மையா இது ? சொல்லுங்கள் ! உண்மையா ? ” கருணுகரனின் வேதனை பாய்ந்த முகமே போதுமே பதில் சொல்ல ! ......

“ ஐயோ ! ஐயோ ! ” என்று சரோ தலையிலடித்துக் கொண்டாள்—அவர்களுக்கு வாழ்வுஒரு பாசாங்காக மாறியது. இருவரும் நடைப்பிணமாய் உலாவினர். ஒருவரையொருவர் பார்த்துப் பேசத் தயங்கினர். சரோ எதையோ எதிர்பார்ப்பது போல் நாட்களை ஓட்டினுள். ஆனுல் அவர்

கள் நினைத்ததற்கு முன்பே, நிறைமாதத் தொடக்கத்திலேயே குழந்தை— பெண் குழந்தை— பிறந்தது. பிறந்து இரண்டு வாரமிருக்கும். ஒரு நாள் காலை குழந்தையின் ஓயாத அழுகை கருணாகரனை நித்திரையினின்றும் எழுப்பியது. குழந்தையைத் தூக்கச் சென்றான். அதன் தலைப்புக்கம் அவனுக்கு விலாசமிட்ட உறையொன்று இருந்தது. கருணாகரன் அதை எடுத்துக் கொண்டு 'சரோ சரோ!' வென்று கத்தினான். வீட்டிலெங்கும் அவளில்லை. கடிதத்தை பிரித்தான்—

அன்புள்ள கணவருக்கு,

பால் குடிக்கும் கன்றினை நூறு பசுக்களிடையே அவிழ்த்து விட்டால் அது தன் தாய்ப் பசுவை உணர்ந்து அறிந்து கொள்ளும். ஆனால் தன் தாயைத் தனியே உணர்ந்தறியும் ஆற்றலற்ற மனிதக் குழவி எப்பெண்ணின் முலையிலும் பாலுண்ணும். அண்ணன் தங்கை என்ற உறவின் உணர்வற்று வெவ்வேறாய் வளர்ந்த நாம், ஆணும் பெண்ணும் என்ற நிலையில் சந்தித்த போது நம் உள்ளத்தில் காதல் மலர்ந்தது குற்றமா? இன்று நாங்கள் ஒரு தாயின் குழந்தைகள் என்று சொல்லி விட்டால் நீங்கள் என் கழுத்தில் கட்டிய தாலியை மறந்து விடமுடியுமா? என் கருவிலே நான் காத்துப் பெற்றெடுத்த உங்கள் குழந்தையை இல்லையென்று விட முடியுமா? நாம் தம்பதிகள் என்பதை மறந்து சகோதரர்களாகிவிட முடியுமா? இல்லை நீங்கள் என் கணவர் என்ற உணர்வு தேயவில்லை. என் காதல் அழியவில்லை. ஆனால் சமூகமும் அதன் நீதியும் நியாயங்களும் இனி எங்களை இணைந்து வாழவிடா. எங்கள் குழந்தை தாயையும் தந்தையையும் பெறும்பாக்கியம் அற்றது. எங்கள் செல்வத்தை எங்கள் வாழ்க்கையின் கறையே படியாது வளர்த்துவிடுங்கள்............ அத்தான், உங்களோடு வாழத் துடிக்கிறது என் இதயம். ஆனால் இந்த சமூகத்திலே, உலகிலே நாம் வாழ வழி

யில்லை. நான் சாகத்துணிந்து விட்டேன்... எனக்கு வேறு வழி தெரியவில்லை.

உங்கள்
சரோ.

"சரோ! சரோ!" கருணுகரர் துடித்தார். அக்கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அன்றுபோல் இன்றும், இப்பொழுதும் அவர் கண்முன் தோன்றின. உணர்ச்சி வேகத்தில் பேசி வந்தவர் மௌனத்தில் ஆழ்ந்தார். இரத்திஞ சிலையாய் அவரைப் பார்த்திருந்தாள்... ... ...

"அவள் விருப்பப்படியே செய்தேன் ஸ்ரீதர் ...... ...... அதன்பின் யாழ்ப்பாணமே நான் செல்லவில்லை. ஆனல் விதி கந்தையாவின் உருவில் இரத்திஞவையும் தொடரும் என்று சரோ அறிந்திருப்பாளோ?"

ஸ்ரீதர் நிமிர்ந்தான்.

"அப்படியானல் தாத்தா சொன்னது அத்தனையும் உண்மைதான்!"

"உண்மைதான் ஸ்ரீதர் ...... ஆனல் நாம் என்ன செய்வோம்? ......"

"என் பாட்டனுருக்கு மட்டுமல்ல, இன்னும் பலருக்கு உங்கள் சரித்திரம் தெரியும். உங்கள் மகளை நான் மணந்தால் உங்கள் பாபத்தின் நிழல் என் மீதும் படியும். சமூகத்திலே என் அந்தஸ்து, மரியாதை எல்லாம் பறந்துவிடும். என் எதிர்காலமே பாழாகி விடும். ...... சமூகத்தை எதிர்த்து வாழும் நிலை எனக்கு வந்துவிடும் ...... ...... நண்பரையிழந்து, நிம்மதியிழந்து ...... ...... இல்லை, தயவு செய்து என்னை ...... ...... மன்னித்துவிடுங்கள் ...... ......" ஸ்ரீதர் எழுந்து வாசலைக் கடந்தான்.

" அப்பா ! அப்பா ! " உடைந்த இதயத்தின் மரணத் துடிப்பாய் எழுந்தது அக்குரல்! ஸ்ரீதர் திரும்பினான். முகத்தை முழங்காலில் கவிழ்த்து இரத்தினா விம்மிக் கொண்டிருந்தாள். கண்களில் நீர் பெருக்கும் கருணாகரர்! ......தனிமைப்பட்ட இதயங்கள் இரண்டு......சமூகத்தின்வேலிக்கு அப்பால் நிற்கும் இதயங்கள்—அவை செய்த பிழையென்ன ? ஒன்றுமில்லை. இதில் பரிதாபம் என்னவென்றால் அவை செய்த குற்றம் ஒன்றுமேயில்லை. இரத்தினா— இன்றலர்ந்த மலர். கருணாகரர் இறந்து விட்டால் ...... அவள் துணையற்று, வாழ்வில் பொருளற்று என்ன செய்வாள் ? ...... தன் தாயைப் போலவே ...... அவளும் —

" இரத்தினா ! இரத்தினா ! " என்று குழறியவாறு ஸ்ரீதர் பாய்ந்து சென்று அவளருகே மண்டியிட்டு, அவள் முகத்தை நிமிர்த்தித் தன் தோளில் சாய்த்துக்கொண்டான்.

" வேண்டாம் இரத்தினா! அழாதே! நானிருக்கிறேன் உனக்கு. இதோ, நானிருக்கிறேன் உனக்கு ! " மெல்ல அவள் முதுகைத் தடவிக் கொடுத்தான்...... " உன்னை விட்டுப் போகமாட்டேன் இரத்தினா, அழாதே ! "

( 17 - 12 - 1961 )



# வாழ்வது எதற்காக ?

"செல்வி ! அச்சகத்திலிருந்து அழைப்பிதழ்கள் வந்து விட்டன. இதோ பார் ! ...... ......" சொல்லிக்கொண்டே அறையில் நுழைந்த சந்திரன் திகைத்து நின்றான். வெளிறிய முகத்தோடு செல்வி படுக்கையில் துவண்டு கிடந்தாள். பக்கத்தில் அவள் தாய் — சந்திரனின் மாமி செல்லம்மாள் அச்சத்தோடு இருந்தாள்.

"ஐயோ தம்பி, ஐந்து நிமிஷத்திற்கு முன் திடீரென்று மயங்கி விழுந்து விட்டாள். மயக்கம் தெளிந்த பிறகும் இரத்த ஓட்டமில்லாமல் முகம் ஒரேயடியாய் வெளிறிக் கிடக்குது. உடம்பு பச்சைத் தண்ணியாய்க் குளிருது. உன்னையும் காணாமல் நான் தவிச்சுப் போனேன். என்ன தம்பி செய்ய ? .. " என்று பிரலாபித்தாள் செல்லம்மாள். சந்திரனின் உணர்வற்ற விரல்களிலிருந்து அழைப்பிதழ் நழுவி விழுந்தது. அவன் செல்வியை ஒரு கணம் உற்றுப் பார்த்தான். செல்வி எப்பொழுதுமே ஒல்லியாக, ஒடிசலாகத்தான் இருந்தாள். ஆனால் இப்பொழுது மெலிந்து, பலஹீனமாய் அவள் உருவம் அச்சமூட்டியது.

"டாக்டரிடம் கூட்டிப்போகிறேன், மாமி. இதோ 'டாக்ஸி' பிடித்துக் கொண்டுவருகிறேன். அவளைத் தயார்ப்படுத்து."

செல்வியை டாக்டர் சோதிக்கும் வரை சந்திரனின் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. இன்னுமொரு மாதத்தில் செல்விக்குக் கல்யாணம். அது நடந்துவிட்

டால் அதன் பின் சந்திரன் தன் கல்யாணத்தைப் பற்றி நினைக்கலாமே! கலா அவனுக்காக எத்தனை காலம் காத்திருப்பாள்? அதற்கிடையில் செல்விக்கு என்ன நேர்ந்து விட்டது? பழிவாங்குவதுபோல் டாக்டர் நெடுநேரமாகச் சோதிக்கிருரே, என்றெல்லாம் சந்திரனின் உள்ளம் அடித்துக்கொண்டது. டாக்டர் ஒரு படியாக வெளிப் பட்டார். அவனைத் தனியே தம் அலுவல் அறைக்கு அழைத்துச் சென்ருர்.

"மிஸ்டர் சந்திரன், நான் சொல்லவிருக்கும் விஷயம் உங்களுக்கு வேதனையளிக்கப்போகிறது. மனதைத் திடப் படுத்திக்கொள்ளுங்கள். செல்விக்குள்ள வியாதியைக் குணப்படுத்தவே முடியாது. அவள் இன்னும் அதிக காலம் உயிர் வாழமாட்டாள் ..."

"டாக்டர்!" சந்திரன் துடித்தான்.

"சந்திரன், இந்த விஷயத்தில் எதையும் மறைக்காது கூறுவதே என் கடமை. செல்வி கூடியது ஆறு மாதந் தான் உயிரோடிருப்பாள். அதுவும் அவள் உள்ளத்திற்கு எவ்வித அதிர்ச்சியும் ஏற்படாது பூரண அமைதியோடு வாழ்ந்தால்தான். எதற்கும் நீங்கள் வேறு டாக்டர்களின் கருத்தை அறிதலும் நன்று. ஆனுல் இதை மட்டும் அசட்டை செய்யாதீர்கள் — அவள் சிறிது காலமாவது வாழ வேண்டுமென்ருல் அவள் மனைவியாக வாழவே கூடாது!"

"டாக்டர், இதை எப்படி நான் அவளிடம் சொல்வேன்?"

"அப்படியே சொல்லிவிடக்கூடாது, சந்திரன். அதுவே பெரிய அதிர்ச்சியாகிவிடும். ஆனுல் ஓரளவுக்கு உண்மையைக் கூறுதல் நம் கடமை. அவள் இருதயம் மிகப் பலவீனமாயிருப்பதால் சாதாரண வாழ்க்கை நடத்துதல் உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்றும் கவனமெடுத்தால்

இரண்டொரு வருடங்கள் வாழக்கூடும் என்றும் விஷயத்தைப் படிப்படியாகச்சொல்லுங்கள்.''

சந்திரன் எப்படியோ விஷயத்தைச் சொல்லிவிட்டான். கண்ணீர் பெருக நெஞ்சை அழுத்தியபடி செல்லம்மாள் சுவரோடு சாய்ந்துவிட்டாள். செல்விக்குச் சிந்திக்கும் திறனே செத்துவிட்டதுபோல் தோன்றியது. ''நான் சீக்கிரம் செத்துப் போவேன், நான் சீக்கிரம் செத்துப்போவேன்''என்றுமுணுமுணுத்துக்கொண்டாள். பெரும் விம்மல்கள் அவளின் மெலிந்த உடலைக் கீறிப் பிளந்தன.

''செல்வி, வீணாக அழாதே. அப்படியென்ன நடந்து விட்டது? கொஞ்சம் கவனமாக இருந்தால் எல்லாம் சரியாகிவிடும்.''

''அத்தான் வாழ்க்கையின் தலைவாயிலில் நின்ற நான் இமைப்பொழுதில் சாவின் கடையோரத்திற்கு வந்துவிட்டேன். மரணதண்டனை விதிக்கப்பட்டவனுக்குத் தவணையிட்டு அவனைத் தூக்கிலிடுதல் போல் நானும் சாவை எதிர்நோக்கிச் சாகாமல் சாகத் தவணை அளித்துவிட்டார்கள். நிமிடங்களை,விநாடிகளை, ஒவ்வொன்ருக எண்ணி எண்ணிச் சாவதைவிட நான் ஒரேயடியாக இக்கணமே செத்துவிடக்கூடாதா? நான் மணமற்ற மலராய், நடைப்பிணமாய் வாழ்வது உண்மையில் வாழ்வதாகுமா அத்தான்?'' சந்திரன் என்ன பதில் சொல்வான்? பேசாமல் வெளியேறினான். அவனுக்குச் சிந்திக்க அவகாசம் தேவைப்பட்டது. செல்வியின் கல்யாணமோ இனி நடக்காது. ஆனால் இனித்தான் செல்வியின் மனம் பன்மடங்கு ஆவலோடு, ஆசையோடு வாழத்துடிக்கும். இனித்தான் அபரிமிதமான அன்புக்கும் ஆதரவுக்கும் அவள் உள்ளம் தவிக்கும். செல்வியை வாழ்விப்பதற்கான ஒரு வழி அவன் உள்ளத்தில் உருவெடுத்தது. வெகு நேரமாகச் சந்திரன் யோசனையில்

ஆழ்ந்திருந்தான். பிறகு விழித்துக் கொண்டவன்போல் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்து மணியாகிவிட்டது. கலா அவனுக்காகக் காத்திருப்பாள். கலாவை நினைத்த மாத்திரத்தில் அவன் உள்ளத்தில் இன்பச் சிலிர்ப்பு ஏற்பட்டது. கலா அவனைக் கண்டதும் உதட்டைக்கோணி அழகு காட்டினுள். சந்திரன் சிரிக்க முயன்றான்

" என்ன கலா, வெகு கோபமா ? " என்று கேட்ட அவன் முகத்தைச் சிறிது நேரம் உற்றுக் கவனித்த கலா,

" என் கோபம் கிடக்கட்டும். உங்கள் மனதில் ஏதோ கவலையிருக்கிறது. முதலில் அதைச் சொல்லுங்கள்" என்றாள். சந்திரன் பெருமூச்சுவிட்டான். பிறகு செல்வியைப் பற்றிக் கலாவுக்குச் சொன்னுன். கலா தன் கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்தாள்.

" பாவம் செல்வி, என்ன வேதனைப்படுகிருளோ ?", என்றாள் கலா.

" கலா அவள் தன் வேதனையைச் சொல்லவும் முடியாமல், மறைக்கவும் முடியாமல் படும்பாடும், அவளைத் தேற்ற முடியாமல் மாமியும் நானும் படும்பாடும் சகிக்கமுடியவில்லை. அவள் வாழ்வதற்கு இன்னும் ஆறு மாதங்கள்தான் இருக்கின்றன. அவள் சந்தோஷமாக, அமைதியோடு வாழவேண்டிய ஆறு மாதங்களும் அவள் கண்ணீரிலே கரைந்து விடும் போலிருக்கிறது. எப்படியாவது அவள் உள்ளத்திலே இன்பம் மலரச் செய்ய வேண்டும் கலா ! "

" அதெப்படி முடியும் சந்திரன் ? மணவாழ்வைப் பற்றி எத்தனை இன்பக் கனவுகள் கண்டாளோ ? அவளைப் பொறுத்த மட்டில் அவை இனி என்றுமே கைகூடாக் கனவுகள்தான் என்றாகிவிட்டபோது அவள் இதயத்தில் இன்பம் மலருமா ? பயங்கர எதிர்காலம் அவளுக்குத் தரவிருக்கும் ஒரே வரிசை நெருங்கிவிட்ட சாவுதான்

என்று தெரிந்தபின் அவள் உள்ளத்தில் சந்தோஷம் தோன்றுமா ?" சந்திரன் தயங்கினன்.

" அதற்கு ... ஒரு வழியிருக்கிறது கலா. அவளுக்கு மணம்முடித்துவிட வேண்டும். ஆனல் அவளை மணப்பவன் உள்ளத்தால் மட்டுமே அவளுக்குக் கணவனய் இருக் கலாமேயொழிய உடலால் அல்ல. அவள் கன்னியாகவே இருக்கவேண்டும். ......"

" அது சாத்தியமா, சந்திரன் ?" அவநம்பிக்கை யோடு சொன்னள்.

" கலா, ... ஒருவன் ... ஒருவன் அப்படி வாழத்தயா ராயிருக்கிருன் ... ...",
சந்திரன் மென்று விழுங்கினன் " ஆனல் ... ஆனல் அதற்கு உன் அனுமதி வேண்டும் ——"

" என் அனுமதியா ? புதிர் போடுகிறீர்களே சந்தி ரன் ? " கலா நெற்றியைச் சுருக்கினள்.

"கலா, அவள் — செல்வி, அதிக நாள் உயிர்வாழ மாட்டாள். அவளை நான் மணந்துகொண்டால்—— "

" சந்திரன் ! என்ன ! நீங்கள் அவளைமணக்கவா ? நீங் களா ?அப்போ என் கதி ? "

" பொறு கலா. தன் கைக்கெட்டி வாய்க்கெட்டு முன் நழுவிவிட்ட வாழ்வை எண்ணிச் செல்வி ஏங்கு கிருள். செல்வி மறைந்து மண்ணுகிவிட்ட பின்பும் நாம் வாழ்ந்து கொண்டுதானிருப்போம். ஆனல் அவளை நான் மணந்தால் அவள் உள்ள நிறைவோடு உயிர் துறப் பாள். அவள் உள்ளத்தின் நிறைவு உன் துயரத்தைத் துடைத்துவிடும். அதன் பின்பும் நீ என்னை ஏற்றுக் கொண்டால், எனக்காகக் காத்திருந்தால ... ... " கலா சீறினள்.

" அவளுக்கு உங்களைத் தாரைவார்த்துவிடச் சொல் கிறீர்களா என்னை ? நீங்கள் அவளோடு வாழ்ந்து

கொண்டிருக்க, நான் உங்களுக்காக வாழாமல் இருப்பதா? நல்ல நியாயம் சந்திரன்! ஒரு நாளும் முடியாது!"

"அவளும் ஒரு பெண்தானே கலா, உன்னைப் போல?......"

"ஏன், நானும் ஒரு பெண்தானே? அவளைப்போல எனக்கு மட்டும் வாழவேண்டுமென்ற துடிப்பில்லையா? நான், என் உள்ளம் முழுவதாலும் காதலிப்பவரான நீங்கள், இன்னொரு பெண்ணைத் தொட்டு மணப்பதை என் இதயம் எப்படி ஏற்றுக்கொள்ளும், சந்திரன்?"

"நான் மட்டும் உன்னைக் காதலிக்கவில்லையா? உன்னிடத்திலே அவளை வைப்பதில் நான் இன்பம் காண்கிறேன் என்று நினைக்கிறாயா? கலா, உன்னை நான் சந்தித்திராவிட்டால் அவளைத்தான் மணந்திருப்பேன். ஆனால் அவளை மணப்பதானால் அதையொரு கடமையெனக் கருதிச் செய்கிறேனேயொழிய இன்பமெனக் கருதிச் செய்யவில்லை. ஆனால் நான் உன் உடமை கலா. நீ அனுமதிக்காவிட்டால் நான் அவளை மணக்கமாட்டேன்", என்றான்.

"அடடா! நான் ஏன் வேண்டாமென்கிறேன்? உங்கள் விருப்பப்படியே நடந்து கொள்ளுங்கள். ஆனால் இதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்காக நான் ஒரு நாளும் காத்திருக்கப்போவதில்லை. இன்றோடு என்னை மறந்துவிடுங்கள்!" சொற்களைக் கக்கிய கலா அதற்கு மேலும் அங்கு நிற்கவில்லை.

●

சந்திரன் ஏதோ இயந்திரம்போல் இயங்கினான். கலாவை இழந்துவிட்டோம் என்ற நினைவு அவனைப் பித்தாக்கியது. செல்வியோ சரியாகச் சாப்பிடுவதில்லை. மணிக்கணக்காகச் சூன்ய வெளியை வெறித்துப் பார்த்தபடியே உட்கார்ந்

திருப்பாள். சந்திரன் மூழ்கவும் முடியாமல் மிதக்கவும் முடியாமல் தத்தளித்தான். கலாவைச் சந்தித்து ஒரு நீண்ட வாரம் கழிந்துவிட்டது. அன்று மாலை காரியாலயத்தை விட்டு வெளியேறிய சந்திரன் தனக்காகக் காத்து நின்ற கலாவைக் கண்டதும் பேச்சிழந்து நின்றான்.

" கலா நீயா ? " என்று அவன் உதடுகள் குவிந்தன. கலா வேதனையோடு சிரித்தாள்.

" நானேதான். சந்திரன். அன்று ஆத்திரத்தில் கூறியவற்றை மறந்துவிடுங்கள். உங்கள் மேலுள்ள அளவற்ற அன்புதான் அப்படியெல்லாம் பேசச்செய்தது. ஆனால் அன்று என்னை மட்டும் பொருட்டாக நினைத்ததால்தான் அப்படிப் பேசினேன். அதனால்தான், உள்ளத்தளவில் மட்டுமே செல்வியின் கணவனாய் வாழமுடியும் என்று தெரிந்தும், உங்கள் உணர்ச்சிகளை அடக்கி அவளுக்கு நிறைவளிக்க முன்வந்த உங்களின் தியாகம் எனக்குத் தெரியவில்லை. வாழ்வில் உள்ளதையெல்லாம் இழந்து நிற்கும் ஒரு பேதைப் பெண்ணுக்கு இரங்கும் மனிதத்தன்மையை இழந்தேன் — "

" இல்லை கலா ! இல்லவேயில்லை ! நான்தான் உன்னைக் கேட்கக் கூடாததைக் கேட்டேன். " கலா கவனியாதது போல் மேலே பேசினாள்.

" நான் உங்களை இல்லாவிடில் இன்னொருவரை மணந்து வாழ முடியும். ஆனால் செல்விக்காக இப்படித் தியாகஞ்செய்ய உங்களைப்போல இன்னொருவர் கிடைக்கமாட்டார். சந்திரன் , நீங்கள் செல்வியை மணந்து அவளை வாழ்வியுங்கள். நான் ... நான் காத்திருக்கிறேன் சந்திரன் ... " சந்திரனுக்கு இது கனவோ என்றபிரமை.

" கலா! உண்மையாகவா கலா? இல்லை. வேண்டாம், நீ இப்படியொரு தியாகத்தால் உன்னையே பலிகொடுக்காதே கலா. உன் ஆசாபாசங்களை அழிக்காதே. டாக்டர் சொன்னார், சில சமயம் செல்வி பல வருடங்கள் வாழக்கூடும்! ... "

" அதுவரை என்னை அடியோடு மறந்து செல்வியை வாழ்வியுங்கள் சந்திரன். நான் ... நான் எத்தனை காலமானாலும் உங்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்." கலாவின் கண்களிலே நீர் நிறைந்தது. இருந்தும் அவள் துடிக்கும் உதடுகளால் சிரிக்க முயன்றாள்.

(14-1-62)



# பிரார்த்தனை

நடராஜ விக்கிரகத்தின் முன் குத்துவிளக்குச் சுடர் விட்டது. சுமதி தரையிலே மண்டியிட்டுக் கைகூப்பிக் கண்மூடி, ஓசையெழுப்பாது, உதடு ஓயாது பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள்! உலகை மறந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்! இதில் பிரமாதம் என்ன என்று கேட்கிறீர்களா? இதில் அதிசயம் என்னவென்றால் சுமதி கடைசியாகக் கடவுளை நினைத்தே பத்து வருஷம் இருக்குமே! அப்படியானால் கடவுள் என்ற கற்பனையில் அவளுக்குத் திடீரென்று நம்பிக்கை மீண்டும் பொங்கியெழக் காரணம்? ... ...

அந்தச் சிறிய அறையில், சுமதிக்குச் சிறிது தூரத்தில், படுக்கையில் ஒரு கிழம் கட்டைபோல் கிடந்தது. உற்று நோக்கினால் நூலிழை அளவு எழுந்து எழுந்து படியும் மார்புக்கூடு உடலில் இன்னும் உயிர் ஒட்டியிருப்பதை அறிவித்தது. சதை வடிந்து கோதான உடல், கிடங்குக் கண்கள், குழிக் கன்னங்கள், ஆவெனத் திறந்த பொக்கை வாய் — சவக்களை தட்டிவிட்டதே! இந்தப் பரிதாப ஜீவனுக்காகவா சுமதி நெஞ்சுருக வேண்டுகிறாள்? தந்தை யென்ற பாசத்தவிப்பா அவள் என்றோ நம்பிக்கையிழந்து விட்ட கடவுளைக்கூட நாடச் செய்கிறது? சேச்சே! இது அவள் கணவனல்லவா? ஆமாம் வாடாத இளமை உருவமான, பருவப் பாவையான சுமதியின் கணவனே தான்! இந்த அழுகி, உளுத்த உருவமேதான் அவள் கணவன்! ...... ...... ......

பத்து வருஷங்களுக்கு முன் — சுமதிக்குப் பதினெட்டு வயது. கறையான் புற்றுப் போன்ற 'வீட்டில்' ஈசல் போலப் பொலபொலத்த ராமசாமியின் எட்டுக் குழந்தைகளுள் "புரொடக்ஷன் நெம்பர் 1" தான் சுமதி. ராமசாமி மூன்று பிள்ளைகளை ஒரளவாவது படிக்க வைக்க வேண்டுமென்றதனால் சுமதியும் தங்கைகளும் பள்ளிக்கூட வாசல் மிதிக்கவில்லை. சுமதி வளர்ந்தாள். வயிறு காய்ந்தாலும் சுமதியின் உடல் ஏனோ காயவில்லை. வாழ்வு செழிக்கவில்லையென்றாலும் அவள் உடல் செழித்தது. சுமதியின் முகத்தில் காவியக் கன்னியரின் அழகில்லை. ஆனால் அதில் பெண்மையின் தனியழகும், இதழவிழும் மலரின் இனிமையும் மிளிர்ந்தன. வார்த்தெடுத்தாற் போன்ற திரண்ட, மிருதுவான அங்கங்கள், இயற்கையாகவே மதர்த்தெழுந்த இளமார்புகள், பருவத்தால் செழித்த உடல் — ஆடவனின் இதயத்தைச் சுண்டியிழுக்கும் தரம் வாய்ந்தன. சுமதிக்கு உடையின் எளிமை உடலின் வனப்பைமேலும் சோபிதமாய் எடுத்துக்காட்டியது. பக்கத்து வீட்டில் சேகரும் அவன் தாயாரும் வசித்து வந்தார்கள். சேகருக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலை. ஏழு, எட்டு மைல்தான். தினமும் சொந்தக் காரில் போய் வருவான். அவர்கள் வீட்டுக் கிணற்றில்தான் நெடுகச் சுமதி வீட்டாரும் புழங்கி வந்தார்கள். கொல்லை வேலியில் 'பொட்டு' வைத்து அது வழியேதான் போய் வருவார்கள். பொழுது புலரச் சுமதி குடமும் கையுமாகக் கிணற்றை அடையச் சேகரும் 'பிரஷ்' ஷும் கையுமாக வரச் சரியாயிருக்கும். ஒரே கிணற்றடியில் புழங்கியும் அவர்கள் பேசிக்கொண்ட சந்தர்ப்பங்களை விரல் விட்டு எண்ணலாம். சேகர் கண்களில் ஒருவித வேகத்தோடு சுமதியின் ஒவ்வொரு அசைவையும், உடலின் ஒய்யார வனப்பையும் பார்த்தபடியே பல் துலக்கி நிற்பான். அந்தப் பார்வையின் தன்மையை உணர்ந்த சுமதி இயன்றளவு கிணற்றடியில் தாமதிப்பாள். சில சமயம் அவர்கள் பார்வை சந்திப்பதுண்டு—சேகரின் பார்வை......அப்பப்பா! ... சுமதியின் உடல் புல்லரிக்கும்! தினம் தவறாது சமயம்

வாய்த்த போதெல்லாம் நடக்கும் நாடகம் தானிது. எதனுல் இப்படி? இருவருக்குமிடையில் காதலா? இல்லை. காதலென்றில்லை. பருவத்தின் கவர்ச்சிதான். சேகரைத் தன் கணவனுகச் சுமதி கருதியதில்லை. ஆனுல் அவன் ஆண்மை அவள் பெண்மையை நெருடியது. இந்தப் பருவ விழிப்பு, உணர்ச்சியனுபவம் சுமதியின் மனதில் கனவுகளை எழுப்பிவிட்டது. சுமதி மணவாழ்வைப்பற்றி, வரப் போகும் மணுளனைப்பற்றி இனிய நினைவுகளில் திளைத்தாள். பேரழகனை, அந்தஸ்துள்ளவனை, 'அரசகுமார'னை மணக்க வேண்டுமென்று அவள் பேராசைப்படவில்லை. அரை வயிற்றுச் சாப்பாட்டில் வாழ்பவள் அவ்வளவு தூரம் உலகானுபவம் அற்றவளாகிவிடவில்லை. சேகரைப் போன்றவர்கள் சுமதியின் உலகத்தவர்களல்லவே! குழந்தை சுமதி என்றே மங்கையாகிவிட்டாள். அவள் உணர்ச்சிகள் முதிர்ந்து விட்டன; உடலும் உள்ளமும் துணைதேடின — இயற்கையின் நியதி அது. சுமதி மணக்க விரும்பினுள்.... .. வாட்டசாட்டமானவனுய் ... ஒரு வாலிபனை ... ... ...

சுமதி மணக்கவேண்டும் — சமூகத்தின் நியதி அது. இப்படித்தான் அவளைப் பெற்றவரும் நினைத்தார். ஆனுல் நினைத்தவுடன் செயற்படும் காரியமா இது? நூறு ரூபாய் சம்பளம் வாங்குபவனும் இன்று ஆயிரம் என்று சீதனம் கேட்கிறுனே! சுமதிக்கு வயது பதினெட்டுத்தானே, அவசரம் எதற்கு என்று நினைத்தால் அவள் உடலின் வளர்ச்சி அவரை விரட்டி விரட்டி அடித்தது. வயது வந்த பெண்ணை வீட்டோடு வைத்திருந்தால் ஊர் அபவாதத்திற்குப் பயப்படவேண்டும். ராமசாமி வழியறியாது திணறிக்கொண்டிருக்கும்பொழுதுதான் அந்த நற்செய்தி அவர் காதிலும் விழுந்தது. சபாபதி தமக்குப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாராம்! சபாபதி ஏற்கனவே இருதாரங்களைச் சுடலைக்கு அனுப்பி வைத்த புண்ணியவான். வயது நிச்சயம் அறுபதுக்குக் குறையாது. மேலும் தாமதிக்காது ராம்சாமி போய்ச் சபாபதியைக் கண்டார். அன்று வீடு

திரும்பியபோது ராமசாமி ஏதோ பெருஞ்சுமையை இறக்கிவிட்ட தென்போடு வந்தார்.

" சுமதிக்குக் கல்யாணம் நிச்சயம் செய்துவிட்டேன்! " அவர் மனைவி படபடத்தாள்.

" நிச்சயம் செய்துவிட்டீர்களா? பையன் யார்? சீதனம்? ..." திடீரென்று ராமசாமிக்குத் தயக்கம் ஏற்பட்டது. மென்று விழுங்கினார். ...

" சீதனமே வேண்டாமாம்! நாம் நினைத்துப்பார்க்க முடியாத இடம் ... சுமதி அதிர்ஷ்டசாலிதான்! இங்கிருந்ததைவிட நன்றாக வாழுவாள். மாப்பிள்ளையின் வயது தான் கொஞ்சம் அதிகம்.. ஒன்றும் பிரமாதமல்ல! ஐம்பதுக்கு மேலிருக்காது ... ... ..." அவர் குரல் குழப்பத்துடன் தேய்ந்து, ஒடுங்கி ஒருவித விபரீத அமைதி நிலவியது... சுமதி? சுமதி சிரிக்கத் தொடங்கினாள். திடீரென்று அடக்கமுடியாது, கட்டற்றுக் கலகலவென்று சிரித்தாள்.

" அப்பா! நல்ல வேடிக்கை! ஐம்பது வயதுப் பாட்டனுக்கும் பதினெட்டு வயதுப் பேத்திக்கும் கல்யாணமாம்! நல்ல லட்சணமான வரன் பார்த்தீர்கள், போங்கள்! "

" பின்னே, உன்னை இருபது வயது இளைஞன் கட்டிக் கொள்வான் என்று நப்பாசையா? உன்னைச் சுமந்து கொண்டு ஊர் அபவாதத்தையும் என்னால் சுமக்க முடியாது. உனக்குப்பின் நாலு பெண்கள் இருக்கிறார்கள்! " குத்தலாகப் பேசினார் ராமசாமி

" சுமக்க முடியாதவர் ஏன் குழந்தைகளைப் பெற வேண்டுமோ? " முணுமுணுத்தாள் சுமதி.

“என்ன சொன்னாய்?” கர்ஜித்துக்கொண்டு பாய்ந்தார் ராமசாமி.

“ஒன்றுமில்லை அப்பா!” மழுப்பினாள் பீதியுடன். பளார்! பளார்! சுமதியின் இரண்டு கன்னங்களும் தெறித்தன!... எழுந்த வேகத்துடன் ராமசாமியின் சினம் வடிந்தது. சிச்சீ! துப்புக்கெட்டவர்! அவள் சொன்னதில் பிழையென்ன? பாவம் சுமதி, பதினெட்டு வயது மங்கை! அவளுக்கு இருக்காதா ஆசைகள்? அவளைப் பலியாடாக்கித் தமது கையாலாகாதனத்திற்கும் அவளைப் பழி வாங்குவதா? ...

அன்று முதல் சுமதிக்கு வாழ்க்கை முடிவில்லாத துர்சொப்பனமாக மாறிவிட்டது. முதற் திகைப்பு மாறியதும் சுமதி துடித்தாள்! கண்ணீர் வடித்தாள்! கதறினாள். ஆனால் விரைவில் அவள் கண்ணீர் வற்றிவிட்டது. சபாபதியின் நினைவு, அவர் கிழட்டு முகம் அவளை விநாடி விநாடியாக வதைத்தது. எண்ணி எண்ணி ஓய்ந்துவிட்ட சுமதிக்கு ஒரேயொரு வழிதான் புலப்பட்டது, கசந்து வெறுத்து விட்ட அவள் மனதிற்கு மரணம் ஒன்றுதான் மருந்தாகத் தோன்றியது. இரவில் தூங்கலாம், ஒரு சில மணி நேரம் தன்னை, உலகத்தை மறக்கலாம் என்று நினைத்தால், அப்பொழுதுதான், உலகமே உறங்கிவிட்ட தனிமையில்தான் அவளை எதிர்பார்த்து நின்ற வாழ்வின் பயங்கரம் விஸ்வரூபம் எடுக்கும். மன உளைச்சல் அவளை விரட்டும். எத்தனையோ தடவை எல்லாரும் உறங்கியதும் எழுந்து கிணற்றடிக்குப் போயிருக்கிறாள். ஆனால் வாழ வேண்டும் என்ற துடிப்பு எளிதில் சாகாது. கிணற்றுக் கட்டில் நின்று கீழே கீழே அடியற்ற ஆழத்தை, அதல பாதாளத்தைப் பார்த்தவுடன் சாகவேண்டுமென்ற வேகம் வடிந்துவிடும். அவசரமாகப் பின்வாங்குவாள். சாவுக்குப் பின்வருவதை அறியாத தன்மைதான் வாழ்வைப் பிடிவிடாததற்குக் காரணமோ? அசாத்திய நெருக்கடியிலும் மனித உள்ளத்தில் ஒட்டி ஊசலாடும் நம்

பிக்கைதான் காரணமோ? எப்படியாவது இந்தக் கல்யாணம் நடக்காமல் நின்றுவிடக்கூடுமென்ற நப்பாசையோ ? ..... ..... நிலைமை மீறினல் கிணறு இருக்கத்தான் செய்கிறதே!...

ஆனல் சுமதி சாகவில்லை. கல்யாணமும் நடக்கத்-தான் செய்தது. அப்படியானல் அதற்குப்பின்னும் சுமதி வாழவேண்டிய காரணம்? என்ருவது, எப்படியாவது அந்தப் பயங்கர வாழ்விலிருந்து விடுதலை கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையா ? ஆமாம், அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. பத்து வருஷங்களாகக் காணுத விடுதலை, கனவாகிவிட்ட விடுதலை, இதோ, கிடைக்கப்போகின்றது. சபாபதி மரண வாசலில் நிற்கிருர். அவர் பிழைப்பது துர்லபம். இதற்காகத்தானே சுமதி காத்திருந்தாள்? நாட்களை, நிமிடங்களை எண்ணிக்கொண்டிருந்தாள்! சந்தோஷப்படவேண்டிய சுமதி மனமொன்றி இறைவனை இறைஞ்சுகிருளே, ஏன் ? தன்னை விடுவிக்கப் போகும் விதியைத் தடுக்கவா ? மரணத்தை வெல்லவா ? அவள் மனதிலே இந்தத்திருப்பம் ஏற்படக் காரணம்? அவள் கழுத்தில் மின்னும் மாங்கல்யத்தின் மகிமையா ? இதனைத்தான் கற்பு என்பார்களோ ? தோல் சுருங்கித் தசை தொய்ந்த கூடு என்ருலும் அவள் கணவன் என்ற தனுலா ? ... ... ...

சேச்சே! இருக்கமுடியாது! பத்து நீண்ட வருடங்களின் நரகானுபவத்தைச் சுமதி மறந்துவிட்டாளா ? உடலின் தேவையொடு உணர்ச்சியின் தாகத்தொடு போராடியதை மறந்துவிட்டாளா? இந்த மனிதப்பேய் இன்னமும் வாழவேண்டும் என விரும்புகிருளா ? அந்த நாட்களில் தான் சேகர் அவள் மனதில் சதா தோன்றிக்கொண்டிருந்தான். சுமதி சேகர்மேல் காதல் கொண்டாளென்ருல் அப்பொழுதுதான் என்று சொல்லலாம். காதலா அல்லது சேகர் குறித்து நின்ற இன்பத்திற்கும் வாழ்விற்கும் கொண்ட தாபமா? எவ்வளவுக்கெவ்வளவு சேகரை எண்ணினுளோ அவ்வளவுக்கவ்வளவு சபாபதியிடத்து வெறுப்பும்,

அருவருப்பும் வளர்ந்தன. இந்த வழுக்கல் நிலத்தில் நடமாடிய சுமதி எத்தனை சுலபமாகத் தன்னை மறந்து நெறி தவறி விடலாம்! ... ... ...

எத்தனை கொடிய இரவுகள்! ..... சபாபதி அவளைத் தீண்டிவிட்டால் சுமதியின் சதை கூசும்! முதலில் தன் விதியை ஏற்றுக்கொள்ள முயன்றாள். மனதை ஒடுக்கித் தனக்கு விதிக்கப்பட்ட வாழ்வில் ஒழுகத்தான் முயன்றாள். ஆனால் சபாபதி பசிப்பார்வையோடு அவளை அணுகும் போது, கரங்களால் அவளை அணைக்கும்போது சுமதிக்குக் கூச்சலிட வேண்டும் போலிருக்கும். எப்படித்தான் பொறுத்துக்கொள்வாளோ? ... அன்று ... அந்த முதலிரவின் நினைவு! அதுகூடவா சுமதிக்கு மங்கி மறைந்துவிட்டது? அன்றுதான் சுமதியின் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கையின் நிழலும் செத்துவிட்டது. அன்று சபாபதி அவளை நெருங்கி இரு கைகளாலும் அணைத்து அவள் உதடுகளில் தமது சொறசொறத்த உதடுகளை ... சுமதிக்கு எங்கிருந்து அந்தப்பலம் வந்ததோ தெரியாது! அவர் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு எப்படியோ அடுக்களைக்குள் புகுந்து கதவைப் பூட்டிக் கொண்டாள். அதன்பின் சபாபதியின் தொந்தரவு சகிக்க முடியாத இரவுகளை இப்படித்தான் அடுக்களையில் கழித்தாள். இதுதான் பத்து வருஷங்களாகச் சுமதி நடத்தி வரும் வாழ்க்கை. இன்று சபாபதி கண்ணை மூடிவிட்டால் சுமதிக்கு அது விமோசனமாகாதா? ஏன், எத்தனை நாள் ஆத்திரத்தில், வெறுப்பில் எண்ணியிருக்கிறாள், 'இந்தக் கிழம் செத்துத்தொலைக்காதா' என்று! இன்று அப்படியே நடந்துவிடும்போல் தோன்றுகையில் மட்டும் ஏன் வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டுகிறாள்? உலகத்துக்குப் பயந்தா? விதவை என்று சமூகம் புறக்கணித்துவிடுமே என்றதனாலா? ... ...

அல்லது ... ,.. நேற்று நடந்த சம்பவத்தாலா? சுமதி அவருக்குப் பாலூற்றிக்கொண்டிருந்தாள். உதட்டை

நாவால் நனைத்தபடி, "ஹெஹ்ஹே ... சுமதி ... இப்படி வந்து உக்காரேன் ..." ,என்று படுக்கையைத் தட்டினார் சபாபதி. சுமதி கேளாததுபோல் பாலை முக்காலிமேல் வைத்துவிட்டுத் திரும்ப அவள் கையைப் பற்றினார். அவள் கையை உதறிக்கொண்டாள் ... சபாபதியின் கையில் அவள் சேலைத்தலைப்பு சிக்குண்டது ... சுமதி தலைப்பை இழுத்துக் கொண்டு பின் வாங்கினாள். அவரும் விடுவதாயில்லை...... இளித்துக்கொண்டு நெருங்கலானார்...திடீரென்று ..... எப் படி நடந்ததோ தெரியாது — சபாபதி தடுமாறி அலங் கோலமாய் விழுந்தார். கதிரை ஒன்றில் தலை சரியாக அடி பட்டுவிட்டது. அப்பொழுது தப்பிய நினைவு இன்னமும் திரும்பவில்லை. வைத்தியர் ஏதோ ஊசி ஏற்றிவிட்டுத் தம் மாலியன்றதைச் செய்வதாகக் கூறிச் சென்றார் — அதா வது கையை விரித்து விட்டார் என்று அர்த்தம். சுமதிக்கு ஏன் அது சந்தோஷமளிக்கவில்லை? சபாபதியின் சாவுதா னே அவளுக்கு வாழ்வாகப்போகிறது? இதை அறிந்தும் எதற்காக மாங்கல்யப்பிச்சை கேட்கிறாள்? ஒரு வேளை தன்னால்தான் அவர் உயிருக்கு ஆபத்து நேர்ந்ததென்ற குறுகுறுப்போ? அவளால்தானே அவர் விழவேண்டி நேர்ந்தது? அவர் இறந்துவிட்டால் அவர் சாவுக்குக் காரணம் தானே என்ற குற்றஉணர்வின் எதிரொலியா இந்த வேண்டுதல்? ...

சுமதி மெல்லக் கண்களைத் திறந்து சபாபதியை உற்று நோக்கினாள். அப்படியே, போட்டபடியே கிடந்தார். உட லில் உயிர் ஒட்டியிருப்பதற்கு மார்புக்கூட்டின் மெல்லிய அசைவு சாட்சி கூறுகிறது. சுமதியின் கண்களில் தோயும் உணர்ச்சி — ஏமாற்றமா? குத்துவிளக்கைத் தூண்டிவிட்ட சுமதி நெடுமூச்சோடு கண்களை மூடுகிறாள். உதடுகள் குவிந்து முணுமுணுக்கின்றன. என்னதான் அப்படிப் பிரார்த்திக்கிறாள்? பத்து வருஷங்களாக வேண்டாத இறைவனை வேண்டுகிறாள்! உள்ளத்தின் அடியிலிருந்து, உணர்ச்சி ஒன்றிய வேகத்தோடு, புதிய நம்பிக்கையோடு வேண்டுகிறாள் — "கடவுளே அவர் சாகட்டும் ... கடவுளே அவர் சாகட்டும் ..."

ஆனி — 1961



# காப்பு

அழகின் அருமையை அறிவுறுத்தவே என் போன்றவரையும் பிரம்மதேவன் படைத்தான் போலும்! பெண்ணென்ற உணர்வு எனக்குத் தோன்றிய நாள் தொட்டுப் புகைந்து பொருமத் தொடங்கிய என் உள்ளம் இன்னும் வடியவில்லை. நான் மட்டும் ஏன் இத்தனை குரூபியாக இருக்கவேண்டும்? எனக்கு மட்டுமேன் இந்த அநீதி? இளமைத் துடிப்போடு இன்பக்கனவுகள் காணும் உள்ளத்தை மட்டும் அள்ளிக்கொடுத்த ஆண்டவன் அவற்றை நினைவாக்கிக்கொள்ள என் தோற்றத்தில் ஒரு சிறிது கவர்ச்சியை அளித்திருக்கக் கூடாதா? என்னிடமில்லாத கவர்ச்சியை என் தந்தையின் பணப் பெட்டியிலடங்கிய ஆயிரங்களில் கண்ட ஒருவன் எனக்கு மாலையிட்டான். மனைவியாக்கிக் கண்டான்! வாழ்க்கை ஏதோ செல்கிறது; நிறைவுதான் இல்லை! 'பிளாட்பார'த்தில் நின்ற என் தந்தை ஏதோ சொல்லிக்கொண்டேயிருந்தார்........ 'உம்' கொட்டினேனே தவிர என் கண்கள் பெட்டியின் மறு மூலையில் இருந்த இளைஞனை நோக்கின. அத்தனை அழகனென்று சொல்லமுடியாது. இருந்தும் என் கண்களுக்கு அனங்கன் போல் தோன்றினான். நாமிருவர் மட்டுமே இருந்தோம். என் பார்வையை உணர்ந்தவன்போல் திரும்பினான். அருவருப்பும் வெறுப்பும் தெறித்து விழ முகத்தைச் சுளித்தவன் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினான். எனக்குச் 'சுருக்'கென்றது..........

முதல் மணி அடித்துவிட்டது. ஒரு சிறுவன் ஓடி வந்து எங்கள் பெட்டியின் கதவைத் திறந்துவிட்டுத் திரும்பி,

''சீக்கிரம் வா அக்கா! இங்கு இடமிருக்கிறது!'' என்று கத்தினன். நானும் மெல்லப் பார்த்தேன். என் முகம் கறுத்ததோ என்னவோ, என் உள்ளத் தீ மூண்டெழுந்தது. என் வரண்ட மனம் கூட அப்பெண்ணின் அழகை மறுக்கத் துணியவில்லை. ஓடிவந்தவள் கைப்பெட்டியோடு உள்ளே ஏறி எனக்கு எதிரே அமர்ந்து கொண்டாள். பின்னல் வந்த 'போட்டர்' பெரிய 'ஸூட்கேஸை' உள்ளே தள்ளினன். என்னையறியாமல் என் கண்கள் வாலிபனை நோக்கின. அவன் கண்கள் சுக்கிய உணர்ச்சி என்னைக் குத்தியெடுத்தது. என்னையும் ஒருவன் ஆசையின் வேகத்தோடு பார்க்கவேண்டும், அடையத்துடிக்கவேண்டும் என்று நான் ஏங்கிய நாட்கள் முடிந்துவிடவில்லை! இங்கு இவள் அவனைப் பார்க்கக்கூடவில்லை! இருந்தும் அவன்........... ஹூம்! மதுமலர்தானே வண்டைக் கவரும்! காகிதப் பூவிற்கு அந்தத் திறன் இல்லையே!...........

அப்பா ஏதோ சொல்கிருரே!.........

''நல்லது. உனக்கும் துணையாய்ப் போச்சு! போனதும் கடிதம் போடு!'' வண்டி புறப்பட்டு விட்டதா? அடடா! தலையை வேகமாக ஆட்டினேன். ''போய் வருகிறேனப்பா'', என்றேன். ரயில் ஸ்டேஷனை விட்டு நகர்ந்தது...

அவள் என்னைப்பார்த்துப் புன்னகை புரிந்தாள். நான் கவனியாதது போல் வெளியே பார்த்தேன். பெரிய 'ஸூட்கேஸை' 'ஸீட்'டின் கீழே தள்ளியவள் சிறிய கைப்பெட்டியை மேலே தட்டில் வைக்கமுயன்ருள். அவளுக்கு எட்டவில்லை. அதனோடு ரயிலின் ஆட்டத்திற்கு நிலை தடுமாறினள். மூலையிலிருந்த இளைஞன் துள்ளிப் பாய்ந்து அவளருகே வந்தான்.

''இப்படிக் கொடுங்கள்! நான் வைத்து விடுகிறேன்.'' அவள் கையிலிருந்து பெட்டியை வலிந்து வாங்கினன். அவள் மறுக்கவுமில்லை, தடுக்கவுமில்லை. மாறுதலில்லாத அதே புனன்கையைச் செலுத்திவிட்டுக் கைப் பெட்டியை அவனிடம் கொடுத்துவிட்டு மீண்டும் ஜன்னலருகே எனக் கெதிரில் அமர்ந்தாள். அவனும் அவளுக்கருகில் அமர்ந்து கொண்டான். அவள் பார்வை ஜன்னலுக்கு வெளியே நிலைத்திருந்தது. இரண்டு மூன்று தடவை அவளைக் கடைக் கண்ணுல் பார்த்தான்.

''நீங்கள் எதுவரைக்கும் போகிறீர்கள்?'' அவன் கேட்டான். அவள் மெல்லப் பார்வையைப் பெயர்த்து அவனைப் பார்த்தாள். நெட்டுயிர்த்தவள்,

''கொழும்புவரை'', என்ருள். அடுத்து நான் எதிர் பார்க்கவில்லை! அவன் திரும்பி என்னைப்பார்த்து,

''நீங்கள்?'', என்று கேட்டான். ஹூம்! என்னைப்பார்க்கச் சகியாது முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டிருந்தவன், இப்பொழுது அவளுடைய புண்ணியத்தால் என்னுடன் பேசவும் செய்துவிட்டானே! எனக்கு அவமானம் தாங்கவில்லை! ஆத்திரம் கொதித்துப் பொங்கியது. அவனைச் சுட்டெரித்து விடுவது போல் வெறித்துப் பார்த்தேனே யொழிய ஒன்றும் சொல்லவில்லை. அவனுடைய முகம் கறுத்து அதில் புன்னகை அப்படியே உறைந்து விட்டது. அதன்பின் அவன் என் பக்கம் திரும்பவேயில்லை...

வெளியே நிரை நிரையாய் நின்ற மரங்களெல்லாம் காந்தத்தால் கவரப்பட்டவை போல் ரயிலைச் சந்திக்க விரைந்து ஓடி மின்வெட்டெடன மறைந்தன. வாழ்க்கையும் இப்படித்தானே என்று நினைத்துக்கொண்டேன். வாழ்க்கையிலும் நம்மை, நம் மனதை ஏதேதோவெல்லாம் ஆகர்ஷிக்கின்றன. அவையெல்லாம் ஒரு கணத் தோற்றமாய்த் தம் பிடிப்பை இழந்து மறைந்துவிடுகின்

றன. வெளியே ஓடி மறையும் மரங்களிலே என் பார்வை பெயர்க்க முடியாது கட்டுண்டு கிடந்தது. ஆனால் அவளை அவன் கேட்டகேள்விகள், அவளோடு பேசிய பேச்சுக்கள் யாவும் என் காதில் வந்து விழுந்தன. அவளைப் பேசவைக்க அவன் கையாண்ட தந்திரங்கள், அவனுடைய பேச்சுச் சாதுரியம் கைதேர்ந்த அரசியல்வாதியையே தோற்கடிப்பதாயிருந்தது. அவனது குரலைக் கேட்கக் கேட்கக் காரணமில்லாத ஆத்திரம் என் மனதில் குமைந்தெழுந்தது. அவளிடத்து எனக்கெழுந்த பொறாமையெல்லாம் ஏளனமாக மாறியது. 'ஆமாம்! மானங்கெட்ட சிறுக்கி! அவன் தான் நிலைதவறி நடந்துகொண்டானென்றால், அவனோடு பல்சுளுக்கும்படி அவளை இளித்து இளித்துப் பேசச் சொல்லிக் கிடக்குதா என்ன? பண்பு தெரியாதவள்!' என்றெல்லாம் அவளைத் தூற்றி மகிழ்ந்தது என் இதயம். எவள் அழகை, வசீகரத்தை எண்ணிப் பொறாமைப்பட்டேனோ, எவள் நிலையில் இருக்க ஏங்கினேனோ, அவளை ஒழுக்கமற்றவள் என்று ஏசி மகிழ்ந்தேன். சந்தர்ப்பமின்மை என்மேல் சுமத்திவிட்ட நிலையைக் கற்பின் திண்மையென என் மனதோடு கூறிக்கொண்டேன். சிச்சீ இந்தப் பழம் என்றதாம் நரி! என் மனதின் பித்தலாட்டத்தை நினைத்து எனக்கே சிரிப்பும் வெறுப்பும் வந்தது. இந்த மனோவாதையும் வேதனை இதயமும் கடவுள் எனக்கென உவந்தளித்த செல்வமா?......

வெளியே மெல்ல இருள் கவிந்துகொண்டிருந்தது. அந்த இருள் படலம் ஜன்னல் வழியே உள்ளே புகுந்து படர்ந்து தங்கிற்று. அது என் உள்ளத்தின் புதையிருளை மறைக்க முயன்றதோ என எண்ணினேன். என் பார்வையை உள்ளுக்கிழுத்து அவனுடைய உருவத்தில் நிலைக்க விட்டேன். திடீரென மின் விளக்குகள் எல்லாம் பிரகாசித்தன. நான் அவனையே பார்த்திருந்தேன். அவள் அழகைக் கண்களால அள்ளிப் பருகிக்கொண்டிருந்தவன் திடுஷிட்டுத் 'திருதிரு' வென்று என்னைப் பார்த்து விழித்தான்.

அவன் முகத்தில் வழிந்த அசடைக்காண எனக்குச் சிறிது திருப்தியாக இருந்தது. என்னை ஏளனம் செய்த அவனிடத்து இது நான் ஈட்டிய சிறு வெற்றிபோல் எனக்கு ஆறுதல் அளித்தது. கடகடத்தவாறு ஆரவாரத் தோடு புகையிரதம் நிலையத்திற்குள் புகுந்தது.

''காப்பி, டிபன் வாங்கி வருகிறேன். நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?,'' என்று அவளைப் பார்த்துக் கேட்டு விட்டு எழுந்தான். அகல விரிந்த கண்களால் அவள் நிதானமாக அவனைப் பார்த்தாள்--அழகான கண்கள் அவை! உணர்ச்சியின் சுவடில்லாத பற்றற்ற தன்மை யையே பிரதிபலித்தன. இருந்தும் அது கூடக் கண்களை அழகு படுத்தியதாகவே தோன்றியது.

"பரவாயில்லை. நீங்கள் சிரமப்படாதீர்கள். நான் டிபன் கொண்டுவந்துவிட்டேன்". சொல்லிவிட்டு என்னை ஒரு கணம் பார்த்தாள். அந்தக் கணப்பார்வை என்னை ஏதோ செய்தது... . என் உதவியை யாசித்தாளா? ஆதர வைக் கேட்டாளா? மீண்டும் அவளைக் கூர்ந்து பார்த்தேன். ஆனால் என்னைப்பார்க்க அஞ்சியவள் போல் அவள் என் பக்கம் திரும்பவேயில்லை.

''அப்படியென்றால் நீங்கள் கட்டாயம் காப்பியாவது சாப்பிடவேண்டும்.'' அவன் சிரித்துக்கொண்டே வற்புறுத் தினான்.

''இல்லையில்லை. உங்களுக்கு வீண் தொல்லை!" அவள் முகத்தில் அலுப்புத் தட்டியது. அவன் வெற்றிப்புன்னகை உதிர்த்தான். சந்திர மண்டலத்திற்கு வழி கண்டவன் கூட அத்தனை எக்களிப்பு அடைந்திருக்கமாட்டான்.

''இதென்ன தொல்லை? ஐந்து நிமிஷம் பொறுத்துக் கொள்ளுங்கள்—'' என்னை ஏதோ ஒன்று பேச வைத்தது.

"என்னிடம் காப்பி இருக்கிறது. இருவருக்கும் அது போதும். நீங்கள் சிரமப்படாது போய்ச் சாப்பிடுங்கள்.'' அவன் என்னைப் பார்வையால் கொன்றுவிட்டு 'ரெஸ்டாரன்ட் காரை' நோக்கி நடந்தான். அவள் நன்றி தெரிவிக்கவில்லை. என்னைப் பார்த்துச் சிரிக்கவுமில்லை. தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தாள். நான் சாப்பிடத்தொடங்கினேன். அவள் சாப்பிடவில்லை. நானும் கேட்கவில்லை. சாப்பிட்டு முடிந்ததும் காப்பியை ஊற்றி நீட்டினேன். அவள் பேசாமல் வாங்கிக் குடித்தாள். ரயில் மீண்டும் புறப்பட்டு விட்டது...... போர்த்தியிருந்த சேலைத் தலைப்பின் நுனியை இறுகப்பற்றியவாறு ஜன்னல் சட்டத்தில் தலையைச் சாய்த்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அவன் திரும்பிவிட்டான். நான் அவனை எதிர்பார்த்துத்தானிருந்தேன். மீண்டும் பழைய இடத்திலேயே அமர்ந்தான்.

''நான் புகை பிடிப்பது உங்களுக்குச் சிரமமாய் இருக்குமா?'' அவள் ஒன்றும் சொல்லவில்லை, அவன் 'ஸிகரெட்'டைப் பற்ற வைத்துக்கொண்டான். சுருள் சுருளாக மேலெழுந்த புகையை ரசித்துக் கொண்டிருந்தான். நான் ஜன்னலில் கையை ஊன்றி அதில் தலையைத் தாங்கிக் கொண்டேன். கண்களையும் மூடிக்கொண்டேன் என்றுதான் நினைக்கிறேன். என் நினைவெல்லாம் அந்தப்பெண்ணைச் சுற்றிப் படர்ந்தது. அவளை நினைத்துப் புழுங்குகிறேன். பொறுமைப் படுகிறேன். அவளைப்போல வேண்டாம். ஆனாலும் அதில் ஒரு சிறியபங்கு அழகு என்னுடையதாய்இருந்து, இவனைப்போல் இளைஞனொருவன் என் புருஷனாய் இருந்தால் வாழ்வே எனக்குப் பெரும் விழாவாயிருக்கும். ஆனால் என் கணவரின் கற்பனையோ வியாபாரத்திலும் பணத்திலும் பின்னிக் கிடந்தது. புகையிரதத்தின் போக்கைப்போல் என் சிந்தனைத்தொடரும் நீண்டு கொண்டே சென்றது. யோசனையில் ஆழ்ந்திருந்தேனோ அன்றித் தூங்கித் தான் விட்டேனோ தெரியாது. திடீரென உணர்வு எனக்கு விழிப்பூட்டியது தலையை அசைக்காது, இறக்கிய இமைகளூடே

அவனைப்பார்த்தேன், அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். சட்டிப்பாலைப் பார்த்துப்பார்த்து வாயூறும் கள்ளப் பூனையைப்போலிருந்தது அவனைப் பார்க்க! என்னைப் பார்த்துப் பார்த்து அணுவணுவாக அவளருகே நெருங்கிக் கொண்டிருந்தான். அவள் உட்கார்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்தாள்... தோளும் தோளும் உராயும்படி அவளருகே நெருங்கிவிட்டான். ரயிலின் ஆட்டத்தோடு ஆடிஆடி அவள் தலை மெல்ல அவன் தோளில் சாய்ந்தது. பாவம்! தன்னை மறந்து தூங்கினாள். சற்று நிதானித்தவன் துவண்டு கிடந்த அவளுடைய மெல்லிய நீண்ட விரல்களைப் பற்றக் கையை நீட்டினான். என் இதயம் படபடத்தது. உடலெல்லாம் நடுங்கியது. ஆமாம்! அவளுக்காக, அந்த அழகிக்காக, என் நெஞ்சு துடித்தது! அவளை எழுப்பவா? அவனை அதட்டவா? என் அருகில், ஸீட்டில் இருந்த பால் செம்புபளபளத்து மின்னிற்று. எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. நான் தூங்கி விழுந்தேன். ஜன்னல் சட்டத்தில் ஊன்றிய என் கை நழுவிக் கீழே பால் செம்பில் பட்டு அதைத்தட்டி விழுத்தியது. பெருஞ் சத்தத்தோடு கீழே விழுந்த செம்பு கலகலத்து உருண்டோடியது. அவள் விழித்துக் கொண்டு பதறினாள்...... ஒரு கணம் செயலற்று நின்றவன் அவள் நிதானித்துக்கொள்வதற்குள் வெளியே பாய்ந்தோடினான்...........

நான் அவளைப் பார்த்தேன். நன்றாகப் பார்த்தேன். என் பார்வையை ஒரு விநாடி சந்தித்தாள். அந்தக்கண்களில் ஒரு கணம் மின்னிய உணர்ச்சி - உள்ளத்தின் வேதனையா? நன்றிப் பெருக்கா?......... அதற்குள் இமைகள் துடித்துக் கண்களைத் திரையிட்டன. அவள் என் செம்பை எடுக்கக் குனிந்தாள். போர்த்தியிருந்த சேலைத் தலைப்பு நழுவிச் சரிந்தது— தாழ வெட்டிய ரவிக்கைக் கழுத்து— அதிலிருந்து எழுந்த வெண்மையான, மிருதுவான சங்குக் கழுத்து— கழுத்தை அணைத்துப் புரண்டு ஒளி வீசியது —மாங்கலியம்!

இதுவரை நான் ஒரு அழகான பெண்ணைப் பார்த்து உணர்ந்திராத உணர்ச்சி என் உள்ளத்தில் ஊறிப் பெருகியது. அந்தப் பெருக்கிலே என் பொறாமையும் வெறுப்பும் அடித்துச்செல்லப்பட்டன. பரிதாபத்தோடு, அனுதாபத்தோடு அவளைப் பார்த்தேன். அழகிருந்தது அவளிடம். ஆயினும் அவளுக்கு அது அவலத்தையே அளித்தது. அந்தக் கண்களின் சூனியம் அவள் உள்ளத்தின் கசப்பை உணர்த்திற்று. பாவம்! கணவன் என்ற ஒருவனால் கூட அவளுக்கு அளிக்கமுடியாத காப்பினை என் குரூபம் எனக்கு அளித்துவிட்டதே!

ஆவணி — 1960



# விடிவை நோக்கி

ஒரு கையில் பாடப் புத்தகங்களும் ஒரு கையில் குடையுமாக அன்னம் நடந்துகொண்டிருந்தாள். யாழ்ப்பாணத்துக் கோடை வெய்யில் ஈவிரக்கமின்றிக் கொளுத்திக் கொண்டிருந்தது. பார்த்த இடமெங்கும் கானல் நீர்த்தோற்றம் கண்களில் மின்னிற்று. அன்னம் நெட்டுயிர்த்தாள். இதுவரை வாழ்வென்பதும் கானலாக அவளை வஞ்சித்து வந்தது. அவள் வாழ்வில் கோடை மறைந்து வசந்தம் வீசவில்லை. இடைக்காடு கிராமமே தூக்கக் கிறக்கத்தில் சுருண்டு கிடக்கும் வேளை. மூன்றாந் தரத்திற்குச் சரித்திரம் கற்பித்துக்கொண்டிருக்க வேண்டிய அன்னம் இந்தக் கொதி வெய்யிலில் வீடு திரும்புகிறாள். காரணம், அவளைப் பெண் பார்க்க வருகிறார்கள். அன்னத்திற்கு இதை நினைக்கச் சிரிப்பாகவும் இருந்தது, சலிப்பாகவும் வந்தது. அம்மாவின் ஆக்கினைக்காகத்-தானே அன்னம் இதற்கு உடன்படுகிறாள். பள்ளியில் இருக்கும்போது வீட்டுக்குப் போகாமலே இருந்து விடுவோம் என்று நினைத்தாள். வருபவர்கள் நன்றாக வந்து விட்டுப் போகட்டும்! ஏன் இப்போ கூட ...... ...... பள்ளிக்குத் திரும்பவா? அவளென்ன, சூடு, சுரணை இழந்தவளா? சிச்சீ! அவளுக்கு இதெல்லாம் அலுத்து வெறுத்து விட்டது. இதில் கிஞ்சித்தேனும் விருப்பமில்லை ! !...... ...... விருப்பமில்லையா ? ...... ...... உண்மையாக ? பின் ஏன் இந்தக் கால்கள் இன்னும் வீட்டை நோக்கி நடைபோடுகின்றன? இந்த மனதிற்குத்தான் எவ்வளவு நம்பிக்கை என்று வியந்தாள் அன்னம். சிறுமைப்பட்டு வெகுண்ட அவள் மனம்

திருமண எண்ணத்தையே உதாசீனம் செய்ய முயன்றது. இதய நோவை, ஏக்கத்தை மறைத்து மனம் நிமிர்ந்து பெருமை காட்ட முயன்றது. ஆனால் ...... ...... ஆனால் உள்ளுக்குள் ...... ...... உள்ளுக்குள் உணர்வு துடித்தது ...... ...... உள்ளம் ஏங்கியது. இந்த முறையாகிலும், இந்த இடமாகிலும் பொருந்தி வராதா என்ற ஆசைத் துடிப்பு அவள் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுத்த துடிப்பு ...... ...... அவள் உள்ளத்து உயிர்நிலையை அரித்து வந்த துடிப்பு ...... ......

இருபக்கமும் வேலிக் கதியால்கள் நிழல்பரப்பும் ஒழுங்கைக்குள் 'அப்பாடா' என்று திரும்பினாள் அன்னம். குடையைச் சுருக்கி நடையை நிதானித்தாள். எதிரே யாரோ வந்து கொண்டிருந்தார்கள். ஊரே உறங்கும் இந்த மத்தியான வேளையில் யாராயிருக்கும்? ...... ...... அந்த நடை ...... ...... ஆமாம். ரத்தினக்காதான்! அன்னம் முகத்தைச் சுளித்தாள். நல்ல முழுவியளம்தான்! "இவவைப் பாத்த சகுனம் வாற மாப்பிள்ளையும் வீதியோடை போய் விடுவார்" என்று முணுமுணுத்தாள் அன்னம். ஊரில் ரத்தினத்தின் மேல் பரிவு கொண்டவர் ஒருவருமில்லை. அவளைக் கண்டு பயந்தவர்கள் என்றால் ஒருவர் மிச்சமில்லை. வம்பு பேசுதலை ஒரு நுண்கலை என்ற அளவுக்கு வளர்த்திருந்தாள். ஒரு அழகான பெண்ணைக் கண்டால் அவளைப் பற்றி அவதூறு சொல்லாவிட்டால் ரத்தினத்திற்கு அமைதியயிராது. மற்றவருக்குத் துயர் விளைப்பதில் நிறைவும் இன்பமும் காணும் விகார மனம் ரத்தினத்தினுடையது. அதனால் அவளை உள்ளூர வெறுத்தவர்கள் எல்லோரும் வெளியில் இனிப்பாகத்தான் பேசினார்கள்.

"ஆரது, அபிராமின்டை மேளே? என்ன பள்ளியாலை வெள்ளெனத் திரும்பிறாய் அன்னம்?"

"இல்லை ரத்தினக்கா, சரியான தலையிடி. அதுதான் லீவு போட்டுட்டு வீட்டை போறன்."

"இந்த வெயிலுக்கு எல்லா வருத்தமும் வரும். போய்க் குடிநீரிலே வைப்பிச்சுக்குடி. போ பிள்ளை!" அவளைத் தாண்டிய அன்னம் "பெரிய கரிசனம்தான்" என்று முணுமுணுத்தாள். தன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்பது ரத்தினத்திற்கு நன்ருகத் தெரியும் என அன்னம் அறிவாள். அன்னத்தின் பொய் ரத்தினத்தை ஏமாற்றவில்லை. மாருக, ஆத்திரத்தைத்தான் கிளப்பியது — அன்னம் தன்னை லட்சியம் செய்யவில்லை என்ற ஆத்திரம். ஆனுல் அன்னத்திற்கு ஒரு அலட்சியம். ரத்தினத்தின்மேல் தனக்குள்ள வெறுப்பை அவள் மறைக்க முயற்சித்ததில்லை. என்றுமே ரத்தினத்தைத் தூக்கியெறிந்து பேசுவாள். ரத்தினம் அதை மறப்பவளுமல்ல, மன்னிப்பவளுமல்ல!

படலையைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் அன்னம். அபிராமி தந்த தேனீரை அருந்திவிட்டு அலங்காரத்தில் ஈடுபட்டாள். ஒரு முறையா, இரண்டு முறையா? இது பதினேழாவது தடவை. இருந்தும் அவள் உள்ளத்தில் ஒரு பரபரப்பு! ஒரு சலனம்! உள்ளத்தில் ஏதோ ஒன்று வியாபித்த உணர்வு. அன்னத்தின் மனதிலே எண்ணங்கள் குமிழியிட்டன. வருபவருக்கு வயது முப்பத்தொன்பது இருக்குமாம்! அதற்கென்ன? அவளுக்கு என்ன வயசு குறைவோ? இருபத்தெட்டு ஆகிவிட்டது. நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி இருக்கவேண்டிய வயசு! ஆனுல், அவள் இன்னும் கன்னி கழியாமல்! ... ... ஹூம்! ... ... வருபவருக்கு நல்ல உத்தியோகமாம்! ... அப்படியானுல் சீதனமும்? ... ... சீதனம்! இந்த நான்கெழுத்து மந்திரத்தில்தான் அவள் வாழ்வு தங்கியிருக்கிறது. அவளை, ஒரு பெண்ணைவிட அவள் கொண்டு வரவிருக்கும் பணத்தில்தான் அவளைப் பெண் பார்க்க வந்தோரின் அக்கறை சென்றது. பணமே இருபதாயிரத்துக்குக் குறையாமல் கேட்கிருர்கள். பிறகு நகை, காணி என்று ... ...

அன்னம் கூந்தலை அவிழ்த்துச் சீவத் தொடங்கினுள். அன்னத்தின் தாய் பத்தாயிரம் காசும் இந்த வீடும்

சீதனமாய்க் கொண்டு வந்தாள். அதில் மிஞ்சியது இந்த ஓட்டு வீடுதான். அன்னத்தின் தந்தை — அவரை அவளுக்கு ஞாபகமே இல்லை — கட்டு மட்டில்லாது குடித்தார். அபிராமியை மணக்கும் போது அவருக்கு இருபத்தொரு வயது. இரண்டு வருடத்தில் அபிராமியின் சீதனமும் கரைந்துவிட அவரும் கட்டையைப் போட்டுவிட்டார். அந்த மட்டில் இந்த வீடாவது மிஞ்சியது. அன்னத்திற்கு அவள் அறியாத தந்தையின்மேல் வெறுப்பும் அலட்சியமுமே தோன்றியது. அவர் மனிதராய் வாழ்ந்திருந்தால் அவளுக்கு இன்று இந்தக் கதி ஏற்படுமா?

வாசலில் கார் வந்து நின்றது. அபிராமி வந்தவர்களை வரவேற்றாள். சிறிது நேரத்தில் அன்னத்தின் பிரவேசக் கட்டம் வந்தது. மாப்பிள்ளை பார்ப்பதற்கு மிக மிகச் சாதாரணமாகத்தானிருந்தார். அன்னமும் அப்படியொன்றும் பிரமாத அழகியல்ல. இருந்தும் மாநிறத்தில் ஒரு மாற்று உயர்ந்த நிறத்திலும், பளபளக்கும் முகத்தில் ஒளி காட்டும் வட்ட விழிகளிலும், மெல்லிய உதடுகள் சிரிப்பில் மலர எட்டிப் பார்க்கும் தெற்றுப் பல்லிலும் கவர்ச்சி இல்லை என்று சொல்ல முடியுமா? அன்னத்தின் செழித்த உடல் ஏழு யார்ச் சேலையில் முடங்கிக் கிடந்தது. அபிராமி இந்தக் காலத்து 'ஜார்ஜெட்'டையும் 'நைலானை'யும் சேலையாக மதிப்பதில்லை. இந்தக்கட்டம் முடிந்ததும் சீதன விஷயம் எடுபட்டது. எடுத்த எடுப்பிலேயே கண்டிப்பாக சீதனக்காசே இருபத்தையாயிரம் என்றார் மாப்பிள்ளையின் மாமா கிழவர். அதன்பின் விஷயத்தைத் தொடர்ந்து என்ன பிரயோசனம்? ஆறாத புண்ணிலே கோலிட்டுக் கிளறிக்கொண்டே இருந்தால் எரிச்சல் கூடுமா, குறையுமா? அன்னத்தின் அவமான உணர்ச்சியும், ஏமாற்றமும், ஏக்கமும் சினமாய் உருவெடுத்தன.

"அம்மா, இனிமேலும் என்னை இப்பிடி வேஷம் போட வைச்சு அவமானப்படுத்தாதேங்கோ! இனியும் எனக்குக் கலியாணமாகும் என்ற ஆசையை விட்டுடுங்கோ!" அன்னம் சீறினாள். அபிராமி பெருமூச்சுவிட்டாள்.

" உனக்கொரு வழி செய்யமுடியாமல் நான் படுகிற வேதனை உனக்கென்ன தெரியும் தங்கச்சி? ஹூம்! எல்லாம் விதி! ஆனால் எனக்கு இன்னொரு நம்பிக்கை இருக்குமேனை. அண்ணரின்டை மகன் வேலுப்பிள்ளை சிங்கப்பூரிலையிருந்து வாறதெண்டு எழுதியிருந்தானே! நாளண்டைக்கோ என்னவோ வந்திடுவான். கலியாணஞ் செய்து கொண்டு ஊரோடை இருக்கத்தான் வாறான். அவன் உன்னை முடிக்காமல் வேறை ஆரைப் பிள்ளை முடிக்கப் போறான்?" அன்னம் சூள் கொட்டிவிட்டுப் போனாள்.

அபிராமி பாவாடைப் பருவத்தில் இருக்கும் போதே அவள் அண்ணன் சிங்கப்பூர் மச்சாளைக் கலியாணஞ் செய்து அங்கேயே குடியேறிவிட்டான். இப்பொழுது அண்ணனும் மச்சாளும் கண்ணை மூடிப் பல வருடங்கள் ஆகிவிட்டன. அண்ணனின் மகன் வேலுப்பிள்ளை, அன்னத்தின் முறைப் பையன் அவளை மணக்க மாட்டானா என்ற நம்பிக்கை அபிராமிக்கு.

வேலுப்பிள்ளையைக் கண்ட அன்னத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. அவர் உருவம் அவள் உள்ளத்தை உலுக்கிவிட்டது. வழுக்கை விழுந்த முன்தலையும் இரட்டை நாடியும், உடலின் ஒவ்வொரு அசைவுக்கும் ஒப்பத்தாளம் போடுந் தொந்தியும் அவள் மனதிற்கு இதமளிக்கவில்லையே! அவரைத் தன் கணவன் என்று நினைத்துப் பார்க்கவே அன்னத்திற்கு அருவருத்தது. இருந்தும் வேறு வழியற்றபோது?

வந்ததும் வராததுமாய் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்று சந்தர்ப்பத்தைக் காத்திருந்தாள் அபிராமி. வேலுப்பிள்ளை வந்து ஒரு வாரமிருக்கும். அன்று காலையில் போனவர் பின்னேரமாகத்தான் வீடு திரும்பினார். கூடத்தில் அவருக்குத் தேனீர் கொண்டுவந்து கொடுத்த அபிராமி பேச்சைத் தொடங்கினாள்.

" தம்பி, இன்னம் எவ்வளவு நாள் கலியாணஞ் செய்யாமல் இருக்கப் போருய் ?" மெல்லத் தூண்டிவிட்டாள். வேலுப்பிள்ளை ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

" அதுதான் நானும் ஒரு நல்ல இடமாய்ப் பாத்துக் கொண்டிருந்தனுன் மாமி ... ..."

" எப்பவும் சொந்தத்துக்குள்ளை சம்பந்தம் செய்யிறதுதான் நல்லது. அன்னமும் சும்மா இருக்குது. சொந்த மச்சாணிருக்கச் செய்யிறது நல்லாயில்லையெண்டு வைச்சிருக்கிறன். உனக்கும் அன்னத்துக்கும் ... ... " நம்பிக்கையும் கெஞ்சலும் இழைந்தோடிய கேள்விக்குறியில் அபிராமியின் குரல் ஒடுங்கியது. அவள் கேள்வி கனத்து அக்கூடத்தை வியாபிப்பது போலிருந்தது. வேலுப்பிள்ளை ஆறுதலாகச் சொற்களை அளந்து பேசினுர்.

" அன்னத்தை நீங்கள் எனக்குத் தரச் சம்மதப்படுவீங்கள் எண்டு நான் நினைக்கேல்லை. தரகர் முத்தையா ஒழுங்குபடுத்தின இடமொண்டு எனக்குப் பிடிச்சுக் கொண்டுது. கலியாணத்துக்கு நாள்தான் பாக்க வேணும் ... ... " அபிராமி நெஞ்சை அழுத்திஞள்.

" பெடிச்சி ஆர் தம்பி ? " கஷ்டப்பட்டுக் கேட்டாள்.

" பொன்னம்மாவின் மேள், மாமி. "

" ஆ! அந்தச் செவிட்டுப் பெட்டையையே கட்டப் போருய் ? "

" காது கேக்கிறது குறைவெண்டால் என்ன மாமி? சீதனம் இருபத்தையாயிரம் தருகினம். அதோடை அந்தப் பெடிச்சி இந்த மெஷின் தையல் எல்லாம் நல்லாச் செய்யுமாம். தையலாலை மாதம் இரண்டு நூறுக்கு மேலை சம்பாதிக்கிதாம்! ... ... " அபிராமி இடிந்துபோய் உட்

கார்த்துவிட்டாள். வேலுப்பிள்ளை தரகரைக் காணப் புறப்பட்டார்.

அறையில் பாடக் கொப்பிகள் திருத்திக்கொண்டிருந்த அன்னத்தின் காதில் இதெல்லாம் விழாமலில்லை. வேலுப் பிள்ளையின் பேச்சைக்கேட்டு அவள் மனம் விக்கித்து நின் றது. மெல்ல மெல்ல உள்ளத்தில் உணர்ச்சி ஊறத் தொடங்கியது. வேலுப்பிள்ளையைத் தான் மணக்க ஒப் புவது பெருந்தன்மையான செயல் என்று அன்னம் நினைத்தாளேயொழிய வேலுப்பிள்ளை தன்னை மணக்க மறுத்துவிடுவார், அதுவும் ஒரு செவிட்டுப் பெண்ணுக்காக என்று அவள் ஒரு கணம் கூட நினைக்வில்லை. கடைசி யில் நடந்தது? தொந்தியும் தொப்பையுமான வேலுப் பிள்ளையை அன்னத்தின் பெண்மையின் கவர்ச்சியைவிட ஒரு செவிட்டுப் பெண்ணின் சீதனக் கவர்ச்சியே ஈர்த் தது. அவளது வலையற்ற நிலை, செயலற்ற தன்மை அவ ளைக் குத்தியெடுத்தது. அவள் ஒன்றுக்குமே உதவாத வளா? 'ஆண் உள்ளத்தைச் சலனப்படுத்தும் சக்தி கூடவா எனக்கு இல்லை? என்னைத் தனதாக்கிச் கொள்ள வேண் டும் என்ற உணர்வை ஒருவன் உள்ளத்தில் எழுப்பும் தன்மை எனக்கில்லையா?' என்று நிறைவு பெறாத உள் ளம் நிலை தடுமாறியது. ஏதோ ஒரு வெறி அவளுள் பிறந் தது. அபிராமி எட்டிப் பார்த்தாள்.

"நான் கோயிலுக்குப் போட்டு வாறன், அன்னம். தம்பியும் வெளியிலை போட்டுது."

அன்னம் தன் அறைக் கதவைச் சாத்திவிட்டு நிலைக் கண்ணாடியின் முன்வந்து நின்றாள். அதில் தெரிந்த அவள் உரு வம் — தலையோடு வழித்து வாரப்பட்ட கூந்தல் கோடா லிக் கொண்டையாகப் பிடரிக் கழுத்தில் படுத்துக் கிடந் தது உடலைச் சுற்றிய முரட்டுச் சேலை அவள் அங்க அமைப்புகளை உருத் தெரியாமல் மறைத்தது. உடம்போடு இறுக்கிப் பிடிக்காது சற்று தொளதொளத்த ரவிக்கை

வயிறு தெரியாமல் இடுப்புச் சேலைக்குள் திணிக்கப்பட்டிருந்தது.

யுவதியாய் இருக்கும்போதே கணவனை இழந்த அபிராமி ஊர் அபவாதத்திற்குப் பயந்து தன் நடத்தையில் மாசு கற்பிக்க எவ்விதச் சந்தர்ப்பமும் ஏற்படக் கூடாதென்ற பயத்தில் கட்டுப்பெட்டியாக வாழ்ந்தாள். மகளையும் நகநாகரிகத்தின் சுவடு படாமல் வளர்த்தாள். எஸ். எஸ். ஸி தேறியதும் அன்னத்திற்கு வாத்தியார் வேலை கிடைத்தது. அபிராமியின் கட்டுப்பாட்டின் கடுமையும் கூடியது. சிறிது காலத்தில் இடைக்காட்டிலும் நவநாகரிகத்தின் கிளைகள் எட்டின. தன் மாணவிகளைப்போல் எல்லாம் விதவிதமாய் உடுத்திக்கொள்ள, அலங்கரிக்க அன்னத்திற்கு ஆசைதான். ஆனால் அபிராமி அதற்கு இடங்கொடுக்க மாட்டாள். அன்னத்திற்கும் திடீரெனத் தன் போக்கை மாற்றிக்கொள்வது என்னவோ போலிருந்தது.

அன்னம் அலமாரியைத் திறந்து ஒரு வெண்ணெய் நிற நைலான் சேலையை எடுத்தாள். இது அவள் அபிராமிக்குத் தெரியாமல் வாங்கியது. அணிய முடியாவிட்டாலும் அதை வைத்திருப்பதே ஒரு வித நிறைவளித்தது. அதற்கென அவள் ரகசியமாகத் தைத்த பச்சை 'சில்க்' ரவிக்கையை எடுத்து அணிந்தாள். தோள்களிலிருந்து தாழ வெட்டிய கழுத்தோடு வயிறு தெரியும் ரவிக்கை 'நைலான்' சேலையைச் சுற்றிக்கொண்டு கண்ணாடியின் முன் நின்றாள். அலட்சியமாக அள்ளி எறிந்த தலைப்புச் சேலை தோளைவிட்டு நழுவியபடியே இருந்தது. விரித்துத் தூக்கிக் கட்டிய கூந்தல் திரைபோல் தொங்கியது. அப்படியும் இப்படியுமாக உடலை ஒடித்து வளைத்தாள் அன்னம். நிமிர்ந்த இளமார்பின் எடுப்புக்குத் தடை செய்யாது தழுவிக் கொடுத்தது தாவணி. கச்சணிந்த மார்பின் ஏற்றத்திலிருந்து மலைச்சரிவு போல் இறங்கி, ஒடுங்கிய இடை. பூரித்து மலர்ந்த நிதம்பங்கள். தெரிந்தும் தெரி

யாத ரகசியம் போல் சேலையினூடே தெரிந்த துடைகளின் திரட்சி! உடலின் நெளிவு வளைவுகளோடு ஒட்டி உறவாடும் சேலை! அன்னத்திற்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. எவ்வளவு அழகான உடல் நமக்கு என வியந்தாள். அதிலே ஒருவிதப் பெருமை அவளுக்கு ஏற்பட்டது. தனக்கு நேர்ந்த சிறுமை, மனக்குனிவு, அவமானம், எல்லாவற்றையுமே துடைத்துவிட்ட உணர்வு ஏற்பட்டது. கண்ணாடியின் முன் நின்றாள், நடந்தாள், ஒய்யாரமாகச் சிரித்தாள்.

'படபட.' வென்று வாசற்கதவு தட்டும் ஓசை! அன்னம் அந்த வேகத்தில் சேலையைக் கழற்றத் தொடங்கினாள். வாசலில் வேலுப்பிள்ளையாய்த்தானிருக்கவேண்டும்! அபிராமி என்றால் கொல்லை வழியே வந்திருப்பாள். இந்த உடையோடு எப்படி அவர் முன் போவது? திடீரென்று அன்னத்தின் உள்ளத்தில் ஒரு பொறி விழுந்தது. வேலுப்பிள்ளை தானே! அப்படியானால் அவள் ஏன் இப்படியே அவர் முன் போகக்கூடாது? பெண்மையின் முழுப்பொலிவையும் அவர் பார்க்கட்டுமே! அதன் பின்னும் அவர் மனம் பேதலிக்கிறதா இல்லையா பார்ப்போமே! இந்தப் புதிய அன்னம் அவர் உணர்ச்சிகளைச் சுண்டி இழுக்கிறாளா இல்லையா பார்ப்போமே!...... தன்னை மறந்த நிலையில் அன்னம் தயங்கவில்லை.விரைந்து கதவைத் திறந்தாள். அங்கே வாசற்படியில்—

—ரத்தினம்! அன்னத்தின் உடல் குளிர்ந்துவிட்டது.

"அபிராமி இல்லையே?... ஆ...ர...து?..." ரத்தினத்தின் பாம்புக் கண்கள் ஒரு பார்வையில் அன்னத்தைத் தலையிலிருந்து கால்வரை படம் பிடித்தன— "..... ஆரது ..... அன்னமே! ஓமோம்! அன்னந்தான்! எங்கை பட்டணத்துக்குப் போறியோ?........ படம் பாக்கவோ?........." என்று இழுத்த ரத்தினத்தின் பார்வையோ ஆயிரம் சொல்லிற்று

"இல்லை. எங்கேயும் போகேல்லை," என்று நழுவி ஓடும் சேலையோடு போராடிக்கொண்டே முணுமுணுத்தாள் அன்னம்.

"அபிராமி இல்லையே?"

"அம்மா கோயிலுக்குப் போயிட்டா ரத்தினக்கா."

"அப்ப வாறன் பிள்ளை." ரத்தினம் திரும்பினாள். அதே சமயம் படலை கிறீச்சிட்டது. வேலுப்பிள்ளை தான்! அவரையும் அன்னத்தையும் மாறி மாறிப் பார்த்த ரத்தினத்தின் முகம், "ஓஹோஹோ!" என்பது போல் மாறியது. வேலுப்பிள்ளையைக் கண்ட அன்னம் கதவைத் திறந்தபடியே விட்டு விட்டு உள்ளே மறைந்தாள். ரத்தினத்தோடு பேச நின்ற வேலுப்பிள்ளை அவளைக் கவனிக்கவில்லை. அறைக்குள் அன்னம் 'நைலான்' சேலையை உரிந்து கழற்றிப் பந்தாகத் திரட்டி அலமாரிக்குள் திணித்தாள். படபட வென அவள் இதயம் அடித்துக்கொண்டது.

ஒரு வாரத்தில் வேலுப்பிள்ளையின் கல்யாணம் நடந்து அவர் மனைவி வீட்டோடு போய்விட்டார். அன்னத்திற்குத் தெருவிலும் பள்ளிக்கூடத்திலும் எல்லோரும் தன்னைக் காணும் பொழுதெல்லாம் கிசுகிசுவென்று காதைக் கடிப்பதும், விகல்பமாகச் சிரிப்பதும் போற்பட்டது. தனக்கு இன்னமும் மணமாகாததே இதற்குக் காரணம் என்று நினைத்துக்கொண்டாள். ஆனால் அவள் வகுப்பில் ஒழுங்காயிருக்கும் மாணவிகள் அவளை அசட்டை செய்யத் தொடங்கியது அவளுக்குப் புதிராகவே இருந்தது. அன்று தலைமையாசிரியை தன்னை வந்து காணும்படி செய்தி அனுப்பியதும் அன்னம் பயந்து விட்டாள். தலைமை ஆசிரியை சுற்றி வளைக்கவில்லை.

"உன்னை வேலையிலிருந்து நிறுத்த வேண்டியதற்கு வருந்துகிறேன் அன்னம்." இதை அன்னம் புரிந்துகொள்வதற்குச் சிறிது நேரம் எடுத்தது. மெல்ல உதட்டைக் கூட்டினாள்.

"என்ன?"

"ஆமாம். உன் நடத்தையைப் பற்றி ஊரில் கேவல மாகக் கதைக்கிறார்கள். உன்னால் பள்ளிக்கூடத்திற்கு இழுக்கு ஏற்படக்கூடாதல்லவா?"

"என் நடத்தையா? நீங்கள் நம்புகிறீர்களா?" அன்னத்தின் குரல் தழுதழுத்தது.

"நான் நம்புகிறேனோ இல்லையோ, நெருப்பில்லாமல் புகையாது அன்னம்!"

"ஈர விறகு புகைவதுண்டு அம்மா!" பதிலுக்கு வேலை நீக்கத்துண்டுதான் கிடைத்தது. அன்னம் எதை எதிர் பார்த்தாலும் இதை மட்டும் எதிர்பார்க்கவில்லை. அவள் மேல் சுமத்தப்பட்ட வீண் பழி—அதன் காரணம் தான் அவளுக்கு விளங்கவில்லை. வேலைபோய்விட்டது. கிடைத் ததோ பழி! இனி இந்த ஊரில் எப்படி வாழ்வது? கனக் கும் இதயத்தோடு அன்னம் வீட்டுக்கு நடந்து கொண் டிருந்தாள். 'பஸ்' நிலையத்தில் நின்ற விதானை வேலா யுதம் அன்னத்தைப் பார்த்து அவருக்கே உரிய கேவலச் சிரிப்பைச் சிந்தினார்.

"என்ன அன்னம், பள்ளிக்கூடத்தாலேயோ?" தலை யாட்டிய அன்னம் நிற்காமல் நடந்தாள். அவரைக் கண் டாலே அவளுக்குப் பயம். ஆனால் இந்தச் சிறு நிகழ்ச் சியைக் கவனித்துவிட்ட கண்கள் பல அர்த்த புஷ்டி யோடு ஒன்றை யொன்று நோக்கின. இதைக் கவனித்த விதானையாருக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது— ஏன் ஆத்ம திருப்தியேதான்!

அன்னம் வீடு போய்ச் சேர்ந்ததும், "சீதேவிக் கிழவி கிணத்தடியிலை விழுந்து பேச்சு மூச்சில்லாமல் கிடக்கு தாம் அன்னம்! எட்டிப் பாத்திட்டு ஓடி வாறன். கத வைச் சாத்திப்போட்டு இரு," என்று அபிராமி போய்

விட்டாள். அன்னம் தாய் போனதையோ அவன் சொன்னதையோ கவனிக்கவில்லை. அவள் மனம் ஸ்தம்பித்துப் போயிருந்தாள். அன்னம் அழகின் அவதாரமாயில்லாவிட்டாலும் பெண்மையின் பூரிப்போடும் பொலிவோடும் விளங்கினுள். அவளை எடைபோட்ட வண்டுகள் பணத்தின் எடை தேடிப் பறந்துவிட்டன. அவள் மனத்தின் தாபம் தீரவில்லை. உணர்ச்சித் துடிப்பு அடங்கவில்லை. அவளுக்கு வாழ்வின் கதவம் திறக்கவில்லை. ஒருத்தி நெறி தவறிவிட இந்த மனேநிலை மட்டுமே போதாதா? ஆனால்· மாறாக, பருவத் தூண்டுதலை, வேகத்தை அடக்கிக் கட்டுப்படுத்தி வாழ்ந்தவளுக்குக் கிடைத்த பரிசு ஒழுக்கங் கெட்டவள் என்ற அவச்சொல். வளம் பெற்ற காவியமாய் வாழ நினைத்தவள் கருத்தற்ற கதை போலாகிவிட்டாளா? பெயர் முதல் பழக்கம் வரை அடக்கமே உருவான அன்னத்திற்கா இக்கதி?

கதவு பலமாகத் தட்டப்பட்டது. அன்னம் எழுந்து திறந்தாள். வாசலில் நின்ருர் விதானை வேலாயுதம். இந்த வேலாயுதம் வீட்டில் பொன்னி என்ற இளம் பெண் ஒருத்தி வளவு கூட்டிவந்தாள். அவள் விதானையின் வைப்பு என்று ஊர் கதைத்தது.விதானையாருக்குக் கல்யாணமாகி இரண்டு மாதமிராது. ஒரு நாள் அதிகாலையில் அவர் மனைவி கிணற்றில் மிதந்து கொண்டிருந்தாள். இருள் பிரியுமுன் குளிக்க வந்தவள் தண்ணீர் அள்ளும்போது தவறிக் கிணற்றில் விழுந்திருக்கவேண்டும் என்று விதானையார் சொன்னுர். 'கோர்ட்டு'ம் சொல்லிற்று.ஆனல் ஊர் என்னவோ வேறு விதமாகத்தான் பேசிற்று. அதன் பிறகு பொன்னிக்கு இரண்டு குழந்தைகள் கூட ..... .....

" என்ன அன்னம், ஒரேயடியாப் பாக்கிருய் ? " உல்லாசமாய்ச் சிரித்த விதானையார் உள்ளே நுழைந்தார். வீதியில் அவளோடு பேச்சுக்கொடுக்க முயன்றவரே தவிர இதுவரை அவர் இப்படி வீட்டிற்கு வரத்துணிந்தவரல்லர்.

" என்ன அம்மா இல்லையே ? " என்றவர் சுவாதீன மாகக் கதிரையில் அமர்ந்து அன்னத்தின் மேல் கண்களை மேயவிட்டார்.

" என்ன, பேசாமல் நிக்கிறாய்? உன்னோடை ஒரு விஷயம் பேசத்தான் வந்தனான்....." அவருடைய கண்களில் ஒரு வெறி, பசி! அன்னத்தின் உள்ளம் பயந்து நடுங்கியது. ஆனால் அந்தப் பயத்திலும் ஒரு புல்லரிப்பு! பெண்மையின் சிலிர்ப்பு! கடுமையாக நிமிர்ந்த அன்னம்,

" என்ன விஷயம் ? " என்றாள்.

"அன்னம், இன்னமும் எத்தனை நாள் இப்படித் தனிய இருப்பாய்? இந்த ஊரிலை என்னைத் தட்டிக் கேட்க ஒருத்தரும் இல்லை. நீ சீவியத்திலை காணாத காசு உன்டை கையிலை வழியும், இனி உன்னை ஒருத்தரும் கட்டிக் கொள்ளவும் மாட்டினம். என்டை பேச்சைக் கேட்டால் ராணி போல இருக்கலாம் ...... ......" ஏதேதோ தறிகெட்டுப் பேசினார் வேலாயுதம். அன்னத்திற்கு அவமானத்தால் உடல் குன்றியது. இப்படியெல்லாம் ஒருவர் அவளிடம் பேசும்படி அவள் என்ன பிழை செய்தாள் ? எங்கு தவறினாள்? தடுமாறினாள் ? ... ... அன்னம் சீறினாள்.

" மூடு வாயை! என்னை என்னவெண்டு நினைச்சுப் பேசிறாய்? நட வெளியிலை! " வேலாயுதம் திகைத்தார்— ஒரு கணம்தான் ! உடனே அவர் விழிகளில் ஏளனம் கெக்கலி கொட்டியது.

" ஏன் வேலுப்பிள்ளையின்டை காசுக்கு விலை போனது என்டை காசுக்கு விலை போகாதா ? "

" ஆ!" அன்னம் துடித்தெழுந்தாள்.

" எனக்கா தெரியாது உன்டை வண்டவாளம் ? ஊரெல்லாம் வெளிச்சமாப் போச்சுது. ரத்தினக்கா தான்

உங்களைக் கண்ணாலே பாத்தாவே ! ... ... " அன்னத்தின் மனதில் பளிச்சிட்டது ஒரு காட்சி. அங்கங்களை அடுத்தது காட்டும் பளிங்குபோல் எடுத்துக் காட்டும் நைலான் சேலையணிந்து வாசலில் நிற்கும் அன்னம், வாசற்படியில் ரத்தினம். படலையைத் திறக்கும் வேலுப்பிள்ளை. அன்னம் ஒரு பொருட்டெனக் கருதாது மறந்துவிட்ட சம்பவம். அதுவா இந்த அபவாதம் உருவாகக் காரணம்? சில நிமிஷ நேர உள்ளத் தடுமாற்றத்தால் விளைந்த வீண் பழியா? இரண்டும் இரண்டும் ஐந்தெனக் கணக்கிடும் ஊராரின் உபகாரமா? அன்னத்தின் ஆத்திரம் மழையில் நனைந்த நெருப்பாய் அணைந்தது.

" என்ன ...... என்ன சொல்கிறீர்கள்?" ஜீவனற்ற குரலில் முணுமுணுத்தாள்.

" பார் அன்னம்," வேலாயுதத்தின் குரலில் குழைவு தோன்றியது —"இங்கை பார். இதிலை ஐந்நூறு இருக்கிது. ஐந்நூறு இல்லை —ஐயாயிரம் — நீ மனம் வைச்சால் உனக்குத்தான். ஊரிலை ஒருத்தர் இதைப்பற்றி மூச்சுவிடாமல் பாத்துக் கொள்ளிறன் ...... ...... " அன்னம் நோட்டுக் கற்றையைப் பார்த்தாள். வேலாயுதத்தின் வெறிக் கண்களைப் பார்த்தாள். மேட்டில் இருந்தவள் சேற்றில் விழுந்துவிட்டாள். இனி இந்தச் சமூகச் சகதியிலிருந்து அவளுக்கு ஏது விடுதலை? அவள் தீக்குளித்து எழுந்தாலும் தூயவள் என்று ஒப்புக்கொள்ளுமா இந்த ஊர்? இல்லை. அவள் கெட்டவள் கெட்டவள்தான். அன்னம் வாழ்க்கையின் மேலுள்ள பிடிப்பை இழந்துவிட்டாளா? போராடும் உணர்வை இழந்துவிட்டாளா? சந்தர்ப்பக் கோளாறால் நேர்ந்த பழியை வாழும் நெறியாகக் கொள்ளப்போகிறாளா? ... ... அன்னம் தலை நிமிர்ந்தாள். இசைவு, வீழ்ச்சி அவள் கண்களில் தெரிந்திருக்கவேண்டும். வேலாயுதம் சிரித்தார்.

"அப்ப நான் இண்டைக்கு நேரஞ்செல்ல வாறன். அபிராமிக்கும் சொல்லிவை அன்னம்." வேலாயுதம் போய்விட்டார்.

அன்னத்திற்குத் திடீரென்று அடக்க முடியாத சிரிப்பு எழுந்தது. கல்யாணம் செய்யும் நோக்கத்தோடு அவளைப் பெண் பார்க்க வந்தவர்கள் மணந்து கொள்வதற்குக் கூலியும் கேட்டனர். ஆனல் பணத்தையும் தானே— கொடுத்து அவளைத் தனதாக்க முனைந்தவர் ஒருவர்தான் — வேலாயுதம்! அட கடவுளே! நெறியோடு முறையோடு மணம் பேசிச் சென்றல் மனைவி என்ற ஸ்தானத்தை அவர்களுக்குப் பெரு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. கரும்பையும் கொடுத்துச் சுவைக்கக் கூலியும் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆனல் அதே மனிதர்கள்தான் ஆசைநாயகிக்காகப் பணத்தை அள்ளி அள்ளி இறைக்கிருர்கள். அவள் கற்பை விலைகூறிய வேலாயுதம், சீரான முறையில் அவளை மணம் செய்து கொள்ள முன்வந்திருக்கலாமே! ... ... ...

அபிராமி திறந்த கதவின் வழியே வந்தாள்.

"என்ன அன்னம் கதவையும் சாத்தாமல்! ...... ......" அன்னம் கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

"அம்மா உடனே உங்கடை துணிமணிகளைப் பெட்டியிலை எடுத்து வையுங்கோ. நாங்கள் இண்டைக்கு, இப்பவே இந்த ஊரை விட்டுப்போகிறேம்!"

"என்ன தங்கச்சி, உனக்குப் பைத்தியமா? இங்கையிருந்து எங்கை போவது?" அன்னம் அபிராமியை வெறித்துப் பார்த்தாள். அந்தப் பார்வை அபிராமிக்கு அச்சமூட்டியது.

" எங்கையோ? .......... இவ்வளவு தூரம் வந்துவிட்ட நான் இனி எங்கெங்கெல்லாம் போகப் போகிறேனே? எதை யெல்லாம் காண்பேனே?", எனத் தனக்குள் முணு முணுத்த அன்னம் அதே விரக்தியோடு உரத்துச் சொன்னுள்—"இனி இந்த ஊரில் நாங்கள் வாழ முடியாது அம்மா. எல்லாம் பிறகு சொல்லிறன். இப்போ போய் ஆயத்தப் படுத்துங்கோ. நாப்பத்தைந்து நிமிஷத்திலே கொழும்பு ரயில் வெளிக்கிடும். அதைப் பிடிக்கவேணும்!" அன்னம் எழுந்து தன் பெட்டியைத் தூசி தட்டித் திறந்தாள்.

அக்டோபர், 1961.



# மன்னிப்பாரா ?

"மூர்த்தி, நான் பெற்ற ஒரே பிள்ளை நீயப்பா! என் ஆசை, கனவு,! கற்பனை எல்லாம் உன்னைப் பொருளாகக் கொண்டவை தானே! நீ வாழ்வில் துன்பத்தைத் தேவையை உணராது வாழ்வதற்கென்றால் எந்தத் தியாகமும் எனக்குப் பெரிதாக தோன்றவில்லை. என் இதயம் துடிப்பதே உன் நினைவால் மூர்த்தி! அந்த இதயம் வெடித்து நான் இறக்கவேண்டுமென்றால் அந்தக் குலம் கெட்டவளை மனங்குளிர மணந்துகொள். உன்னைப் பெற்றவர்கள் ஊரில் தலைதூக்கமுடியாது சிறுமைப்பட்டு, மனமுடைந்து சாவதுதான் சந்தோஷம் என்றால் அவளை மணந்துகொள்! ..... எங்கே, என்னைப் பார் மூர்த்தி— அவளை மறந்துவிடுவேன் என்று ஒரு வார்த்தை சொல்லி என் மனங்குளிரச் செய்யடா! ... ஒரு வார்த்தைதான்!..... பெற்றவள் கெஞ்சுகிறேன்..." மூர்த்தி அந்தக் காட்சியை நினைவு கூரச் சகியாதவன்போல் கண்களை இறுக மூடிக் கொண்டான். பெற்றவளின் மனதை மகிழ்விக்க மூர்த்தி அந்த ஒரேயொரு வார்த்தையைக் கொடுத்துவிட்டதால் இன்று உள்ளமும் உணர்வுமிழந்த உருவமாய் உலவுகிறான். அன்று மூர்த்திக்குப் பெருஞ்சோதனை. அவன் நிலைமை ஒன்றும் புதிதல்ல. யுகயுகமாய் இரு உணர்ச்சிகளுக்கிடையில் நிகழும் போராட்டம்தான் — ஒன்றைக் கடமை என்பர்! மற்றதைக் காதல் என்பர்! கதைகளில் படித்திருக்கிறான் மூர்த்தி. சினிமாவில் பார்த்திருக்கிறான். நேரில் கண்டுமிருக்கிறான். அவனுடைய ஐந்து நண்பர்கள் காதலித்தார்கள். அவர்களில் நால்வர் காதலை மறந்து

கடமை பெரிதெனக் கவலையற்றுக் கல்யாணமும் செய்து கொண்டார்கள். எஞ்சிய நண்பன் ஒருவன்தான் காதலில் வெற்றி கண்டான். ஆனால் அவன் காதலித்தவளோ அந்தஸ்துள்ளவள், அழகுள்ளவள், ஆஸ்தியுள்ளவள் — எல்லா விதத்திலுமே அவனுக்கு ஈடுகொடுத்தாள். இந்நிலையில் காதலுக்குத் தோல்வி ஏது? பிச்சையைக் கூடப் பாத்திர மறிந்துதான் இடச்சொல்லிவிட்டார்கள் பெரியவர்கள். காதலையும் அப்படித்தான் இடமறிந்து மதிப்பிட்டுக் கொடுக்கவேண்டுமோ ?

அந்தச் சம்பவம் நடந்து இன்று ஆறு மாதங்கள் சென்றுவிட்டன. நாளை உதயத்தில் சுசீலாவுக்குத் திருமணம். குலம், கோத்திரம் பார்த்துத் திருமணம். உலகின் உதயவேளையில் சுசீலாவின் வாழ்வும் மூர்த்தியின் வாழ்வும் அஸ்தமித்து இருள் பாய்ந்துவிடும். வீட்டு மாடியிலே அவன் அறையில் மூர்த்தியின் உருவம் சாய்வு நாற்காலியில் கிடத்தது. அவன் உணர்வோ தெருக்கோடியில் சுசீலாவின் கல்யாணக்களை தோய்ந்த வீட்டை நோக்கி ஓடி விட்டது. மூர்த்தி கைக்கடிகாரத்தைப் பார்த்தான் — மணி ஒன்பது. நாதஸ்வரகீதம் திறந்த ஜன்னலூடே காற்றில் மிதந்து வந்தது. மேள ஒலி அவன் இதயத்தைப் பிளப்பது போலிருந்தது. மனதில் பட்ட பச்சைக் காயம் ரணமாக வலித்தது. மூர்த்தி எழுந்து ஜன்னலை அறைந்து மூடினான். சுசீலாவின் குணத்திலே குறையில்லை என்றாலும் பிறப்பிலே குறை வைத்துவிட்டார் படைத்த கடவுள் அவளின் நிலையை அறிந்தும் தன் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார்களென்று தெரிந்தும் மூர்த்தி தன் உள்ளத்தை நெகிழவிட்டான். எண்ணும் திறனெனத் தனக்கு இருந்ததெல்லாம் அவளைச் சுற்றிப் படரவிட்டான். தன் அறிவின் எச்சரிக்கைக்குப் புறம்பான முடிவைக் கொண்டுவிட்டான். ஆனால் அந்த முடிவைப் பின்பற்றிச் செல்லவேண்டிய தருணத்தில் துணிவிழந்து கோழையாகி விட்டான்.

சுசீலா ஒளிவு மறைவு அற்றவள். அவள் மூர்த்தியிடம் எதையுமே மறைக்கவில்லை.

" மூர்த்தி, ஏழ்மையிலும் நான் கண்ட நிறைவே நான் தரக்கூடிய நிதியம். குணமே நான் தரும் குலம். ஆனல் நமது சமூகம் கொடுமை வாய்ந்தது மூர்த்தி. எண்ணித் தான் துணிந்தீர்களா? அல்லது இவை உணர்ச்சி வேகத் தில் பேசும் வார்த்தைகளா? "

" நான் துணிந்துவிட்டேன் சுசீ. உலகம் வேகமாக முன்னேறுகிறது. அந்த முன்னேற்றப் பாதையில் சாதி வரம்புகள் நிலைத்து நிற்க முடியாது. நாளைய உலகம் நம்மைத்தான் ஆதரிக்கும் சுசீ. இதில் சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது? " எவ்வளவு தன்னம்பிக்கையோடு மூர்த்தி அன்று பேசினன். இன்று மனச்சாட்சியின் உபாதை தாங்காது புழுப்போல் நெளிகிறன். சுசீலா அவனை நம்பினள். ஆமாம்! அவன் திண்மையில், திடசித் தத்தில் நம்பிக்கை வைத்தாள். இன்று அவள் எண்ணத் தில் ஒரு கணம் கூட நிலைக்கத் தகுதியற்றவன் ஆகிவிட் டான்.

மூர்த்தியின் மனம் கலாசாலை நாட்களை நோக்கித் தாவியது. எத்தனை இன்பமான நாட்கள் அவை. அந்த வாலிப சமுதாயத்திலே காதலுக்கு எதிர்ப்பு இல்லை. ஆத ரவுதான் கிடைத்தது. அந்தக் கவலையற்ற வாழ்க்கை ஓட்டத்தில் பெற்றேர்கள் எதிர்க்கக்கூடுமென்ற சிறு நினைவுகூடத் தேய்ந்துவிட்டது. வாழ்க்கையின் பரிதாபமே அதுதான். சீர்திருத்தக் கருத்துக்களைச் சிந்தையாய்க் கொண்ட இளைஞர் உலகம் சாதிசமய வேற்றுமைகளை மதிப்பதில்லை. அவை இன்றைய சந்ததிக்கு அர்த்தமற்ற வையாய்த் தோன்றும். அதனல்தான் பழமையில் ஊறிய முதிய சந்ததியின் மனப்போக்கு அதற்கு விளங்குவதில்லை. ஆசார அனுஷ்டானங்களில் ஊறிப் பழைய சமூக திட் டத்தைப் போற்றி வாழும் முதிய சந்ததி சமூக சீர்திருத்

தத்தை ஆதரிப்பதில்லை. சாதியை ஒழிப்பது சத்தியத்தை அழிப்பதை ஒக்கும் என்றெண்ணும் சந்ததி அது. அதனுல் தான் கடமையைப் பாசத்தைக் காட்டிக் களங்கமற்ற இளம் உள்ளங்களைச் சிதைத்து விடுகிறது. மூர்த்தியின் தந்தை கண்கலங்கக் காலில் விழாத குறையாகக் கெஞ்சினுர்.

"மூர்த்தி, உனக்கு வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் அளிக்க முடியாது போய்விடுமோ என்ற பயத்தால் எனக்கு வேறு குழந்தையே பிறக்காது பார்த்துக்கொண்டேன். விளையாட்டல்ல, மூர்த்தி. உண்மைதான். கடைசியில் எனக்கு நீ செய்யும் உபகாரம் இதுதானு ? மானத்தோடு வாழ்ந்துவிட்டேனப்பா ! மானத்தோடு என்னைச் சாகவிடு மூர்த்தி !" மூர்த்திக்கு மனம் தாளவில்லை. அவர் பச்சையாய்த் தம் உள்ளத்தைத் திறந்து காட்டியது அவனை என்னவோ செய்தது. உள்ளத்தில் கொப்பளிக்கும் ஆற்ருமைதானே அவரை அப்படிப் பேசச் செய்தது ? இப்படியும் ஒரு தியாகமா ?

" அப்பா ... அப்பா .. நீங்கள் விரும்பியபடியே செய்கிறேன் அப்பா !" மூர்த்திக்கு அப்பொழுது தன் குரலே வேற்று மனிதனின் குரல்போல் போல், விசித்திரமாக ஒலிப்பதுபோல் தோன்றியது. மூர்த்தி சற்றே உடம்பை நெளிந்து கொடுத்தான். பெற்ருேருக்கு நிம்மதி அளித்துவிட்டவன் தன் நிம்மதியைப் பறிகொடுத்துவிட்டான். அவன் இதயத்தில் செதுக்கப்பட்ட அந்த உயிரோவியத்தை என்ன முயன்றும் அவனுல் அகற்றிவிட முடியவில்லை. சுசிலாதான் அவனைப்பற்றி என்ன நினைத்திருப்பாள். அன்ெருருநாள் அவளிடம் பெரிதாக வீரம் பேசினுனே !

" மூர்த்தி, எங்கள் இருவரை மட்டுமன்றி, இது உங்கள் பெற்ருேரையும் சுற்றத்தையும் சம்பந்தப்பட்ட விஷயம். எங்கள் சமூகம் அப்படிப்பட்டது. எனக்காக

எந்த எதிர்ப்பையும் சமாளிக்கும் உறுதி உங்களுக்குண்டா? எனக்காக ரத்தபாசத்தின் பிணைப்பைக்கூட் உதறி விடமுடியுமா உங்களால்?" சுசீயின் உள்ள அடித்தளத்திலே இந்த அச்சம் சதா அரித்துக்கொண்டிருந்தது. நியாயமான அச்சந்தானே! மூர்த்தி அவளுடைய விரிந்த கண்களை, சற்றே திறந்த உதடுகளைப், புருவ வளைவைப் பார்த்துப் பாசத்தோடு, பெருமையோடு சிரித்தான்.

"சுசீ, தாழ்வில் நீ கண்ட திருப்திதான் வாழ்வில் எனக்கும் வேண்டியது. எனக்குச் சுற்றமும் சூழலும் இனி நீதானே? ஒருவருக்கொருவர் துணையாக வாழ்வது போதாதா சுசீ? என் மேல் அத்தனை அவநம்பிக்கையா உனக்கு?" அத்தனையும் சொற்கள்தான். வெறும் வெற்றுச் சொற்கள்தான். அன்று அந்தச் சிறுமிக்கு இருந்த அறிவு, தைரியம் — அவற்றில் ஒரு துளிகூட அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. அவள் உள்ளத்தின் நம்பிக்கை, ஆசை, கனவு, அத்தனையையும் குழிதோண்டிப்புதைத்துவிட்டான். சுசீலா அவனை நோகவில்லை; குற்றம் கூறவில்லை: வெறுக்கவுமில்லை.

"மூர்த்தி, உங்கள் பெற்றோரின் மனக்கசப்பின் அடிப்படையிலே நம் வாழ்வை அமைத்துக்கொள்வதால் சுகமில்லை உங்கள் மனைவியாக வருபவள் உங்கள் குடும்பத்தை வாழ்விக்க வருபவள் — குடும்பத்தை குலைக்க வருபவள் அல்ல. வருந்தாதீர்கள். காலம் உங்கள் உள்ளக்காயத்தை ஆற்றிவிடும்." அறிவு வார்த்தைகளை உருவாக்கி உதிர்த்தது. ஆனால் உள்ளமோ உடைந்து சுக்கலாகிக் கொண்டிருந்தது. அடக்க முடியாது கண்களில் பொங்கிய கண்ணீர் துடைக்கத் துடைக்கப் பெருகியது.

"சுசீ! உன்னை எப்படி மறப்பேன் சுசீ! உன்னை எப்படி மறப்பேன்?" சட்டென்று அவள் கைகளைப் பற்றித் தன் மார்பில் புதைத்துக் கொண்டான். சுசீ இன்னொரு

வன் உடைமையாவதா? முடியாது! முடியவே முடியாது!. வெறிபிடித்தவன் போல் அவளை இமையாது பார்த்து நின்றான்.

" சுசீ, உனக்களித்துவிட்ட இதயத்தை வேறெந்தப் பெண்ணுக்கும் என்னால் கொடுக்கமுடியாது சுசீ! எனக்கு மிக அருகில் இருந்த நீ இன்று அணுகமுடியாத இலட்சியம் ஆகிவிட்டாய். என் நெஞ்சில் நிலைத்த உன் நினைவிலேயே நான் வாழ்வில் திருப்தி காணுவேன். நீ என்னை மறந்து சந்தோஷமாக வாழவேண்டும் சுசீ ... ... மறுபிறவி என்று ஒன்றிருந்தால் ! ... ... "

மறுபிறவி ! தொடுவானம்போல உரு விளங்காத புரியாத மறுபிறவியை நினைத்து ஆசையை, உள்ளத் தாபத்தைத் தணித்துக்கொள்ளமுடியுமா?

மூர்த்தி பெருமூச்சுவிட்டான். மெல்லிய நாதஸ்வர ஒலி அடங்கி வெகு நேரமாகிவிட்டது. வெளியே பால் நிலவு காய்ந்துகொண்டிருந்து. உலக இருளுக்கு ஒளி ஏற்ற ஒரு நிலவு உண்டு! — அவன் உள்ள இருளுக்கு ? ... ஏன் இல்லை ? சுசீயின் நினைவு, அவன் உள்ளத்தில் என்றும் சிரிக்கும் சுசீயின் அழகு முகம் அவன் வாழ்வில் இருளென்பதே இல்லாமற் செய்துவிடும். ... விடிய ஆறு மணிக்குக் கோயிலில் முஹூர்த்தம் என்று கேள்விப்பட்டிருந்தான். கல்யாண வீட்டுக்காரர் எல்லோருமே தூங்கியிருப்பார்கள். உலகமே உறங்கிவிட்டது. ஆனால் அவன் உள்ளத்திற்குத்தான் இனி உறக்கமென்பதில்லையே ! சுசீலா தூங்குவாளா ? அல்லது அவனைப்போல் நினைவுகளால் அலைப்புண்டு தவித்துக்கொண்டிருப்பாளா ? சுசீலா தான் அதற்குள் திருமணத்திற்குச் சம்மதிப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. அதற்குள் அவனை அவளால் மறக்க முடிந்ததா? ஏன் மறக்கக்கூடாது? அவனை நினைத்து அவள் ஏன் உருகவேண்டும் ? நம்பி வந்தவளை நட்டாற்றில் விட்டுவிட்டான். ஏளனத்திற்கு, அவமானத்திற்கு, அவதூறுக்கு

ஆளாக்கிவிட்டான், அவனுக்காக அவள் வாழ்வெல்லாம் நிராதரவாய், நிறைவற்றவளாய் அலையவேண்டும் என்று நியதியா? ஆமாம். சுசீலா அவனை மறக்கத்தான் வேண்டும். அதுதான் அவனுக்குத் தகுந்த தண்டனை. ஆனால்... ஆனுல் மூர்த்தியால்தான் அவளை மறக்க முடியவில்லையே! அவன் அவளை மறக்க விரும்பவில்லையே! அன்று அவள் சொன்ன வார்த்தைகள் இன்றுபோல் அவன் காதில் ஒலித்தன.

"மூர்த்தி, உங்கள் மனைவியாய் வாழ நான் கொடுத்து வைக்கவில்லை. இருந்தும், நீங்கள் என்னை — என்னைமட்டுமே காதலிக்கிறீர்கள் என்ற நினைவே எனக்கு நிறைவளிக்கும். நான் எதற்காகவும் வருந்தவில்லை. நான் எங்கு சென்றுலும், என்னவானுலும் உங்கள் நினைவுதான் என்னை வாழ்விக்கும். மறவாதீர்கள்!" சுசீலா ஆழ்ந்து உணர்ந்து வாழ்பவள். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஏதோ அற்புதத்தை, ஜீவரகஸ்யத்தை உணர்பவள். அவளுக்கா இந்தக் கொடுமை நடக்கவேண்டும்? ..... கடவுளே ..... சுசீலாவின் அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவன் காதில் ஒலித்தன. இலைகளினூடே தென்றலின் முணுமுணுப்புப்போல அவள் குரல்தான் அந்த வார்த்தைகளை அவன் காதில் வந்து ஓதிற்று. ஏனே மூர்த்திக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. சுசீலா அருகிலிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. மூர்த்தி தன் இதயத்தை அமுக்கிப் பிடித்தான். முகத்தைக் கரங்களில் புதைத்துக் கொண்டான்.

"ஐயோ சுசீ!" உள்ளத்தைப் பிளந்து எழுந்தது அவ்வேதனைக் குரல். "ஐயோ சுசீ!" பாவம்! அவன் வேறென்ன சொல்லமுடியும்? வார்த்தைகளில் வடிக்க முடியுமா அந்த வேதனையை? சொல்லித் தெரியமுடியுமா அந்த இதயத்தின் வலி? அனுபவித்தல்லவா அறிய வேண்டும்!

"மூர்த்தி, மனச்சாட்சி ஒன்றின் முன்தான் மனிதன் இவ்வுலகில் மண்டியிடவேண்டும். மனச்சாட்சியின் சொற்படி வாழ்வை அமைப்பவன் தெய்வத்தின் வழி நடப்பவன் ஆவான்." மீண்டும் சுசீயின் அதே ரகஸ்யக்குரல். மூர்த்தி உடம்பைச் சிலிர்த்துக்கொண்டான். ஏன் இன்று மட்டும் இந்த எண்ணங்கள் அவன் நினைவில் தோன்றுகின்றன? சுசீயைப்பற்றி எத்தனையோ இனிய நினைவுகள், இன்பக் கதைகள் எல்லாம் இருக்க, இன்றுமட்டும் இந்தச் சில வார்த்தைகள் அவன் நினைவில் ஓங்குகின்றன. சுசீ நாளை இன்னொருவனை மணக்கப்போகிறாளென்றா? இல்லையில்லை. சுசீ உள்ளமும் உணர்வுமாக என்றும் அவனுக்கே உரியவள். அவளை மணக்கப்போகிறவன் — பாவம் — அவள் உடலைத்தானே ஆளப்போகிறான்? ஆமாம், அவள் தன்னை மறந்துவிட்டாள் என்று நினைத்தது மடத்தனம். சுசி தன் காதலின் நினைவை என்றென்றும் மறக்கமாட்டாள்! மறக்கமுடியாது. இந்த நினைவு மூர்த்தியின் நொந்த மனதிற்கு ஏதோவொரு நிறைவளித்தது... ...

சலக்... சலசலக்!...... மூர்த்தி திடுக்கிட்டுச் சப்தம் வந்த பக்கம் திரும்பினான். சலசலக்.....சலக்! மூடிய யன்னல் கண்ணாடியின் வெளிப்புறத்தில் சிறு கற்கள் மோதி விழுந்தன. யாரோ வெளியே நின்று அக்கற்களை எறிந்து அவன் கவனத்தைக் கவர முயல்கிறார்கள் போலும்! மூர்த்தி எழுந்து யன்னலைத் திறந்தான் — அங்கே ... ...... அங்கே ......

"சுசீலா!" மூர்த்தி மெல்லக் கூவினான். ஆமாம்! அவள் தான்! கரிய போர்வையால் முக்காடிட்டு இருந்தாள். நிமிர்ந்து மேல் நோக்கிய அவள் முகத்தில் நிலவொளி வீசியது. மூர்த்தி திரும்பிப் படிகளை இரண்டு எட்டில் கடந்து வெளியே ஓடினான். அவள் நின்ற இடத்தில் அவளைக் காணவில்லை! பிரமையோ என......

"மூர்த்தி?" மெல்ல இழைபோல் அவள் குரல் இருளிலிருந்து எழுந்தது.

“உண்மையாக நீயா சுசீ? இங்கு எப்படி வந்தாய்? உன்னைத் தேடமாட்டார்களா?”

“இல்லை மூர்த்தி. தலையிடி என்று சீக்கிரமே தூங்கச் சென்றுவிட்டேன். எல்லோரும் தூங்கிவிட்டார்கள். அறைக் கதவைப் பூட்டிச் சாவியை எடுத்து வந்தேன். விடியுமட்டும் என்னைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். அவர்கள் எழுந்திருக்குமுன் திரும்பிவிடுவேன்”.

“சரி. இங்கே நிற்கவேண்டாம். உள்ளே வா சுசீ. வீட்டில் என்னைத் தவிர ஒருவரும் இல்லை. அப்பா, அம்மா வெளியூர் போய்விட்டார்கள். வா!” அறையினுள் மூர்த்தி விளக்கை ஏற்றினன். சுசீலா கண்களைக் கூசிக்கொண்டு அவனுக்கெதிரே சுவரில் சாய்ந்துகொண்டாள்.

“நாளைக்கு எனக்குத் திருமணம்......” பாதி தனக்குள்ளும் பாதி உரத்துமாய் முணுமுணுத்த சுசீலா மூர்த்தியை நிமிர்ந்து நோக்கினள்.

“மூர்த்தி, நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் என்றதும் ஆச்சரியப்பட்டீர்களா? என் தாயின் திருப்திக்காக, இந்த சமூகத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்காகத் திருமணம் செய்துகொள்ள உடன்பட்டேன். மூர்த்தி, என் உள்ளத்தையும் உணர்வையும் உங்கள் ஒருவரால் தான் தொடமுடியும். ஆனல்...... ஆனல்..... இன்று என் உடலைக் கூட இன்னெருவன் தொடநேரும் என்ற நினைப்பையே என்னல் தாங்கமுடியவில்லை. மூர்த்தி, நான் உங்களுக்குரியவள். என் உள்ளமும் உணர்வும் உடலும் உங்களுக்குரியவை. என்வாழ்வு உங்களோடு ஆரம்பித்து உங்களோடு முடிவதொன்று. உங்களுக்குள்ளே அது என்றென்றைக்குமாய் ஒன்றிவிடட்டும். மூர்த்தி, ஆண்டவனுக்கு அர்ப்பணமாகிவிட்ட மலர் பொன்தட்டில் இருந்தாலும் புழுதியில் வீழ்ந்தாலும்

புனிதம் குறையாது. உங்களோடு ஒன்றுவதால் என் புனிதம் குறையாது மூர்த்தி!'' அவள் நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்,

''நீ என்ன.......... சொல்கிறாய் சுசி?" அவன் குரல் நடுங்கியது.

''உங்களுக்குப் புரியவில்லையா மூர்த்தி? இல்லை. உங்களுக்கு நன்றாகப் புரிகிறது. மூர்த்தி, காதலித்தவனையே கணவனாகக் கொள்வதுதான் கற்பெனில், இந்த என் முடிவு கற்பு நெறிக்குச் சிறிதும் புறம்பானதல்ல மூர்த்தி...........''

"உண்மையாகவா சுசி?'' கற்பனைக்கெட்டாத சுகம் என்று ஒன்று இருந்தால் மூர்த்தி அதை அக்கணம் உணர்ந்தான். சுசீலா ஓடிவந்து அவனருகே மண்டியிட்டாள்.

''மூர்த்தி, நேர்மையே உருவான உங்கள் சுசியா ஒழுக்கந் தவறிப் பேசுகிறாள் என்று நினைக்கிறீர்களா? இல்லை. என் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்ததால் தான் உங்களிடம் வந்திருக்கிறேன். உங்கள் உரிமையை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுங்கள். நமது வாழ்வை இக்கணமே வாழ்ந்து முடித்துவிடுவோம். கோடி இன்பங்களையும் ஒரு கணத்தினுள் குவித்துக்கொள்வோம். நாளை சுசீலா நடைப்பிணமாகிவிடுவாள்..........''

சட்டதிட்டத்தைச், சாதிவரம்புகளை மதித்தவர்கள் மனித இதயங்களை மதிக்கவில்லை. அதனால் சுசீலா இன்று பண்பிழந்தவளா? ஒழுக்கங்கெட்டவளா? வழுக்கிவிழுந்தவளா? — அன்றி இதுதான் வாழும் வீரமா?

சுசீலா துடிக்கும் உதடுகளைப் பல்லால் அழுத்திப் பிடித்தாள்.

''மூர்த்தி...... மூர்த்தி மானசீகமாய் மட்டுமன்றி என்ஞல் என்றுமே உங்களோடு வாழமுடியாது. ஆனுல்... ...இந்தக்கணம் உங்களோடு வாழ்கிறேன். இதை அறிந்தால் உலகம் என்னைக் கேவலமாய்க் கருதும்; பகிஷ்கரித்துவிடும். ஆனுல்..........ஆனுல் கடவுள் என்னை மன்னிப்பார் இல்லையா?''

''சுசீ!'' மூர்த்தி அவளை இறுக அணைத்துக்கொண்டான். "நிச்சயமாக நம்மை மன்னிப்பார்!''

வைகாசி,—1961.



# சந்திப்பு

சண்முகம் பாதியெரிந்த சிகரெட்டைத் தட்டில் போட்டு நசுக்கி அணைத்தான். தன் இதய உளைச்சலைப் போக்க முயல்வது போல் நெடுமூச்செறிந்தான். சுந்தரம் சொன்ன செய்தி உண்மையாய் இருக்குமோ என்று மீண்டும் மீண்டும் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். நேற்று மாலை சுந்தரம் அந்த விஷயத்தைச் சொன்னது முதல் அவன் இதயத்தைக் கணம் கணமாய் அரித்து வந்த கேள்வி இதுதான். கோமதி அப்படிச் செய்வாளா? சிச்சீ! அவள் அப்படிப்பட்டவளல்ல. இருந்தும்...... இருந்தும் சுந்தரம் தன் கண்ணால் கண்டதாகச் சொல்கிறானே! இல்லை சந்தேகம்தான் அவனுக்கு உடன்பிறந்த நோய் ஆயிற்றே! நன்றாய் அனுபவப்பட்ட பின்பும் அவசர புத்தியா? கண்ணால் காண்பதும் பொய்யாகக் கூடுமல்லவா? அப்படியல்லாமல் உண்மையாய் இருந்தாலும் அது அவள் குற்றமா? சண்முகம் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடுதாசித்துண்டை எடுத்தான் — இல. 24, அலோ அவெனியூ, கொழும்பு, என்று சுந்தரம் அதில் எழுதி இருந்தான். கோமதிக்கு நேர்ந்த கதிக்குத்தானே காரணம் என்று எண்ணிய சுந்தரம் அவளைத் தேடுவதில் முழுமூச்சாய் நின்றான். நேற்று மாலை முழுவதும் அவளைப் போய் பார் பாரென்று சண்முகத்தை அரித்தெடுத்தான். சண்முகம் அவளை இனிக் காண்போம் என்ற ஆசையை என்றோ விட்டுவிட்டான். அதோடு என்றாவது உள்ள அமைதி பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் இழந்திருந்தான். ஆனால் இப்போது! ...... சண்முகத்தின் உள்ளம் நிலைகொள்ளாமல் தவித்தது. இதயத்தில்

பொங்கிய பரபரப்பை, ஆவலை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அணைந்துவிட்ட அவன் ஆசைகளும் வேட்கைகளும் தணிந்து மடியும் நெருப்பு காற்றின் வீச்சினால் ஜுவாலைவிட்டு மூண்டெழுவது போல் மூண்டெழுந்தன. அவளைக் காணத் துடியாய்த் துடித்தான். ஆனால், அத்தனை ஆவலிலும் ஒரு தயக்கம் ஊடோடியது. அவன் கோமதிக்கு அளித்த வாழ்வுக்காக அவனை அவள் வரவேற்கப் போகிறாளா? வரவேற்கிறாளோ இல்லையோ, மனதில் சந்தோஷம் இல்லாவிட்டாலும் அமைதியாவது வேண்டாமா? இரவு பகலாய், கனவு நினைவாய் அவனை விரட்டி வந்த குற்ற உணர்வைத் தொலைப்பதென்றால் அவளைப் போய்ப் பார்க்கத்தான் வேண்டும்......

ஐந்து வருடங்களில் அவன் கணமும் மறந்தறியாத கோமதியின் அழகுருவைத் தன் மனக்கண்களால் மேய்ந்தான். சண்முகம், உதயத்திலே மலரிதழ்மேல் கூடி நிற்கும் பனித்துளிபோல மென்மையும் புதுமையும் கொண்டவளாய்க் காப்பற்றவளாய் நின்ற கோமதியைக் கதியற்றவளாக்கிவிட்டான். அவள் திரண்ட அங்கங்களில், வாளிப்பான உடற்கட்டில் பொதிந்த கவிதை, சலனமற்ற நீர்க் குளம்போல் ஆழ்ந்து அமைதியுற்ற கண்களின் அழகு, அவன் உணர்ச்சிகளைச் சுண்டியிழுக்கும் உதடுகளின் கீழேயமைந்த கரிய மச்சத்தின் கவர்ச்சி—அவன் ஆண்டு, அனுபவித்துப் போற்றிப் பேணியிருக்க வேண்டிய அழகு! அநியாயமாய்ப் போக்கிவிட்டான்! ஐந்து வருடங்களில் அவளிடத்து என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கும்? ...... சண்முகம் கதிரையை விட்டெழுந்து திரைச் சீலையை ஒதுக்கிச் சாளரத்தின் வழியே பார்த்தான் பலபலவென வானம் வெளுத்துக்கொண்டிருந்தது. 'இன்றைக்குக் கந்தோருக்கு லீவு போட்டுவிட்டு எப்படியாவது அவளைப் பார்க்கத்தான் வேண்டும்' என்று முனு

முணுத்தவன் பெருமூச்சோடு சாளரத்தை விட்டகன்முன்.

சண்முகம் தெருவோடு அவசர அவசரமாக விரைந்து கொண்டிருந்தான். சற்றுத் தயங்கிலுைம் மேலே நடக்கத் தைரியம் வராது என்றே என்னவோ ஓட்டமும் நடையுமாக விரைந்தான். அலோ அவெனியூவுக்குள் திரும்பித் தயங்காது நடந்தான். சுந்தரம் சொல்லியிருந்தான், வலது பக்கத்தில் ஆருவது வீடு என்று..........இதோ இல. 24 -சிறிய அடக்கமான வீடு. சண்முகம் நடையைத் தளர்த்தாது அதே வேகத்தில் வீட்டையடைந்து கதவைத் தட்டினன். வாசற்படியில் நின்ற அந்த ஒரு கணத்தில் திடீரென அவன் தைரியம் எல்லாம் வடிந்து திரும்பி விடட்டுமா என்று நினைத்தான். அதற்குள் வேலைக்காரன் கதவைத்திறந்தான். சண்முகம் உலர்ந்த உதடுகளில் நாவை ஒட்டிவிட்டுக் கேட்டான்,

"ஐயா...இருக்கிருரா?"

"இல்லை. கந்தோருக்குப் போட்டார்". சண்முகம் தயங்கினன்.

''அம்......அம்மா இருக்கிருவா?''

''இருக்கிரு. உக்காருங்க ஐயா. உங்கள் பேர் என்ன''?

"பேரா?...... பேர்... சண்முகம்... சண்முகம்.'' அவன் யாரென அறிந்த பின்னும் அவனைப் பார்க்க அவள் சம்மதப்படுவாளா? ஏன் பெயரைச் சொன்னேம் என்று ஆயிற்று சண்முகத்திற்கு. இல்லை. அவனைக்காணவேண்டுமென்ற ஆவல் அவளுக்கிருக்காதா? அவன் எதற்காக வந்திருக்கிருன் என்றறிய விரும்பாளா? இந்த இதயம் ஏன் இப்படி அடித்துக்கொள்கிறது, அறையெங்கும் எதிரொலிப்பது போல் என்று எண்ணினன் சண்முகம். சண்முகம் அறைவாசலையே வெறித்துப் பார்த்தான்..........

ஓசைப்படாமல் நடந்ததால் கோமதி திடீரென வாசலில் தோன்றினுள். சண்முகம் கதிரையைவிட்டுப் பாதி யெழுந்தான். அவள் அமைதியாக நடந்து வந்து அவனுக்கு எதிரே ஒரு கதிரையில் அமர்ந்தாள். அவளைக் காணும் ஆவலில் துடித்தவன் ஏனே தலையைக் குனிந்து கொண்டான். ஆனல் கோமதி மௌனத்தைக் கலைக்கப் போவதாய்த் தெரியவில்லை. அந்த மௌனத்தின் நெருக்குத்தைத் தாங்க இயலாதவனுய்த் தலை நிமிர்ந்தான். கோமதி முன்னைவிடச் சற்று மெலிந்திருந்தாளே தவிர அவள் உருவத்தில் வேறு மாறுதலில்லை. ஆனல் அவள் கண்கள் தான் அவன் இதயத்தைத் தாக்கின. அந்த ஆழ்ந்து அமைதியுற்ற கண்களில் தெரிந்த விரக்தி—இல்லையில்லை—வெறுமையைக் கண்டு அவன் உள்ளம் அதிர்ந்தது. அதை அவனுல் தாங்க முடியவில்லை. எதையாவது பேசித் தொலைக்கவேண்டும் போலிருந்தது........

"கோமதி, அன்று நடந்ததற்கு......"

"அன்று நடந்ததற்கு?..........." அவள் கேள்வியில் ஏளனத்தின் மெல்லிய இழையோடியது.

"என்னை மன்னித்துவிடு என்று கேட்பதில் அர்த்தமில்லைத்தான். ஆனுலும் என் உள்ளத்தின் அடியிலிருந்து கேட்கிறேன். என்னை மன்னித்துவிடு. என் ஆத்திரம் அடங்கிய பின்தான் சுந்தரத்திடம் உண்மையை அறிந்தேன். உன்னை அன்று முதல் தேடிக்கொண்டேயிருக்கிறேன்.........." கோமதி சண்முகத்தைப் பார்த்தாள். முன் நெற்றி மயிர் வெகுவாக உதிர்ந்து அவன் நெற்றி மேலும் அகன்றிருந்தது. அவனுடைய தீட்சண்ணியமான கண்கள் ஒளி மங்கிப் புதைந்திருந்தன. இறுக, அழுத்தி மூடிய உதடுகள் உள்ள உணர்ச்சிகளை அடக்கி அடக்கி வந்ததன் அறிகுறி போலும்..........

அன்று நடந்ததற்கு......

இருவரும் மௌனத்தில் மூழ்கினர். இருவர் மனதிலும் அதே நிகழ்ச்சிகள் நிழலாடின...... அன்று ஐந்து மணிக்கெல்லாம் சுந்தரம் வந்துவிட்டான்.

"என்ன கோமதி, சண்முகம் இன்னும் வரவில்லையா?" என்று கேட்டவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். சுந்தரம் சண்முகத்தின் நெருங்கிய நண்பன். மணமாகாதவன்.

"இவன் எங்கே தொலைந்தான்? ஒரே பசியாய் இருக்கிறதே, கோமதி" என்று புறுபுறுத்தான் சுந்தரம்.

"அவர் வரட்டும். நீங்கள் சாப்பிடுங்களேன்! நேற்று அவர் ஆப்பிள் வாங்கி வந்தார்." கோமதி ஒரு தட்டில் மூன்று நான்கு பழங்களும் கத்தியும் கொண்டுவந்து கொடுத்தாள்.

"கத்தி சரியான கூர், கவனம்!"

நறுக்! அவள் சொல்லி முடியக் கத்தி அவன் விரலைப் பதம் பார்த்துவிட்டது. விரலிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது.அதைப் பார்த்ததும் சுந்தரத்திற்கு உடலெல்லாம் சோர்ந்து தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. அவன் அப்படியே மயக்கமாய்ச் சாய்ந்துவிட்டான். நல்ல வேளை அது சாய்வு நாற்காலி.கோமதிக்குக் கை கால் ஓடவில்லை. சுந்தரத்தின் முகம் வெளிறிப் பயங்கரமாய் ... ... அவன் சட்டைப்பையில் தலைநீட்டிய கைக்குட்டையை எடுத்து மேசையிலிருந்த 'கிளாஸ்' தண்ணீரில் தோய்த்து அவன் விரலுக்குக் கட்டுப்போட்டாள். அவனை விட்டகலவும் பயம். அப்படியே பிரேதம் மாதிரிக் கிடந்தான். கோமதி தன் முந்தானையின் ஒரு மூலையைத் தண்ணீரில் தோய்த்து அதால் சுந்தரத்தின் முகத்தைத் துடைக்கலானாள். அறைக்குள் நுழைந்த சண்முகம் இந்தக் காட்சியைக் கண்டு மலைத்து நின்றான். அவன் நெற்றி நரம்பு புடைத்தெழுந்தது. அவன் முகத்தில் பொங்கிய சினத்

தைக் கண்ட கோமதி வெலவெலத்துப் போனாள். அவன் அவளையே வெறித்துப் பார்த்தான். அதைத் தாங்க இய லாது அவள் தலை குனிந்தாள். அப்பொழுதுதான் அவளுக் குத் தண்ணீரில் தோய்த்த முந்தானையைக், கையிலிருந்த கிளாஸைப் பற்றிய உணர்வு ஏற்பட்டது. அவளுக்குப்பேச நாவெழவில்லை. சண்முகம் பேசாமல் அவளைத் தாண்டி உள்ளே தன் அறைக்குள் போனான். கோமதி சுந்தரத் தின் வெளிறிய முகத்தைப் பார்த்தாள். தயங்கித் தயங்கி சண்முகத்தின் அறை வாசலை அடைந்தாள்.

" அ...த்தான், அவர் மயக்கமாய்க் கிடக்கிறார், வந்து பாருங்களேன் " சண்முகம் ஆத்திரத்தோடு அவளருகே வந்து முரட்டுத்தனமாகத் தோளைப் பிடித்து அவளை வெளியே தள்ளிவிட்டு அறைக் கதவைச் சாத்தி னான். கோமதிக்கு அடிவயிற்றிலிருந்து அழுகை பொங்கி யெழுந்தது...... வாய்விட்டுக் கதறவேண்டும் போல்... சுந்தரத்தை நினைத்தவள் அவனிடம் போனாள். சுந்தரம் எழுந்து உட்கார்ந்திருந்தான்.

"கோமதி, எனக்குச் சின்ன வயசிலிருந்து இப்படித் தான். இரத்தத்தைக் கண்டால் தாங்க முடியாது...நான் வீட்டுக்குப்போய் படுக்கப் போகிறேன்..."

" தனியாய் எப்படிப் போவீர்கள்?"

"நான் 'டாக்ஸி'யில் போகிறேன். சண்முகம் வந்தால் சொல்." கோமதி உயிரற்றவள் போல் தலையசைத்தாள். சண்முகம் அவன் போகும்வரை காத்திருந்தவன் போல் வெளியேவந்தான். கோமதியின் இதயத்தில்பீதி சூழ்ந்தது.

"அத்...தான், அவர் விரலை வெட்டிக்கொண்டு மயக்க மாய் விழுந்திட்டார்........."

"வாய்ப்பான மயக்கம் தான்!" வார்த்தைகளைக் கக்கு வதுபோல் சொன்னான்.

"அத்தான்—"

"சிச்சீ! கேடு கெட்டவள்! வெளியே போ! விபசாரி!"

"ஆபத்துக்குப் பாபமில்லை அத்தான். இந்தச் சின்ன விஷயத்துக்கு............", அவள் குரலில் கோபம் தலை தூக்கியது.

"விபசாரி!" வேண்டுமென்றே சொன்னான். "இந்த வீட்டில் உனக்கு இடமில்லை. போ வெளியே!" அவள் கெஞ்சக் கெஞ்ச அவளைப் பிடித்து வெளியே தள்ளி வாசற்கதவை மூடினான்.

கோமதி இமைகளூடே சண்முகத்தைப் பார்த்தாள். துரியோதனன் கூட எடுக்கவோ கோக்கவோ என்று கேட்கும் அளவுக்குப் பண்பு படைத்தவனாயிருந்தான் என்று நினைத்தாள். அன்று அவள் யாராவது சிநேகிதியிடம் அடைக்கலம் புகுந்திருக்கலாம். ஏன் சுந்தரத்தையே உதவி கேட்டிருக்கலாம். ஆனால்-

"நீ பிடிவாதக்காரி, கோமதி." கோமதி சற்று ஆச்சரி,, யத்தோடு அவனைப் பார்த்தாள்.

"ஏன், எனக்கு மான உணர்ச்சி இல்லையா?" சண்முகம் நெட்டுயிர்த்தான்.

"எப்படியாவது உன்னைக் கண்டு பிடித்து உனக்கிழைத்த அநீதிக்கு ஈடுசெய்ய வேண்டுமென்ற ஆசை தான் என்னை இயக்கிவருகிறது. உன்னை எங்கெல்லாம் தேடினேன்..."

"நான் என்ன ஆனேன் என்று அறியவேண்டுமா?" கோமதிசிரித்தாள்—வரண்ட சிரிப்பு. "என் ஐந்து வருட வாழ்க்கையைப் பற்றித் தெரியவேண்டாமா?"

"வேண்டாம் கோமதி. அதைப்பற்றி நான் ஒரு நாளும் கேட்கமாட்டேன். நீ மட்டும் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்." கோமதி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உண்மை தெரிந்தால் இப்படிச் சொல்லமாட்டீர்கள். அன்று ஒரு குற்றமறியாத என்னை விபசாரி என்று சொல்லித் தெருவில் தள்ளி விட்டீர்கள். ஆனால் இன்று தான் நான் உண்மையில் விபசாரி..."

"கோமதி!" தன்னையறியாமல் கூவிவிட்டான். அவன் தொட்டுத் தாலி கட்டிய பெண் இவள்-அவன் மனைவி. அவள் சொல்லுமுன்பே அதைப்பற்றி அவனுக்குத் தெரியுமென்பது உண்மை தான்' ஆனால் அதை அவள் வாயிலிருந்தே கேட்கும் பொழுது அவனால் அந்த இதய வலியைத் தாங்க முடியவில்லை. அவளுடைய வெறிச் சோடிய கண்களை நோக்கினான்..........ஒரு காலத்தில் அவனைக் காதலோடு, கனிவோடு நோக்கிய கண்கள். ஆனால் இப்போது அவை அவனைக் கண்டதாகவே படவில்லை. அவனைப் பார்க்கப் பார்க்க அவள் உள்ளமும் ஆன்மாவும் எங்கோ வெகு தூரத்திற்குச் சென்று விட்ட உணர்வு கூடியது. அவள் உடல் இங்கிருந்தது. ஆனால் அவள் இங்கில்லை...........கோமதி உணர்ச்சியற்றுச் சிரித்தாள்.

"உங்கள் மனதைப் புண்படுத்தச் சொல்லவில்லை ஆனால் நீங்கள் அறிந்து தீர்மானிக்க வேண்டுமென்பதற்காக....."

"கோமதி, நடந்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. முழுமனதோடு கேட்கிறேன். என்னோடு வந்துவிடு கோமதி." கோமதி யன்னல் வழியே நீல வானத்தைப் பார்த்தாள். தன்னந்தனியே வெண் முகிலொன்று மிதந்து கொண்டிருந்தது. ஏகாம்பரத்தின் மெலிந்து நெடிதுயர்ந்த உருவம் கோமதியின் நினைவில் எழுந்தது. நரைபாய்ந்த அடர்ந்த கேசம். சுருக்கம் விழுந்த நெற்றி.

காருண்ய விழிகள். குழந்தையினது போன்ற மிருதுவான நிறைந்த உதடுகள். கோமதி பலவகையான மனிதர்களைப் பார்த்திருந்தாள். ஆனால் ஏகாம்பரத்தைப் போல் பரிவும் அன்பும் மிக்கவரை அவள் கண்டதில்லை. மூன்று நாள் அவளிடம் அடுத்தடுத்து வந்தார். நான்காவது நாள் தயங்கித் தயங்கிக் கேட்டார், "என் மனைவி பல ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டாள். ஒரு மகன்தான். அவன் என்னோடு இருப்பதில்லை. எனக்கு உன்னை நன்றாகப் பிடித்து விட்டது. உனக்கு விருப்பமென்றால் என்னோடு வந்துவிடேன்." கோமதி, உடனேயே இணக்கம் தெரிவித்தாள். ஏகாம்பரத்திற்குத் தன்னிடம் உண்மையிலே அன்பு உண்டு என்பதைச் சில நாட்களில் கோமதி உணர்ந்து கொண்டாள். அவள் போய்விட்டால் அவர் நிச்சயம் வருந்துவார். கோமதி சண்முகத்தைப் பார்த்தாள். அவளைப் பழியேற்றிப் புறக்கணித்தவன். இருந்தும் கணவன்.

"நான் வர முடியாவிட்டால்?........."

'வர முடியாதா? சட்டபூர்வமாக நீ என் மனைவி. உன்னையார் தடுக்கமுடியும்?" கோமதி ஒரு கணம் யோசித்தாள்.

"சரி, நான் வர விரும்பாவிட்டால்?—"

"கோமதி!" ஒலியற்றுச் சொல்லைக் கூட்டின அவன் உதடுகள்.

"ஆமாம் எப்படி வாழ்ந்தாலும் இனி எனக்கு ஒன்றுதான்...." அதைச் சண்முகம் நம்பினான். இனி அவளை எதுவுமே தொட முடியாது. அவள் உள்ளமும் உணர்வும் இந்த வாழ்க்கையின் புறத்தே, அதன் பிடிக்கு அப்பால் நின்றன. அதோடு அவன் புரிந்தும் கொண்டான். அவளைச் சக்தியில் தள்ளிவிட்டது அவன், அவள் கணவன்

ஆனல் அவளுக்குக் கைகொடுத்து உதவியது வேருெருவன் தான். சண்முகம் எழுந்தான். இதயச் சுமையை இறக்கி விட வந்தவன் அதைவிடப் பெருஞ் சுமையை ஏற்றிக் கொண்டு விட்டான். அவனுடைய வேதனை விழிகளும் அவளுடைய வெறுமை விழிகளும் ஒரு கணம் சந்தித்தன. சண்முகம் திரும்பி வீட்டை விட்டு வெளியேறினன்.

ஆனி,—1962.



# மனிதன்

கைநிறைய மணலை அள்ளி விரல் இடுக்குகளின் வழியே வழிய விட்ட மாயா கலகலவென்று நகைத்தாள். கடற்கரையின் மணற்பரப்பில் அவளுக்கு எதிரே அமர்ந் திருந்த சுரேஷ் அவளையே கண்கொட்டாமல் பார்த்தான். மாயாவின் எழிற்சிரிப்பிலே அவனுடைய சிந்தை மயங் கித் தடுமாறியது......

"எதற்காக இத்தனை அவசரப்படுகிறீர்கள் சுரேஷ்?" குறும்பாகக் கேட்டாள். சுரேஷ் பெருமூச்செறிந்தவாறு கடலை நோக்கினான்.

"மாயா, கரையைத் தழுவும் ஆவலில் இந்த அலை கள் தலைதெறிக்கும் வேகத்தோடு தாவிப் பாய்ந்து வரு வதைப் பார்! என் உள்ளத்தின் தன்மையை, உணர்ச் சியின் வேகத்தை இந்த அலைகளின் வேகத்தில் காண் கிறாய் மாயா! நம் கல்யாணத்திற்கு ஏன் அவசரப்படு கிறேன் என்று நீ கேட்கிறாய்! ஒரு காதலி தன் காதல னைப் பார்த்துக் கேட்கும் கேள்வியா இது?" மாயாவின் கண்களில் குறும்பு கூடியதே தவிரக் குறைவதாகத் தெரியவில்லை.

"நீங்கள் அலை, நான் கரை—அப்படியா சுரேஷ்? வேண்டவே வேண்டாம்! கரையில் மோதியதால் அத்தனை

பெரிய அலை சிதறித் தூளாகிவிட்டதே சுரேஷ் ! ...... ...... வானும் நிலவும், வீணையும் நாதமும் இப்படி ஏதாவது கூறுங்கள்!''

''மாயா, இருந்தாலும் உனக்கு இத்தனை குறும்பு ஆகாதம்மா!'' ஆள்காட்டி விரலைக் காட்டி அவளை வேடிக்கையாகப் பயமுறுத்திய சுரேஷ் அவள் சிரிப்பில் கலந்துகொண்டான்.

''இல்லை சுரேஷ்! திடீரென்று நம் விஷயத்தை அப்பாவிடம் எப்படிக் கூறுவது? அப்பாவே கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கட்டும், சொல்லலாம் என்றிருக்கின்றேன்.'' இத்தனை காலமும் தன் கருத்திற்கு மாருகச் சொல்லாத தந்தை இவ்விஷயத்திலா தடை நிற்கப் போகிருர் என்று நினைத்துக்கொண்டாள் மாயா..........தன் கைக்கடிகாரத்தைப் பார்த்த மாயா மணலைத் தட்டிக் கொண்டு எழுந்தாள்.

''நேரமாகி விட்டதே சுரேஷ்! அப்பா தேடுவார்''

''சரி மாயா, வா போவோம்.'' மனமின்றி எழுந்த சுரேஷ் மாயாவின் 'கார்'வரை அவளோடு நடந்தான். காரை ஓடத்தொடக்கிய மாயா ஒரு கையை ஒய்யாரமாகத் தூக்கி அசைத்தாள். அவளுடைய மெல்லிய விரல்களின் பிடியில் அந்தப் பெரிய'கார்' கட்டுக்கடங்கிய காட்டுயானைபோல் அமைதியாக ஓடியது. மாயாவின் சிந்தனை சுரேஷைச் சுற்றி ஓடியது. சுரேஷ் இன்று ஒரு பிரசித்திபெற்ற எழுத்தாளன். இளவயதிலேயே இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு தனியிடத்தை ஆக்கிக்கொண்டு விட்டான். தற்போது ஒரு பத்திரிகை ஸ்தாபனத்தில் வேலை பார்த்து வந்தான். அவனது குடும்பமோ பெரியது! அவன் மாதாமாதம் வாங்கும் எளிய சம்பளத்தைத்தான் நம்பி வாழ்ந்தது......

ஆனல் மாயா? - அவளோ ஆயிரங்களைச் சதங்களாக மதிக்கும் தந்தைக்கு ஒரேயொரு குழந்தை. கல்வியும் அழகும் அவளிடம் குறைவின்றி நிறைந்திருந்தன. சிந்தனையால் சுருங்கிய நெற்றியோடு, கவலை குடிகொண்ட கண்களோடு தன் வீட்டுப் படலைக்குள் 'காரை'த் திருப்பினுள் மாயா. வீட்டிற்குள் நுழைந்தவளை அவள் தந்தையின் குரல் வரவேற்றது.

"மாயா, இங்கே வாம்மா!", என்று ராமேஸ்வரம் குரல் கொடுத்தார்.

"என்னப்பா?" என்று வினவியவாறே அவரது அலுவலறைக்குள் நுழைந்த மாயா, அங்கு அவரோடு உரையாடிக்கொண்டிருந்த வேற்று மனிதரைக் கண்டதும் தயங்கி நின்ருள்.

"மாயா, இவர் டாக்டர் ரகுநாதன். இவள் தான் என் மகள் மாயா, தம்பி!"

"வணக்கம்." கைகுவித்த அவ்விளைஞனைக் கண்களை மலர்த்தி நோக்கினுள் மாயா. நெடிதுயர்ந்த வடிவம், சுருண்டு அடர்ந்த கேசம், தீர்க்கமான நாசி, மெல்லிய உதடுகளை அலங்கரித்த சிறு மீசை—சந்தேகமில்லாமல் ஆணழகன் தான்.

"வணக்கம்!", என்று பதிலுக்குமுறுவலித்தாள் மாயா, ரகுநாதன் விடைபெற்றுச் சென்றதும் ராமேஸ்வரம் மாயாவை அருகில் அழைத்துக்கொண்டார்.

"மாயா." கேள்விக்குறியோடு தந்தையை நோக்கினுள் மாயா. ராமேஸ்வரத்தின் சுருங்கிய முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது.

"மாயா, ரகுநாதனை நன்ருகப் பார்த்தாயா? கண் நிறைந்த அழகோடு இருக்கிருன், இல்லையா அம்மா?" மாயாவுக்கு இந்தக் கேள்வி ஆச்சரியம் அளித்தது. மௌனமாக அவரைப் பார்த்தாள்!

"ரகுவைத் தானம்மா உனக்கு நிச்சயம் பண்ணி யிருக்கிறேன்!"

"அப்பா!" யாரோ இரும்புக் கைகளால் இரக்கமின் றித் தன் கழுத்தை அணு அணுவாய் நெரிப்பது போல் மாயாவுக்கு மூச்சு முட்டியது. காதை அடைத்துக்கொண்டு வந்தது..........ராமேஸ்வரம் தம் போக்கில் பேசிக்கொண்டே போனார்.

"ஆமாம் மாயா. தாயற்ற உன்னைக் குறைவின்றி வளர்க்க வேண்டுமே யென்ற கவலையில் நான் உறங்காத இரவுகள் எத்தனையோ! தாயைப்போலத் தன் பெண் ணின் மனதைத் தந்தை புரிந்துகொள்ள முடியுமா அம்மா? ரகுவைப் போன்ற ஒருவன் தான் உன் கணவனாக வாய்க்க வேண்டும் என்று கனவு கண்டேன் மாயா. அழகும் குணமும் அளவிறந்த ஆஸ்தியும் அவனுக்கு உண்டு.........."

"அப்பா!" யந்திரம் போல் மாயாவின் உதடுகள் அசைந்தன.

"இத்தனை நாளும் உன்னைக் கண் கலங்காமல் காத்து விட்டேன். ஆனால் நான் இன்னும் பல நாள் வாழப்போவ தில்லை. கஷ்டத்தை அறியாத உன்னை இனியும் குறை வின்றிக் காக்கும் கணவனைத்தேடி விட்டேனம்மா.......... எங்கே, இந்தக் காலத்துப் பெண்களைப்போல யாராவது பனாதி, பரதேசியைத் தான் மணப்பேன் என்று பிடிவா தம்பிடிப்பாயோ என்று நான் பயந்ததும்உண்டு, மாயா... எங்கே மாயா....." ராமேஸ்வரம் மகளின் முகத்தைப் பார்த்தார்—"என்னைப் பார்த்துச் சொல் மாயா. ரகுவை உனக்குப் பிடித்துவிட்டதா?" மாயா புரிந்து கொண் டாள். ராமேஸ்வரம் அவளைச் செல்லமாகத்தான் வளர்த் தார். ஒரு பொருள் தனக்குத் தேவையென்று அவள் வாய் திறக்குமுன் வாங்கிவந்து விடுவார். கலாசாலைக்குச் சென்று மேல் படிப்புப் படிக்க விரும்பினாள்; படிக்கவிட்

டார். அவள் கேட்காமலே அவளுக்கென்று தனியே ஒரு 'காரும்' வாங்கினர். அவள் எங்கு சென்ருலும் ஏனென்று கேட்டதில்லை! ......ஏன்? ...ஏன்?......ஏனு? ஒரு மகனுக்கு அளிப்பதைப் போல் இத்தனை சுதந்திரம் அளித்தும் தன் மகள் பண்பு கெடாமல், தன்னை மறக்காமல் நடந்து கொள்கிருளே என்ற துணிவில் தான் தந்தை தன்னை இப்படி வளர்த்தார் என்று உணர்த்தாள் மாயா. முற்போக்குக் கருத்துடையவர் தான் ராமேஸ்வரம். ஆயி னும் அவர் மனம் பழமையை முற்றிலும் உதறிவிட ஒப்ப வில்லை. பழமையும் புதுமையும் சங்கமமாகிய உள்ளம் கொண்டவர் ராமேஸ்வரம். ரகுநாதனை அவள் தானே சந்தித்துக் காதலித்திருந்தால் ராமேஸ்வரம் சந்தோஷப் பட்டிருப்பார். ஆனல்..........ஆனல் அவள் காதலிப்பது சமூ கத்தின் சாக்கடையில் உழலும் சுரேஷையல்லவா?...... மாயாவுக்கு அழுகை தான் பொங்கி எழுந்தது...மேஜை யில் கைகளை மடக்கியவள் அப்படியே தன் முகத்தை அவற்றில் கவிழ்ந்துக்கொண்டாள். அவள் கண்களில் பெருகிக் கைகளை நனைத்த கண்ணீரை ராமேஸ்வரம் காணவில்லை. அவள் மனதில் மின்னலாய்ப் பளிச்சிட்ட எண்ணங்களை அவர் அறியவில்லை. சந்தோஷமாய்ச் சிரித் தவர், மாயாவின் தலையை வருடினர்.

"இத்தனை படித்த பெண் நீ, இப்படி வெட்கப்படு வாய் என்று நான் நினைக்கவேயில்லை! நல்ல பெண் நீ யம்மா!" சிரித்துக்கொண்டே அவர் போய்விட்டார்.

மாயா எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தாளோ தெரியாது. அவள் மெல்லத் தலையைத் தூக்கிய பொழுது அறையினுள் இருள் படர்ந்து கொண்டிருந்தது. மரத்துப் போன அவள் மூளை மெல்ல வேலை செய்யத்தொடங்கி யது.....தந்தையின் சொற்கள் முழு வேகத்தோடு அவ ளைத் தாக்கின. கடவுளே! இது என்ன சோதனை! சுரே ஷைப் பற்றி அறிந்திருந்தால் ரகுநாதன் அவளை மணக்கச் சம்மதித்திருப்பானு? முன்பின் அறியாத அவரையும்

ஏமாற்ற வேண்டுமா? அப்பாவிடம் எடுத்துக்கூறினல் அவர் நிச்சயம் புரிந்துகொள்வார் — அப்பா? பாவம் அப்பா! சிறு குழந்தை போல் எவ்வளவு சந்தோஷப் பட்டுக்கொண்டு சென்ருர். அவர் எது நடந்து விடக் கூடாதென்று பயந்தாரோ அது நடந்தே நடந்து விட்டது என்று அறிந்தால் தாங்குவாரா? பட்ட மரம் புயல் வீசினல் சாய்ந்து விடாதா? ஐயோ! இதை அறிந்தால் அந்தக் கிழ மனம் பதறிப் பதறித் துடித்துத் துடித்து உயிரை விடாதா? அவளைத் தவிர உலகில் அவருக்கு என்ன இருக்கிறது?..............அதனல்?..................அதனல் மூன்று பேரின் வாழ்வைப் பலியிடுவதா? அப்பாவிடம் சொல்லியே தீரவேண்டும். அவரை ஒப்புக்கொள்ள வைப்பதைத் தவிர வேறு வழியே இல்லை...........மாயா தீர்மானத்தோடு எழுந்து வெளியே சென்ருள்.

"என்ன சொல்கிருய் மாயா? உன்னை மறந்து விடுவதா? விளையாடுகிருயா என்ன?" சந்தேகத்தோடு கேட்டான் சுரேஷ், மாயா அவனை நிமிர்ந்து நோக்கினுள்.

"இல்லை சுரேஷ், விளையாடவில்லை. அப்பாவிடம் எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். அவர் நம் மணத்திற்குச் சம்மதமளிக்க மறுத்துவிட்டார். எனக்கு வேறு வரன் பார்த்து நிச்சயித்தும் விட்டார்....." துயரத்தால் அவள் குரல்தழுதழுத்தது....." என்னை மன்னித்துவிடுங்கள் சுரேஷ். நான் வேறு என்ன செய்வது? என்மேல் உயிரையே வைத்திருக்கும் தந்தையை எப்படி உதறிவிடுவது சுரேஷ்? பச்சை மரத்தை வெட்டினல் அது மீண்டும் தளிர்த்துவிடும். துயரத்தை எதிர்க்கும் சக்தி இளம் உள்ளங்களுக்உண்டு சுரேஷ். ஆனல்...........ஆனல் ஓய்துவிட்ட என் தந்தையின் உள்ளம் ஏமாற்றத்தைத் தாங்காது சுரேஷ். என் உணர்ச்சிகளைக் கொன்று அவர் உள்ளத்தைக் காக்கத் துணிந்து விட்டேன்! தந்தையின் பாசத்தை உத

றும் துணிவற்ற கோழையென்னை மன்னித்து விடுங்கள்!...'' கண்ணீரில் நீந்திய கண்களால் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். சுரேஷ் உரத்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே கோபம் கனன்று தெறித்தது.

''மாயா, புரிந்து விட்டது! என்னை எப்படி உன்னால் காதலிக்க முடிந்தது என்று நான் பல முறை ஆச்சரியப்பட்டேன். இன்று எனக்குப் புரிந்து விட்டது மாயா! நீ நடத்திய காதல் நாடகத்தின் உச்சக் கட்டமா இது? சீ! நீ இப்படி மோசம் செய்வாயென்று தெரிந்திருந்தால் உன் முகத்தைத் திரும்பியே பார்த்திருக்கமாட்டேன்! என் உணர்ச்சிகளோடு பொழுது போக்க விளையாடிப் பார்த்தாயா என்ன?''

''சுரேஷ்!'' அடிபட்டமான்போலத்துடித்தாள் மாயா. ''சுரேஷ், இதென்ன பேச்சு? என்னையா இப்படிச் சொல்கிறீர்கள்? நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? நீங்கள் ஆத்திரப்படுவது நியாயம் தான் சுரேஷ். ஆனால் என் கஷ்டத்தையும் கொஞ்சம் நினைத்துப்பாருங்கள். உங்கள் உள்ளத்தின் அன்பையெல்லாம் என் மேல் பொழிவதாகச் சொல்வீர்களே! எள்ளிருக்க இடமின்றி உங்கள் உள்ளமெல்லாம் நான் நிறைந்திருக்கிறேன் என்பீர்களே! அந்த அன்பின் பெயரால் என்னை மன்னிக்கமாட்டீர்களா?''

''அன்பு! உன் வாழ்வில் அன்புக்குப் பொருளுண்டா? என் வாழ்வைக் கிறிப் புதைத்து விட்ட உன் வாழ்வுக்கு என்னை வாழ்த்துப் பத்திரம் வாசிக்கச் சொல்கிறாயா? ஆஹா! தாராளமாகச் செய்கிறேன்! ஊரும் உலகமும் உன்னைப் பார்த்து எள்ளி நகையாடச் செய்கிறேன். என் வாழ்த்திலே உன் வாழ்வைப் பலி கொடுக்கப் போகிறேன். எங்கள் காதலின் கதையை உலகம் வாசித்து மகிழப் போகிறது — விரைவில்! அதன் பிறகும் உனக்கு வாழ்வா?''

"சுரேஷ்!"! காதைப் பொத்தினாள் மாயா. "சுரேஷ், ஏமாற்றத்தினால் அன்பு ஆத்திரமாகினால், காதல் வெறுப்பாகினால் உங்கள் உள்ளத்தில் உண்மையில் அன்பேயில்லை. நீங்கள் என்றுமே என்மேல் உண்மையான அன்புகொண்டதில்லை சுரேஷ். கொண்டிருந்தால் இத்தகைய கொடிய எண்ணங்கள் உங்களுக்கு வரவே வராது. போயும் போயும் உங்கள் மேல் அன்பு செலுத்தினேனே! சிச்சீ! நீங்களும் ஒரு மனிதரா?"

பளார்! மாயாவின் கன்னத்தை சுரேஷின் விரல்கள் பதம் பார்த்தன.

"சீ! வாயைமூடு மாயா!" அவன் சீறினான். தடுமாறிய மாயா சமாளித்துக்கொண்டாள். ஏளனத்தோடு அவனை ஒரு முறை நோக்கி விட்டுத் திரும்பி வேகமாக நடந்தாள்

●

பின்னல் தலையை அழுத்திய பூவின் சுமையாலோ அன்றிக்கண்களில் முட்டிய நீரின் சுமையாலோ கவிழ்ந்த தலையோடு சுவரோடு சாய்ந்து நின்றாள் மாயா. அவள் உடலில் மின்னிய புதுப்புடவை, அவள் கழுத்தை வளைத்துக் கிடந்த மாங்கல்யம்—தாமே தம் கதையைக் கூறின. இன்று மாயா ரகுநாதனின் மனைவியாகி விட்டாள். அறைவாசலில் ரகு நிற்பதைக்கூடக் கவனியாது மாயா சிந்தனையில் மூழ்கி நின்றாள். அவள் உள்ளத்தில் கேள்விக் குறியொன்று விஸ்வரூபம் எடுத்து அவளை வாட்டியது. அவளையே நோக்கிய ரகு தனக்குள் சிரித்துக்கொண்டான்.

"மாயா!" திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"எந்தக் கோட்டைக்குக் கண்ணி வைக்கிறாய் மாயா?" கட்டிலில் வந்து அமர்ந்தான் ரகு. மெதுவாக நடந்து வந்து மாயா மண்டியிட்டு அவன் கால்களைத் தொட்டுக்

கண்களில் ஒற்றிக்கொண்டாள். பிறகு மனதைத் திடப் படுத்திக் கொண்டவள் போல் ரகுவை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதொன்று உண்டு." பிரயாசையோடு பேசினாள்.

"என்ன மாயா?" ரகு மெதுவாகக்கேட்டான்.

"அதை......அதை அறிந்த பின் என்ன சொல்வீர்களோ தெரியாது. நீங்கள் என்னை ஏற்றுக்கொண்டால் அது என் பாக்கியம் —" ஆனால் மாயாவின் குரலில் நம்பிக்கை தொனிக்கவில்லை— "... அன்றி எங்கள் ......... விவாக பந்தத்தை நீங்கள் முறிக்க விரும்பினாலும் நான் அதற்குத் தடையாய் நிற்கமாட்டேன்..." ரகு ஒன்றும் சொல்லவில்லை. மாயா பல்லைக் கடித்துக்கொண்டு தொடர்ந்தாள்.

"இதற்கு முன் நான் ஒருவரை விரும்பினேன். அவரும் என்னை........விரும்பினார்! அப்பா எங்கள் மணத்திற்குச் சம்மதமளிக்க மறுத்துவிட்டார். அப்பாவின் விருப்பப்படியே நான் உங்களை மணக்க இசைந்தேன். இனி நீங்கள் என் கணவர். என் உள்ளத்தில் இனி உங்களைத் தவிர எவருக்கும் இடமில்லை. ..இதை மற்றவர் வாயிலிருந்து நீங்கள் அறிவதைவிட நான் சொல்லிவிடுவதே மேல் என்று நினைத்ததால் சொன்னேன்...... என்னை மன்னித்து விடுங்கள்........" தொடர்ந்த நிசப்தத்தில் கடிகாரத்தின் 'டிக் டிக்' சப்தம் தன் இதயத்தின் துடிப்பாகவே மாயாவுக்குப் பட்டது. ரகு மாயாவை ஒருவித அற்புதத்தோடு பார்த்தான். இந்த விஷயத்தை அவனிடம் சொல்ல அவளுக்கு எவ்வளவு தைரியம் வேண்டியிருக்க வேண்டும்.?

"அதனாலென்ன மாயா? நான் உன் வாழ்வில் நுழைக்கிடுமுன் நடந்ததைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்?

உன்னையும் மீறி நடந்த நிகழ்ச்சிகளுக்கு நீ என்ன செய்வாய்? எல்லா மனிதர்களும் தம் வாழ்வில் எதோவொரு சமயத்தில் தவறிழைக்கத் தான் செய்கிறார்கள். அதனால் வாழ்வே அஸ்தமித்து விடுவதில்லை மாயா. நம் வாழ்வு இனித்தானே ஆரம்பிக்கப்போகிறது. இந்தச் சமயத்தில் அவலப்பேச்சுக்கள் எதற்கு?'' அழும் குழந்தையைத் தேற்றுவது போல் ஆறுதலாகப் பேசினான் ரகு. கோபத்தையும் வெறுப்பையும் அவனிடம் எதிர்பார்த்த மாயாவால் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. இப்படியும் ஒரு மனிதரா?......அவன் அழகு, செல்வம் அத்தனைக்குள்ளும் மறைந்து கிடந்த அவனது பண்பட்ட இதயம் அவளை மெய்சிலிர்க்க வைத்தது.....

''அத்தான்.......நீங்கள் மனிதரல்ல!........தெய்வம்...... என் தெய்வம்.''

14 - 8 - 1960



# ஜீவநதி

இன்னும் பதினைந்து நிமிஷங்களில் புகையிரதம் மணி கண்டானை அடைந்துவிடும்.

ஜன்னலுக்கு வெளியே நோக்கினான் இராமலிங்கம். இலைகளையெல்லாம் உதிர்த்து மொட்டையாய் நின்ற மரங்கள் தளிர் தள்ளி நின்றன. இளவேனில் பிறந்து விட்டது. இயற்கை புதிய வாழ்க்கை தொடங்குகிறது; புதிய உலகைப் படைக்கின்றது.

இராமலிங்கம் இன்பமாக நெட்டுயிர்த்தான். மடியிலிருந்த அட்டைப்பெட்டியைத் தடவிக்கொண்டான். நேர்மையான உடலுழைப்பில் கிடைத்த வெகுமதியல்லவா அது? சிறையென்ற உலையிலே உருக்கிப்படைக்கப்பட்ட புதிய பிம்பமல்லவா இன்றைய இராமலிங்கம்! அந்தத் தனிமையில் தான் எத்தனை துடிப்பு! சிறைச் சுவகளோடு அர்வன் சொந்தம் கொண்டாடிய நாட்களில் தான் தங்கத்தை எவ்வளவு தூரம் காதலித்தான் என்பதை உணர்ந்தான். அவளுக்காக ஒவ்வொரு விநாடியும் ஏங்கினான். அவனை அவள் வெறுக்காதிருந்தால் போதும்.

தனக்கு அந்தத் திருட்டுக் குணம் இனி என்றுமே வராதென்றுதான் திடமாக நம்பினன். இந்த ஞானேதயம் நீடிக்கும் என்பது என்ன நிச்சயம்? பணத்தோடு விளையாடினல்தானே அந்தச் சோதனை ஏற்படும்? அதற்கு இராமலிங்கம் தான் சந்தர்ப்பமே அளிக்கப்போவதில்லையே.

"ஐயா, இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது?" எதிரேயிருந்த மனிதரை நூறுதரம் மணி கேட்டுவிட்டான். அவரும் எரிச்சலைக் கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டு பதிலளித்தார். அவனது துடிப்புஅவருக்கெங்கே தெரியும்?

"இன்னும் மூன்று நிமிஷம்தான். அவசரமாகப் போகவேண்டுமா?"

"ஆமாம்... ஆமாம்......அவசரம்தான்". ஏழு வருஷத்திய அவசரமல்லவா அது? தங்கத்திற்கு இதை பற்றி ஒன்றும் தெரியாது. அவள் பெயரைப் போலவே பத்தரைமாற்றுத் தங்கம்தான்! அவனைப் பற்றிய உண்மையை அறிந்திருந்தால் அவனைத் திரும்பியும் பார்த்திருக்கமாட்டாள்! அவன் கைதாகும் காரணத்தை அறிந்ததும் தங்கம் மலைத்துப் போனுள். ஆழ்ந்த துயரம் அவள் முகத்தில் பரந்தது. வாழ்க்கையின் தொடர்பு அறுந்து கற்சுவரும் கம்பிக் கதவும் அவனுக்கு உலகமானபோது, நினைவிலும் கனவிலும் கற்பனையிலும் தங்கத்தின் துயர் படிந்த முகமே அவனை விரட்டி விரட்டி வந்தது. ஆனுல் இப்போதோ அவளுக்குகந்தவனுகத் தான் ஆகிவிட்ட பெருமிதம் அவன் உள்ளத்தில் பொங்கியது.

உயிரினும் மேலான அந்த அட்டைப் பெட்டியைத், தன் நேர்மையின் திறத்தைத் தங்கத்திற்கு நிறுவப் போகும் பரிசுகளை நெஞ்சோடு அணைத்துப் பிடித்தவாறு ஸ்டேஷனுக்கு வெளியே வந்து தெருவில் இறங்கி நடந்தான்.

தெருவின் எதிர்ப்பக்கத்தில் சிறுவரும் சிறுமியரும் கலகலத்தவாறு சிட்டுக்கள்போல் தாவியும் நடந்தும் வந்து கொண்டிருந்தனர். இராமலிங்கத்தின் சிந்தனை தன் குழந்தையை நோக்கிப் பறந்தது. அவளும் இவர்களைப் போலக் கவலையின்றிச் சிட்டுப்போலச் சிரித்துத் திரிவாளல்லவா? தெருவைக் கடந்துகொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்தவாறு தன்னையறியாது நின்றுவிட்டான். கடைசியாக வந்து கொண்டிருந்த சிறு பெண் ஒருத்தியின் புத்தகமொன்று நழுவித் தெருவில் திறந்தவாறு விழுந்தது. அதன் ஒற்றைகளிடையே அந்தப் பெண் வைத்திருந்த வர்ணக்காகிதத் துண்டுகளெல்லாம் தெருவில் சிதறின. அவள் பட்டுப்பூச்சி போல அங்கும் இங்கும் பறந்து, பறந்து, உட்கார்ந்து, எழுந்து அவற்றைப் பொறுக்கலானுள். தெருவைக் கடந்துவிட்டசிறுமிகளுள் ஒருத்தி திரும்பிக்,

"கமலம், கெதியாக வா!" என்று கத்தினுள்.

திடீரென்று 'ஹாரன்' அலறல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிய சிறுமி நடுத்தெருவில் போட்டுவிட்ட புத்தகக்கட்டை வாரிக்கொண்டு திரும்பித் தெரு ஓரத்தை நோக்கிப் பாய்ந்தாள். இராமலிங்கம் கையைத் தூக்கிக்கொண்டு கத்திய அதே கணம் "கார்" அவளை மோதி எறிந்தது.

இராமலிங்கம் சிறிது தயங்கினுன். "பாவம் யார் குழந்தையோ? இதற்கு அவன் என்ன செய்துவிடமுடியும்? அவனுக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்? ஒரு வம்பில் அகப்பட்டு அனுபவித்தது போதும்' என்று குழம்பியது அவன் மனம். அக்குழந்தைகளில் ஒன்று ஓலமிட்டு அழத் தொடங்கியது. அவன் திரும்பிப் பார்த்தான் – இரத்தத்தில் மிதந்த அந்த முகத்தில் நிலவிய அமைதி அவனை உலுக்கிற்று. திரும்பிச் சிறுமி கிடந்த இடத்திற்கு வந்தான்.

"இது யார் குழந்தை?" என்று கேட்டான்.

"எங்கள் பக்கத்து வீட்டுப்பிள்ளை", என்றுன் அவர்களுள் பெரியவனுன பையன் ஒருவன்-

"சரி தம்பி, நீ இரண்டு எட்டில் ஸ்டேஷனுக்கு ஓடி ஒரு 'டாக்ஸி' கூட்டிக்கொண்டு வா. கெதியாக!", என்றவன் மண்டியிட்டுத் தன் துண்டை அவளுடைய தலையில் சுற்றிக் கட்டுப்போட்டுவிட்டு அவளைத் தூக்கிக்கொண்டு தெரு ஓரத்திற்குப்போனுன். சிறு போதில் 'டாக்ஸி' வந்தது.

"தம்பி, நீ இவர்கள் வீட்டுக்குப் போய் நடந்ததைச் சொல்லி ஆஸ்பத்திரிக்கு வரச்சொல்! டிரைவர், ஆஸ்பத்திரிக்குக் கெதியாக ஓடப்பா!", என்று உத்தரவிட்டான். வண்டியைக் கூடிய அளவு வேகமாக ஓட்டியும் இராமலிங்கத் திற்குத் திருப்தியாகவில்லை.

கமலத்தின் முகத்தைப் பார்த்தான். மலருமுன் கிள்ளியெறியப்பட்ட அரும்பாகக் கிடந்தாள். இனிய முகம்! அவனுடைய குழந்தையும் இப்படித்தானே இருப்பாள்? தங்கம் என்ன பெயர் வைத்தாளோ? பெண் குழந்தை யாரைக் கொண்டதோ தந்தையைக் கொள்ளும் என்று சொல்லுவார்கள்.....இல்லை. தங்கத்தின் குழந்தை எதுவும் அவளைப்போலத்தான் இருக்கும்—இருக்கவேண்டும்! இந்தக் கமலத்தைப்போல் மொட்டு இதழ்களும் பட்டு இமைகளும் தங்கத்தின் சிவந்த நிறமுமாகத்தான் இருப்பாள்........

இனிய கனவில் இராமலிங்கம் மெல்ல மடியைத் தடவினான். அவனுக்குப் பகீரென்றது. அவனுடைய பெட்டி! ......எங்கே? எங்கே? பரபரவென்று மேலும் கீழும் பார்த்தான்......கமலத்திற்குக் கட்டுப்போட அதைத் தெருவில் வைத்தவன் பிறகு அதை எடுக்கவேயில்லை. அவனது அன்பு மனைவிக்கும் பிஞ்சுக் குழந்தைக்கும் கொண்டுவந்த அன்பை அடக்கியதல்லவா அந்தப்பெட்டி? குரோதம் பொங்கக் கமலத்தைப் பார்த்தான் .சனியன்! இவ்வளவு தூரம் வந்தவனுக்குக் கடைசி நேரத்தில் சகுனத்தடை போல் முளைத்தது. போதாதென்று அவன் இன்பத்தைச் சூறையாடியுமல்லவா விட்டது, மூதேவி! அதைச்சாவின் வாயிலிலிருந்து மீட்க அழைத்து வேறு செல்கிறான்......

"ஆஸ்பத்திரி வந்துவிட்டது ஐயா," என்று திரும்பிய டிரைவர் இராமலிங்கத்தின் முகத்தில் பொங்கிய கடூரத்தைக் கண்டு திகைத்துப்போனான். 'மீட்டரை'ப் பார்த்து வேண்டா வெறுப்பாக இரண்டரை ரூபாயை நீட்டியவன் கமலத்தைத் தூக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான்...... அவனைக் காத்திருக்கச் சொல்லிக் கமலத்தைச் சிகிச்சைக்குக் கொண்டுபோய்விட்டார்கள். இராமலிங்கம் கமலத்தையும் தன்னையும் மாறி மாறிச் சபித்துக்கொண்டான். ஆத்திர எண்ணங்களோடு எவ்வளவு நேரம் இருந்தானோ தெரியாது, டாக்டரைக் கண்டதும் எழுந்தான்.

"இனி நான் போகலாமா டாக்டர்?"

"இருங்கள் ஐயா. அந்தக் குழந்தைக்கு அதிகப்படியான இரத்தம் சேதமாகிவிட்டது. உடனே இரத்தம் செலுத்தவேண்டும். எங்களிடம் தேவையான இரத்தத் தொகுதி இல்லை. அடுத்த நகர் ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் செய்திருக்கிறோம். அவர்களிடம் இந்த இரத்தத் தொகுதி இருந்தாலும் அது இங்கு கொண்டு வரப்படுமுன், குழந்தை ஒருவேளை இறந்துவிடக்கூடும். தாய் அல்லது தந்தையின் இரத்தம் ஒத்துப்போகக் கூடும் என்று நினைக்கிறேன். அவர்கள் மட்டும் சீக்கிரம் வந்தால்—யாரென்றே உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது! தெரியாது!... அவர்கள் வந்துவிடுவார்கள். அந்தச் சிறுவன் போய்ச் சொல்லவேண்டாமா? நான் அவசர அலுவலாய்ப் போய்க்கொண்டிருந்தேன்—இப்பொழுதே தாமதமாகிவிட்டது. இனியாவது போகலாமா?" கடுமையாக, எரிச்சலோடு பேசினான். அவனது வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காது டாக்டர் உள்ளே சென்றுவிட்டார். தனித்திருந்த இராமலிங்கம் வெளியேறினான்.

ஆஸ்பத்திரி வாசலில் ஒரு 'போஸ்டர்' அவன் கண்ணைக் கவர்ந்தது. இரத்த தானம் செய்யும்படி ஒரு தாதி அழைத்துக்கொண்டிருந்தாள். ஒரு யோசனை அவன் மனதில் 'பளிச்'சிட்டது. அவனுடைய இரத்தத்தைக் கொடுத்து பத்து ரூபாய் சம்பாதிக்கலாம். அதில் குழந்தைக்காவது ஏதாவது வாங்கிப் போகலாம். நடந்ததையெல்லாம் அறிந்ததும், தன் பாசத்தின் ஆழத்தை அறிந்து தங்கம் மகிழ்வாளல்லவா? இராமலிங்கம் மீண்டும் உள்ளே திரும்பினான்.

இராமலிங்கம் கண்ணுடிக் குழாயில் ஏறிய இரத்தத்தைப் பார்த்தான். களைப்பில் சிறிது நேரம் படுத்திருந்தான். ஆயாசம் நீங்கியதும் அவன் எழுந்திருக்க உதவி, அவனுடைய சட்டையை எடுத்துக் கொடுத்தாள் ஒரு தாதி. இராமலிங்கம் பணத்தைப் பெற்றுக் கொள்ளச் சென்ருன். 'வார்டு'களைத் தாண்டி செல்லும் பொழுது ஒரு 'வார்டி'லிருந்து வெளியே வந்த பழைய தாதி அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"நீங்கள் இரத்ததானம் செய்ய வந்த வேளை நல்ல வேளை. ஒரு குழந்தைக்கு உயிரளித்துவிட்டீர்கள். டாக்டர் கூடக் கைவிட்டிருந்தார். குழந்தையைப் பார்க்க வருகிறீர்களா? அதன் தாய் உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிருள்" அவள் அவசரத்தோடு போய்விட்டாள். இன்னெரு குழந்தையாய் இருந்திருந்தால் இதற்காக இராமலிங்கம் பெருமை அடைந்திருப்பான். ஆனல் கமலத்தை நினைத்ததும் அவன் உள்ளத்தில் குரோதம் பொங்கியெழுந்தது. தன் மகளுக்குக் கொண்டு வந்த அன்புப்பரிசைத் தட்டிக்கொண்ட குட்டிப்பிசாசு கமலம் என்ற வெறுப்பு அவனுக்கு. 'வார்டு' வாசலை அடைந்ததும் அவனுடைய கால்கள் சிறிது தயங்கின. கட்டிலருகில் கண்களில் நீர்சோர ஒரு பெண் நின்ருள். எதையோ நினைவு கூர்வது போல் கண்களைக் கூசினுன் இராமலிங்கம். அது யார்?

"தங்கம் ! தங்கம்!" என்று கூவினுன்.

"யார்? ...... நீங்களா?...... வந்துவிட்டீர்களா?" தாவிச் சென்று அவள் கைகளைப் பற்றினுன் இராமலிங்கம்.

"தங்கம், நீ எங்கே இங்கு வந்தாய்?" தங்கம் விம்மினுள்.

"இதோ... இதோ.....உங்கள் மகள் கமலம்......"

"ஐயோ!" இராமலிங்கம் அந்தப் பிஞ்சுப்பாதங்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினன். அவன் விருப்புடன் வாங்கிய பரிசுகள் எதற்கு? அவன் வெறுப்புடன் அளித்த உயிர்ப்பரிசு, ஜீவநதியாக மாறி அவள் உடலில் பாய்ந்துகொண்டிருந்ததே!......

20 - 6 - 59.



# புதிர்

"இன்னும் எத்தனை நாள் இப்படியே இருந்துவிட உத்தேசம் சாரு?" சாருவின் நீண்ட கருங் கூந்தலைப் பின்னிக்கொண்டே மெதுவாகக் கேட்டாள் சித்ரா. சாருவின் உதடுகளில் நெளிந்த ரகஸ்யப் புன்னகையை, முகத்தில் படிந்த கலவரத்தைச் சித்ரா காணவில்லை.

"செய்யவேண்டியது தான் மச்சாள். காலம் வந்தால் எல்லாம் தானே நடக்குமென்று நீங்கள் தான் அடிக்கடி சொல்வீர்களே!" சாருவின் குரலில் ஒரு துள்ளல், ஒரு எழுச்சி வெளிப்பட்டது. சித்ரா ஆச்சரியத்தில் ஒரு கணம் பின்னுங்கை ஓய்ந்து இருந்தாள். சாருவிடம் இந்தக் கேள்வியைச் சித்ரா கேட்டது இது முதல் தடவையல்ல. எத்தனையோ தடவை கேட்டுவிட்டாள். ஆனால் எப்பொழுதும் அவளுக்குக் கிடைத்த பதில் அணுகமுடியாத, கீறிப்பிளக்கமுடியாத மௌனம் தான். சிற்சில சமயங்களில் "எனக்குச் சோறு போடுவது உங்களுக்குப் பாரமாக இருக்கிறதா மச்சாள்?" என்று வெடுக்கென்று கேட்டு அவள் வாயை அடைத்துவிடுவாள். அதனால்தான் சாரு பதிலளித்தவிதம், அவள் குரலில் தொனித்த உல்லாசமும் நாணச் சாயலும் சித்ராவுக்குத் திகைப்பூட்டியது.

''சாரு, அப்படியானல் அண்ணவிடம் சொல்லட்டுமா?'' பதிலுக்குத் தன் அரிசிப் பல்வரிசை தெரியச் சிரித்த சாரு தன் பின்னலை வெடுக்கென்று பறித்துக் கொண்டு கொல்லைக்கு ஓடினள். மடிநிறைய மல்லிகை மொட்டுகளைப் பந்தலிலிருந்து பறித்தவள், கொல்லைப் படியில் அமர்ந்து அவற்றைத் தொடுக்கலானள். சாரு மணம் முடிக்கச் சம்மதிக்கிருளில்லை என்பது ராகவனுக்கும் சித்ராவுக்கும் பெரிய மனக்குறைதான். ஆனல் சாருவால் தான் இதுவரை தன் மனதைச் சமாதானப் படுத்திக்கொள்ள முடியவில்லை. தன் மனதிலிருந்து முரளியின் நினைவை இதுவரை அவளால் அழிக்க முடியவில்லை. ஆனல் இனி?... தனக்குள் சிரித்துக்கொண்டாள் சாரு. இரண்டு வருடங்களாகச் சிரிக்காததாலோ என்னவோ சாருவின் உள்ளத்தில் சதா சிரிப்புக் குமிழியிட்டுக்கொண்டிருந்தது. அவள் உதடுகள் புன்னகையில் தவழ்ந்தன. இரண்டு வருடங்களாக அவள் நெஞ்சில் நிலைத்த உருவத்தைக் கல்லி எறிந்து விட்டாளா? இல்லை. வருவேன் என்றுபோனவன் வந்துவிட்டான். முரளி வந்துவிட்டான். இனி அவளேன் சிரிக்கமாட்டாள்? குதூஹலமாய்ப் பேச மாட்டாள்?

அன்று காலை சித்ராவும் சாருவும் கடைத்தெருவுக்ும் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி ஒரு கார் வேகமாக வந்தது. சாருவும் சித்ராவும் அது போகுமட்டும் ஓரமாய் ஒதுங்கி நின்ருர்கள். கார் அருகில் வந்து அவர்களைத் தாண்டுவதற்கிடையில் சாரு அதை ஓட்டி வந்தவனை இனம் கண்டுகொண்டாள். அவன்–முரளி தன்னைப்புரிந்துகொண்டான் என்றும் தெரிந்து கொண்டாள். திடீரெனக் ''காரி''ன் வேகம் குறைந்தது. அதை ஓட்டியவன் 'காரை' நிறுத்தவோ வேண்டாமோ என்று யோசிப்பது போல் தோன்றியது. ஆனல் கடைசியில் 'கார்'

நிற்காமல் அதே போக்கில் போயிற்று. அதோடு சாரு வின் இதயபாரமும் வேதனையும் போயிற்று. அவன் தன் னிடம் பின்பு வருவான் என்று அவளுக்குத் தெரியும்... சாரு பெருமூச்சு விட்டாள். இரண்டுவருடங்களாக அவளை ஏங்க வைத்து விட்டானே முரளி! முரளியும் அவ ளும் சந்தித்தவிதமே ஏதோகதைகளில் நடக்கும் சம்பவம் போலவேயிருந்தது. நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாத தாகவே அவர்களின் அன்புப் பிணைப்பும் தோன்றியது. அது விபரீத ஆசை யென்று இன்றைய சாருவுக்கு ஒரு வேளை தோன்றியிருக்கக்கூடும். ஆனால் அன்று சாரு வேறு பெண். அனுபவத்தின் தழும்புகள் அவள் உள்ளத்தைக் கறைப்படுத்தியிருக்கவில்லை. அது முற்றும் அவிழாத மல ராகவே இருந்தது...........

சேந்தன் தோப்பு எத்தனையோ கிராமங்களைப் போல இன்னுமொன்று. பெயரைப் போலவே தோப்புகளுக்குப் பிரசித்தமானது. பக்கத்து நகரிலிருந்து பல பெரிய மனி தர்கள் பறவை வேட்டைக்காக அங்கு வருவதுண்டு. ராக வனும், அவன் மனைவி சித்ராவும், தங்கை சாருவும் தோப் புக்குக் கூப்பிடு தூரத்தில் தெருவோடு குடியிருந்தனர். ராகவன் சேந்தன் தோப்புப் பாடசாலையில் ஆசிரியரா யிருந்தான். சாருவுக்குத் தோப்பில் சுற்றுவதென்றால் ஒரே பித்து. அப்பொழுது, ஐந்து வருஷ மண வாழ் வின் பின்பு சித்ரா பிள்ளைப் பேற்றிற்காகப் பிறந்த வீடு சென்றிருந்தாள். அன்று சனிக்கிழமை. உண்ட மயக்கம் தீர உறங்கும் மத்தியான வேளை. சாரு தோப்பில் ஒரு மாவில் மாங்காய் எறிந்துகொண்டிருந்தாள். திடீரென்று அந்தக் கிறங்கும் மத்தியான அமைதியைக் கிழித்துக் கொண்டு அண்மையில் வேட்டுச் சத்தம் எழுந்தது. அந்த

வேட்டின் எதிரொலி ஓயுமுன் சிறகுகள் சடசடக்கச் சுழன்று சுழன்று வந்து சிறிது தூரத்தில் விழுந்தது ஒரு பறவை. சாரு அருகில் போய்க் குனிந்து பார்த்தாள்... புரு ...அது செத்துவிட்டது......அருகில் காய்ந்த சருகுகள் சரசரத்தன. சாரு புருவைக்கையில் எடுத்துக்கொண்டு நிமிர்ந்தாள். எதிரே ஒரு இளைஞன் நின்றான். அவன் கையில் புகை உமிழும் துப்பாக்கியொன்றை அணைத்துப் பிடித்திருந்தான். அலட்சியம் பொங்கும் ஆண்மைவடிவம். உலகையே விலைக்கு வாங்கிவிட்ட தோரணை.

"அந்தப் புருவைத் தருகிறாயா? நான் தான் அதைச் சுட்டேன்," என்றவன் கையை அதிகாரத்தோடு நீட்டினான். சாரு பேசாமல் புருவைக் கொடுத்துத் தானிருப்பாள். ஆனால் அவன் அலட்சிய தோரணையோ, ஆணவமோ, ஏதோ ஒன்று அவளுக்கு எரிச்சல் மூட்டியது.

"அது சொல்லாமலே புரிகிறது!" உதட்டைப் பிதுக்கிப் புருவத்தை உயர்த்தி அவனை மேலுங்கீழும் அதிசயப் பொருளைப் பார்ப்பது போல் பார்த்தாள். சுற்றி விளங்கிய இயற்கையின் பிரிக்க முடியா அங்கமாய், அழகுருவாய், அன்றலர்ந்த மலராய் நின்ற சாருவை அவன் கண்கள் அளவெடுத்தன.

"புரிந்துகொண்டாயல்லவா? இனியாவது புருவைத் தருகிறாயா?" சிரித்துக்கொண்டு கேட்டான். ஆண்மையும் கவர்ச்சியும் தவழ்ந்த அவன் முகம் அவளை மயக்கியது.

"தர முடியாது."

"என்ன?" அவன் திகைத்தான்.

"தரமுடியாது" அழுத்தமாகச் சொன்னாள்.

"ஓஹோ! உனக்குத் தரத்தெரியாவிட்டால் உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ள எனக்குத் தெரியும்." எரிச்சலோடு சொன்னவன் அதைச் செயலாக்குவதுபோல் அவளை நோக்கி அடியெடுத்தான்.

"எடுத்துக்கொள்ளேன் பார்க்கலாம்!" வார்த்தையை வீசியவள் சட்டென்று திரும்பி மின்வெட்டுப்போல மரங்களிடையே ஓடி மறைந்தாள். இதை எதிர்பார்க்காத முரளி அப்படியே திகைத்து நின்றான்.

ஏதோ குறும்புத்தனத்தில் புருவைத் தூக்கி ஓடி வந்துவிட்டாளே தவிர யோசித்துப்பார்க்க அவளுக்குத் திக்கென்றது. தன் நடத்தையைப் பற்றிப் புகார் செய்ய அந்த மனிதர் விசாரித்துக்கொண்டு வீடுதேடி வந்துவிடுவாரோ என்று பயந்தாள். ஆனால் இரண்டு நாட்களாகியும் ஒருவரும் வரவில்லை என்று கண்டதும் மீண்டும் தோப்பை நாடினாள். ஏனோ முரளியின் ஆண்மையும் மிடுக்கும் பொங்கும் வடிவம் அவள் மனதில் சதா தோன்றலாயிற்று. அவனை மீண்டும் காணவேண்டுமென்ற விழைவு ஏற்பட்டது. அந்தத்தோப்பு அவளைக் கவர்ந்திழுத்தது. ...அங்குதான் முரளியும் சாருவும் தினமும் சந்தித்தார்கள் முரளியின் குறும்பும் கேலியும் அழகும் சாருவின் குழந்தையுள்ளத்தைச் சூறையாடிவிட்டன. நாட்கள் வந்து போயின. அவர்களின் அன்புப் பிணைப்பும் இறுகி இணைந்தது. முரளி ஒரு மாதம் சேந்தன் தோப்பில் தங்கினான். முரளி ஊர் திரும்புகிறான் என்றதும் சாருவின் கண்களில் நீர் முட்டிச் சிதறியது. சாருவுக்கு அவர்களின் சந்திப்பு அந்த ஒரு மாத காலத்தின் இன்பம் எல்லாம் ஒருகனவுத்

தன்மையோடு தான் தோன்றின. அதில் உண்மையான ஒரு பொருள் முரளியே என்றும், அவன் போய்விட்டால் அவர்கள் இருவரையும் சுற்றியெழுந்த உலகமும் நொறுங்கித் தூளாகி மறைந்துவிடும் போலும் அவளுக்குத் தோன்றியது. முரளி அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"இதற்கு அழுகிருயா சாரு? நான் என் அப்பாவிடம் நம்மைப் பற்றிச் சொல்லி அவரோடு முறையாகப் பெண், கேட்டு உங்கள் வீட்டுக்கு வரவேண்டாமா? சாரு, ஏழே ஏழு நாட்கள் தான். அடுத்த வாரம் வந்துவிடுவேன். எங்கே சிரி." சிரிப்பை உதிர்த்துக்கொண்டே அவன் போய்விட்டான்.

அவன் சொன்ன ஏழு நாட்களும் அதற்கு மேலும் வந்து போயின. முரளிதான் வரவில்லை. அவனிடமிருந்து எவ்விதத் தகவலுமில்லை. அப்பொழுது தான், உணர்ச்சியின் வேகம் கண்ணை மறைக்காத நிலையில் நடந்ததை எண்ணிப் பார்க்கலானாள். முரளியின் செல்வ நிலை, அவன் அந்தஸ்து எல்லாம் முழு உருவங்கொண்டன. அவளோ ஏழை ஆசிரியன் தங்கை. இயற்கை அளித்த அழகு ஒன்றுதான் அவளிடம் இருந்தது. பள்ளத்திலுள்ள நீர் மலையுச்சியை அடைய முடியுமா? அவள் ஏன் இதையெல்லாம் முன்பே எண்ணிப் பார்க்கவில்லை? சாதாரண கதியில் ஓடும் வாழ்க்கையில் விபரீதங்கள் ஏன் ஏற்படுகின்றன? மனித யத்தனத்திற்கும் மேம்பட்ட சக்தி ஒன்றிருப்பதை மனிதன் மறந்து விடாதிருக்கவா? முரளி மேல் அவளுக்கிருந்த நம்பிக்கையைக் கொல்ல ஆறு மாதங்களெடுத்தன. ஆனால் அவன் மேல் கொண்ட அன்பைத்தான் என்ன முயன்றும் அவளால் கொல்ல முடியவில்லை. முரளியை அவளால்மறக்கவே முடியவில்லை. தன்னை

வஞ்சித்து விட்டானே என்று அவனை வெறுக்கவும் முடிய வில்லை. ஆனால்...ஆனால் அவன் தான் வந்துவிட்டானே .. என்னதான் நடந்திருந்தாலும் அவன் வந்து விட்டான்......

"சாரு! சாரு!" சித்ராவின் குரல் சாருவின் சிந்தனைத் தொடரை அறுத்தது. சாரு மல்லிகைச் சரத்தைப் பந்தாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

"சாரு, நான் அண்ணாவோடு 'டிஸ்பென்ஸரி'க்குப் போய் வருகிறேன். அடுத்த வீட்டுக் கமலி இப்போதான் நீலாவைத்தூக்கிக்கொண்டு போகிறாள். இருளுமுன் நீலாவைக்கூட்டி வந்து விடு. வீட்டைப்பார்த்துக்கொள்." சரியென்று தலையாட்டிய சாரு, ராகவனையும் சித்ராவையும் வழியனுப்பிக் கதவைச் சாத்தினாள். மல்லிகைச் சரத்தில் சுவாமிப் படத்துக்குச் சூட்டிவிட்டுத் தன் தலையிலும் வைத்துக்கொண்டாள். முகத்தைக் கழுவிக் கண்களுக்கு மையிட்டு நெற்றியில் பொட்டு இட்டுக்கொண்டாள். வீட்டின் உள் முற்றத்தில் வந்து உட்கார்ந்து மேலே நீல வானைப் பார்த்தவாறு யோசனையிலாழ்ந்தாள். திடீரென்று கதவு தட்டிக்கேட்டது. சாருவின் இதயம் விம்மி வெடிக்கும் போல் அடித்துக்கொண்டது. அவள் உள்ளத்தை ஏதோ ஒன்று நிறைத்து அடைப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மெல்ல எழுந்து சென்று கதவைத் திறந்தாள். முரளிதான் நின்றான். சாரு அவனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். உள்ளத்தில் நின்ற உருவமே எதிரில் தோன்றுவது போலிருந்தது. நினைவு கூடக் கனவு போலத் தோன்றுவது உண்டு.

ஆனால் கனவில் நடக்கக்கூடியது மட்டுமே அவன் விஷயத்தில் நினைவில் நடந்து விட்டது. சாரு மெல்லப் பின் வாங்கினாள்.

"வாருங்கள்," அவள் கை தானாக எழுந்து நாற்காலியைச் சுட்டிக் காட்டிற்று. முரளி பேசாமல் வந்து கதிரையில் அமர்ந்தான். சாரு அவனெதிரே அமர்ந்தாள். என்னவெல்லாமோ அவனிடம் சொல்ல வேண்டும், கேட்க வேண்டும் என்று துடித்தாள். காலையில் அவனைக்கண்டது முதல் இந்தச் சந்திப்பைப் பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்துகொண்டாள். ஆனால் இப்பொழுதோ அவளுக்கு நாவெழ மறுத்தது. ஆனால் உணர்ச்சியின் எல்லையிலே மௌனம் தானே பாஷை?...... முரளிதான் முதலில் பேசினான்.

"என்னை அதிகமாய் வெறுக்கிறாயா சாரு?" கரகரத்த குரலில் கேட்டான். சாரு சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனுக்கே உரித்தான மிடுக்கை அவனிடம் காணவில்லை. ஏதோ ஒரு அடங்கிய தன்மை தான் அவனிடம் தென்பட்டது. சாரு கஷ்டத்தோடு மெதுவாகப் பேசினாள்.

"இல்லை......வெறுக்கவில்லை......நான்......நான் உங்களை நம்பினேன்......" அவன் வரண்ட சிரிப்பை உதிர்த்தான்.

"நீ என்னை நம்பினாய். நான்......நான் அந்த நம்பிக்கையைப் பயன்படுத்தினேன்......" தனக்குத்தான் பேசிக்கொள்வது போல் முணுமுணுத்தான். பின்பு நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"என்னை உன்னால் மன்னிக்கமுடியாது தான் சாரு. ஆனால் என் அன்பு நானேயளித்த துன்பத்திற்கு ஈடு செய்யும் சாரு......சாரு......", அவளைக் கெஞ்சும் கண்களோடு பார்த்தான்............'சாரு, என்னை மணந்துகொள்வாயா?'' மணந்துகொள்வதா? அவன் வருவான் என்று தானே இவ்வளவு நாளும் காத்திருந்தாள்? அவனுக்காகத்தானே ஏங்கி ஏங்கி உருக்குலைந்தாள்? அவன் வந்து விட்டான். அவள் வாழ்வு நிறைந்துவிட்டது. சாரு தலை நிமிர்ந்தாள். உணர்ச்சி வேகத்தில் அவளுக்கு நாத்தடுமாறியது. "மூரளி உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்' என்று கத்தவேண்டும் போலிருந்தது அவளுக்கு. சாரு வாய் திறந்தாள்—

"அம்மா!..........அம்மா!'' நீலாதான் கூப்பிட்டவாறு வாசலைக் கடந்தாள். யாரோ இருப்பதைக் கண்டதும் அவளை அழைத்து வந்த கமலி வாசலோடு போய்விட்டாள். அந்நிய மனிதரைக் கண்டதும் குழந்தை நீலா மிரண்டு நின்றாள். வட்டக்கருவிழிகளால் முரளியை மிரள மிரளப் பார்த்தவாறு மெல்ல மெல்ல நடந்து வந்து சாருவோடு ஒண்டிக்கொண்டாள். முரளி திகைப்போடு, சந்தேகம் மனதைக்கௌவ சாருவையும் நீலாவையும் மாறி மாறிப் பார்த்தான். சாருவின் கை நீலாவை அணைத்துக்கொண்டது. அவள் கண்களில் ஒரு வேகம் தோன்றியது.

"நான் என் கணவரோடும் குழந்தையோடும் சந்தோஷமாக வாழ்கிறேன்.'' தெளிவாக அமைதியாகச் சொன்னாள்.

"சாரு!" அவன் இதய மூச்சோடு எழுந்தது அச்சொல். கண்கள் கலங்கி அவற்றில் நீர் ஊறக் கதிரையில் முடங்கிக்கிடந்தான் முரளி. சற்று நேரத்தில் எழுந்தவன் தொய்ந்த தலையோடு மெல்ல மெல்ல நடந்து வெளியேறினான்.

தன் கண்களில் நிறைந்த நீரைச் சிந்தவிடாது கண்ணிமைகளைப் படபடவென்று வெட்டித் தடுத்தாள் சாரு.

12-8-62



# நிறைவு

“உன் முடிவு இதுதானா, உஷா?” நிராசை நிறைந்த குரலில் கேட்டான் சேகர். புதுமுகம் உஷாதேவி தன் புருவங்களைச் சுருக்கினாள். அவளுடைய அழகிய முகத்திலே ஒரு வேகம் தோன்றியது.

“ஆமாம் சேகர். என் கனவு நினைவெல்லாம் வெள்ளித் திரையிலே நான் அணையாத தாரையாக மின்ன வேண்டுமென்பதே! பேரும், புகழும், கோடி கோடியான மக்களின் வழிபாட்டையும் நான் பெறவேண்டும். இந்த லட்சியப் பாதையிலே நான் சென்றிருக்கும் தூரம் சிறிது தான் சேகர். இதே வழியில் நான் முன்னேறி திரையுலகிலே சிறந்த நடிகையாக விளங்கவேண்டும். இதைத் தான் நான் வாழ்வில் எதிர்பார்க்கிறேன். கல்யாணம் செய்து குடும்பம் நடத்துவதில் எனக்கு ஆசையோ, பற்றோ அன்றி ஆவலோ - எதுவுமேயில்லை சேகர்.”

“நீ சொல்லும் இவையெல்லாம் வாழ்வாகுமா உஷா? திருமணம் உன் லட்சியத்திற்குக் குறுக்கே வராது என்று நான் உறுதி கூறுகிறேனே! நான் இந்த சினிமா வாழ்வை அறியாதவனா? நானும் ஒரு உதவி டைரெக்டர் தானே! எத்தனையோ நட்சத்திரங்கள் குடும்ப வாழ்வில் ஈடுப—

வில்லையா? இதுதான் உன் ஆட்சேபம் என்றால் நான் உன் முடிவை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை உஷா. ஆனால்......ஆனால் நீ என்னை வெறுப்பதாக இருந்தால் அல்லது வேறொருவனை மணக்க விரும்பினால், உன்னை இனி என்றுமே தொந்தரவு செய்யமாட்டேன்." உஷா விற்கு இவனை என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவள் இளம் உள்ளத்தின் ஆர்வமெல்லாம் அவளைக் கவர்ந்திழுத்த அந்த நட்சத்திர வாழ்வையே நோக்கிப் பாய்ந்தது. தன்மேல் உயிரையே வைத்திருந்த சேகரை நினைக்க அவளுக்குப் பச்சாதாபமாகவும் இருந்தது.

"சேகர், உன்னை நான் ஏன் வெறுக்கப்போகிறேன்? அல்லாமல் நான் உன் நட்பைப் போற்றுகிறேன்-அந்நட்பு வேறு உணர்ச்சியாக மாறுதவரை! உனக்கு மட்டுமல்ல, வேறு எந்த ஆடவனுக்கும் என் வாழ்வில் இடமில்லை." சேகர் தன் அடர்ந்த கேசத்தை விரல்களால் கோதினான்.

"உஷா, இந்தச் சினிமா உலகம் ஒரு கனவுலகம் உஷா, இந்தக் கற்பனை வாழ்வில் நீ எத்தனை காலம் திருப்தி காணப் போகிறாய்? ஒரு அரிய, அற்புத விளை யாட்டுப் பொருளைக் கண்டு திகைத்து மயங்கி நிற்கும் குழந்தையின் நிலையிலிருக்கிறாய், உஷா. இந்த வெள்ளி உலகின் ஒளி விளக்குகள் உன் கண்களைக் குருடாக்கிவிட் டன. அதற்கப்பால் காத்திருக்கும் வாழ்வை நீ காண முயற்சிக்கவில்லை, உஷா........"

"முயற்சிக்கவேண்டியதில்லை விரும்பியதுமில்லை சேகர். இந்தக் கனவுலகம் தான் என் உலகம். இங்கு பெறும் வாழ்வுதான் என் மனம்போன்ற வாழ்வு. நீங்கள் காட்டும்

வாழ்வு எனக்குத் திருப்தியளிக்கப்போவதில்லை.'' என்ன இருந்தாலும் உஷாவின் உள்ளம் வருந்தத்தான் செய்தது. அவள் நீல நெடுங்கண்களில் பரிதாபம் மின்னியது.

"உன் உள்ளத்தை நோக வைப்பதற்காக வருந்துகிறேன் சேகர். ஆனால் என் முடிவு மாற்றமுடியாதது..." சேகரின் நெற்றி நரம்பு புடைத்தது.

''நீ எனக்காகப் பரிதாபப்படவேண்டாம் உஷா. உன் அன்பை யாசித்தேனே தவிர உன் அனுதாபத்தை நான் வேண்டவில்லை. சீ! நீ உயிரும் உணர்வுமற்ற வெறும் உருவம் உஷா! மரப்பாச்சி! பொம்மை! காதலின் வேதனையையெல்லாம் வெள்ளித்திரையில் அள்ளிக் காட்டும் நீ உன் உள்ளத்தில் அதை உணரத் தவறியது ஏன் உஷா? உணர்ச்சியின் பிழம்பாய்த் திரையில் தோன்றுவாயே! இப்பொழுது உணர்வற்ற ஜடமாய் நிற்கிறாயே!...... இன்று எனக்காக அனுதாபப்படுகிறாய் உஷா. ஆனால் உன் நிலைக்காக, உனக்காக, நீயே அனுதாபப்படும் நாள் வரும் உஷா. நான் வருகிறேன்.'' சேகர் அதே மூச்சோடு போய்விட்டான்.

"பாவம் சேகர்'' என்று முணுமுணுத்த உஷா மணியைப் பார்த்துவிட்டு அவசரமாக 'ஷூட்டிங்'க்குப் புறப்பட்டு விட்டாள். அவள் சேகரை மறந்து விட்டாள்.

காலம் காத்திருப்பதில்லை. இன்பத்தையோ, துன்பத்தையோ, இடரையோ, ஏற்றத்தையோ கண்டு அது தயங்குவதுமில்லை அது தன் கதியில் ஓடிக்கொண்டிருந்

தது. இன்று உஷா புகழ்பெற்ற நட்சத்திரமாகிவிட்டாள். அவள் தேடிய பேரும் புகழும் அவள் நினைத்ததற்கு மேலாகவே கிடைத்து விட்டது. அவளை ஒப்பந்தம் செய்ய நான் நீயென்று முந்திக்கொண்டனர் தயாரிப்பாளர்கள். குழந்தை முதல் கிழவர் வரை வந்திக்கும் தெய்வமாகிவிட்டாள் உஷா..........

புகழின் ருசியிலே, வெற்றியின் பெருமிதத்தில் மயங்கிக் கிடந்தாள் உஷா. அவள் இதயதாகம் தணிந்திருக்க வேண்டுமே! ஆனல்..........ஆனல் அவள் உள்ளத்தில் ஏதோ குறையிருக்கத்தான் செய்தது. அவள் உள்ளத்தை அரித்த அந்தக் குறையுணர்ச்சிக்கு அவளால் உருவம் கொடுக்க முடியவில்லை. நிகரற்ற நட்சத்திரமாய் விளங்கி என்ன? பேரும் புகழும் பெருகியென்ன? ஏனே அவள் உள்ளம் திருப்திப்படவில்லை. அவளுக்கு எதிலும் புலன் செல்லவில்லை. காரணமின்றி எல்லோர் மீதும் எரிந்து விழத் தொடங்கினுள். ஓய்வில்லாத கடும் உழைப்பு மிகுதியே அவள் மனச்சஞ்சலத்திற்குக் காரணமென்றனர். ஒரே சமயத்தில் இருபத்தைந்து படங்களில் நடித்து வந்தாளல்லவா? தங்கள் படத்தின் வெற்றியை மனதில்கொண்ட தயாரிப்பாளர்கள் அவளைச் சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொள்ளத் தூண்டினர். தன் பிறந்த ஊரான சோலையூருக்குச் சென்று நிம்மதியாக ஒரு வாரமாவது இருந்துவிட்டு வரலாம் என்று அவள் தாயும் தூண்டினுள். உஷாவுக்கு அது நல்லதாகவே பட்டது. தத்தளிக்கும் தன் மனதை நிலைப்படுத்தி வரலாம் என்று நினைத்தாள். பிரபல நட்சத்திரம் உஷா சாதாரணப்பெண்ணுகச் சோலையூர் சென்ருள். ஆனல், அவள் நினைத்ததற்கு மாருக அங்குகிடைத்த தனிமையும் ஓய்வும் அவள் சஞ்சலத்தை

வளர்த்தனவே யொழிய அதற்கு மருந்தாகவில்லை. அந்தக் கிராமத்தின் சூழ்நிலை அவளை மேலும் கலக்கியது.

மாலை வேளையில் உஷா ஆற்றங்கரைக்குச் சென்று பொழுதைக் கழிப்பாள். அங்குதான் ஊர் மக்களெல்லாம் மாலையில் தம் பொழுதை இன்பமாய்க் கழிக்க வருவார்கள். அந்த இன்பம் அவர்கள் திருப்திக்குப் போதும். உஷா அவர்களை வேடிக்கை பார்ப்பாள். அன்றும் உஷா வருவோர் போவோரை வேடிக்கை பார்த்தபடியே இருந்தாள்.....தூரத்தில் வந்துகொண்டிருந்த இளைஞனொருவன் அவள் கண்களில் தட்டுப்பட்டான் அவனருகில் உரிமையோடு ஒரு இளம்பெண் ஒயிலாக நடந்து வந்தாள். அவள் கையில் ஒரு வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை. அந்த இளைஞனை எங்கோ பார்த்தது போல்......சேகரா? அவள் இதயம் வேதனையோடு பாய்ந்து துடித்தது........ வைத்த கண் வாங்காது பார்த்தாள்...அவர்கள் நெருங்கி வந்தார்கள். இல்லையில்லை! அவன் சேகரேயல்ல! ஆனால் அதே சாயல்தான்! அப்பாடா! உஷா நிம்மதியாக மூச்சு விட்டாள். அவளுக்கே ஆச்சரியமாகவிருந்தது. அவன் சேகரல்ல என்றதும் தனக்கேன் இத்தனை ஆறுதல் ஏற்படவேண்டும்?........அவர்கள் அழகான இளந்தம்பதிகள் தான்! உஷாவுக்குச் சிறிது தூரத்தில் அமர்ந்தார்கள். குழந்தையைச் சாக்கிட்டு அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்ட இன்பப்பேச்சுக்கள் எல்லாம் அவள் காதில் அரைகுறையாய் விழுந்தன. உஷா தனக்குள் சிரித்துக்கொண்டாள். இதைப்போல் எத்தனை காதல் கட்டங்களில் அவள் நடித்திருக்கிறாள்—தத்ரூபமாக! ஆனால் அதிலொன்று

கூட அவள் நெஞ்சைத் தொட்டதில்லையே! உஷாவின் உள்ளத்தில் ஏக்கம் பொங்கியது. பயங்கரத் தனிமை உணர்ச்சி அவளை வாட்டியது. அன்று சேகர் சொன்ன சொற்கள்..........அவள் இன்றுவரை மறந்து விட்ட சொற்கள் அக்கணத்தில் பசுமையாக அவள் நினைவில் எழுந்தன—''காதலின் வேதனையையெல்லாம் வெள்ளித்திரையில் அள்ளிக்காட்டும் நீ, உன் உள்ளத்தில் அதை உணரத் தவறியது என் உஷா? இன்று எனக்காக அனுதாபப் படுகிறாய்! உனக்காக நீயே அனுதாபப்படும் நாள் வரும் உஷா?'' அன்று தீர்க்கதரிசிபோல் சேகர் எவ்வளவு பெரிய உண்மையைக் கூறி விட்டான். உஷா தன்னைத்தானே உணர்ந்துகொண்டதைவிடச் சேகர் அவளை எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தான். அவன் அவளிடம் கொண்ட ஆழ்ந்த அன்புதான் அதற்குக் காரணமோ? கண்களில் நீர் திரையிட உஷா எழுந்து வீட்டை நோக்கி நடந்தாள்.

●

அன்று ''ஷூட்டிங்' குறிப்பிட்ட நேரத்திற்குப் பிந்திவிட்டதால் சேகர் வீடு திரும்பும் பொழுது இரவு மணி பத்தாகிவிட்டது. யாரோ தன்னைக்காண வெகுநேரம் காத்திருப்பதாக அறிந்ததும் நேரே யாரென்று காணச்சென்றான். அங்கு பொறுமையாக அமர்ந்திருந்த பெண்ணைக் கண்டதும் தன்னை மறந்து கூவிவிட்டான்.

''உஷா! உஷா!'' உஷா கஷ்டப்பட்டுச் சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

"நானே தான் சேகர். நம்பமுடியவில்லையா? அன்று, அதற்குப் பிறகு உன்னைக் காணவே இல்லையே! நானாவது உன்னைக் கண்டு செல்லலாமென்று நினைத்தேன்.''

"உண்மையில் நீதான் உஷா! என் கண்களின் குறும்பு தானுக்கும் என்று நினைத்தேன். என்னை ஞாபகம் வைத்திருக்கிருயே!," என்று சேகர் சிரித்தான். உஷாவுக்குச் 'சுருக்'கென்று தைத்தது. வாண்ட புன்னகையொன்று அவள் உதடுகளில் தெளிந்தது

"என் இலட்சியம் நிறைவேறி விட்டது சேகர்." சேகர் ஒன்றும் பேசாது அவளைப்பார்த்தான். உஷா மெதுவாகத் தொடர்ந்தாள்.

"சேகர்..........ஆனுல் இப்பொழுதுதான் நான் எனக்காக வருந்துகிறேன், சேகர்......எனக்காக அனுதாபப் பட்டுக்கொண்டிருக்கிறேன்....."

"உஷா, இதென்ன பேச்சு? தேயாத மதியாக நட்த்திர வானில் விளங்குகிருய். பேரும், புகழும், வாழ்த்தும், வந்தனையும் வேண்டிய அளவு—"

"—இருக்கிறதுதான் சேகர். ஆனுல்.....ஆனுல் வாழ்வில் எனக்கு இவை நிறைவளிக்கவில்லையே! என் மனதின் ஏக்கத்தை இவை தணிக்கவில்லையே, சேகர்........ என்னை......என்னை மன்னிக்கும்படி கேட்கவே வந்தேன்....."

"உஷா" சேகரின் உணர்ச்சி வசப்பட்ட அழைப்பு அவளை மெய்சிலிர்க்கச் செய்தது.

உஷா, இதைத்தான் உனக்கு அன்று சொல்ல முயன்றேன். ஆனுல் நீ புரிந்துகொள்ளவில்லை. தானுக நீ உணரும்வரை பொறுத்திருக்க நினைத்தேன்!"

"சேகர், உண்மையாகவா?" உஷாவின் உள்ள ஏக்கம் தேய்ந்து மறைந்து மனக்கலசம் பொங்கி நிறைந்தது

★

"இன்று பத்திரிகையைப் பார்த்தாயா உஷா?" சேகர் சிரித்துக்கொண்டே கேட்டான். அவன் தோள் வழியே எட்டிப் பார்த்தாள் உஷா.

"திரையுலகின் மகத்தான நஷ்டம்! பிரபல நட்சத்திரம் உஷா திரையுலகைத் துறந்து விட்டார்," என்று கொட்டை எழுத்துக்களில் இருந்தது. உஷா தன் கணவனைப்பார்த்து முறுவலித்தாள்.

செப்டெம்பர் 1960



# உன்னை உணர

சுந்தரியைப் போன்று பொருத்தமான பெயர் பெற்றவர் எவரும் இருக்க முடியாது. சுந்தரியை அழகி என்று சொன்னால் சாதாரணமாய்ப் போய்விடும். ஒரு வயதுக் குழந்தையான சுந்தரியைத் தனக்குப் பாரமாக விட்டு விட்டுத் தன் மகனும் மருமகளும் கார் விபத்தில் மாண்டு போகப் பாட்டனார் ராமசுந்தரமே அவளை எடுத்து வளர்த்தார். அவளுடைய சிவந்த மேனியையும் சுருள் கூந்தலையும் வண்டுக் கண்களையும் ரோஜா உதடுகளையும் கண்டு அவர் தான் அவளுக்குச் சுந்தரி என்று பெயரிட்டார். அந்த அமானுஷ்யமான சௌந்தரியம் அவருக்குப் பலத்த யோசனையைக் கொடுத்தது. ராமசுந்தரம் பழங்காலத்து மனுஷர். பழைய நம்பிக்கையில் ஊறியவர். 'ஒரு பெண்ணுக்கு இத்தனை அழகா? அழகோடு அளவிறந்த செல்வமுமா? இவ்வளவு அழகும் என்ன அனர்த்தத்திற்கோ? இது மனித அழகல்ல . . . . தெய்விக அழகு' என்று அச்சத்தோடு எண்ணிக் கொள்வார். ஆனால் சுந்தரி இதையெல்லாம் அறியாது, தன்னுணர்வின்றி, அடக்குவாரின்றிச் சுயேச்சையாகக் காட்டு மான்போல் வளர்ந்தாள்.

தான் அழகானவள் என்று அறிந்து பூரிக்காத பெண் எங்குமில்லை. ஆனால் சுந்தரி தன் அழகை நோகவேண்டிய காலம் சீக்கிரமாகவே வந்தடைந்தது. தாத்தாவின் மென்மையான அரவணைப்பில் வளர்ந்த சுந்தரிக்கு வெளியுலகத்

தாரின் கொடுமை விளங்கவில்லை. தன் வயதுப் பெண்கள் தன்னை ஏன் குத்திப் பேசுகிறார்கள், மனம் நோகச் செய்கிறார்கள் என்று அவளுக்கு முதலில் விளங்கவில்லை. அவள் திறந்த மனத்தோடு உள்ளன்போடு சிநேகத்தை எதிர்பார்த்துத் தன் சக மாணவிகளை நெருங்குவாள். ஆனால் அங்கு பதிலுக்கு எரிச்சலையும், பொறாமையையும், வெறுப்பையுமே கண்டாள். அவர்கள் பேச்சிலிருந்து சிறிது சிறிதாக அவர்கள் நடத்தையின் காரணம் புலனாயிற்று. அதன் பிறகு தான் தன் உருவத்தைப் புதுக் கண்களோடு நோக்கினாள். தன் அழகை அன்றுதான் உணர்ந்தாள். அழகோடு பிறந்தது அவள் குற்றமா?

தாத்தாவைத் தவிர வேறு ஆண்களை அறியாத சுந்தரிக்கு இந்த ஆடவர்களின் போக்கும் பார்வையும் சகிக்க முடியவில்லை. அவர்கள் தேன் குடித்த நரி போலத் தன்னை நோக்குவதை காணச் சுந்தரியின் உடல் கூசிக் கூனிக் குறுகும். 'அவர்கள் என்னைப் பார்க்கவில்லை — என் அழகைத் தான் பார்க்கிறார்கள்! சே! இவ்வளவு தானா நம் மதிப்பு? அழகு அழகு என்று மாய்கிறார்களே! இதனால் என்ன நன்மை? மனிதனின் கடையான குணங்கள் எவையோ அவற்றையெல்லாம் தூண்டி விடுகிறதேயொழிய இதனால் உயர்ந்த எண்ணம் கொண்ட ஒருவரைக் கூடக் காணவில்லையே' என்றெல்லாம் எண்ணி நொந்தாள். சுந்தரியின் மனம் பதினெட்டு வயதிற்குள் பாறை போலாகிவிட்டது. தன் அழகை விஷம் போல வெறுத்தாள். ஆனால் அது கூடுவதே யொழியக் குறைவதாகத் தெரியவில்லை . . . . ஒரு நாள் ராமசுந்தரத்திடம் தயங்கியபடியே வந்து நின்றாள் . . . . "அப்பா நான் இனிமேல் கலாசாலைக்குப் போகவில்லை" தயக்கத்தோடு கூறினாள். புத்தகத்தை மூடிவிட்டு நிமிர்ந்த ராமசுந்

தரம் "ஏனம்மா?" என்றார். 'எல்லோரும் என்னழகைப் பார்க்கிறார்கள் — என்னால் தாங்கமுடியவில்லை' என்று எப்படிச் சொல்லுவாள்?

"என்னவோ பிடிக்கவில்லை அப்பா! நீங்கள் தனியே இத்தனை பெரிய வீட்டில் இருக்கிறீர்களே! உங்களோடு இருக்க வேண்டும் போலிருக்கிறது", என்று மழுப்பினாள். அழகின் பூரணப் பொலிவோடு நின்ற சுந்தரியை ராமசுந்தரம் பார்த்தார். அவர் நெற்றியில் ஒரு சுருக்கம் விழுந்தது. சுந்தரி நேற்றிருந்தவளா? அவள் படரவேண்டிய கொடி!

"அதற்கென்ன அம்மா! பெண்ணுக்கு அதிகப்பட்ட படிப்பெதற்கு? எனக்கும் வயதாகி விட்டது. உனக்கொரு கல்யாணம் செய்து வைத்து விட்டால் நான் நிம்மதியாக மூச்சு விடலாம்!" ராமசுந்தரம் பேச்சோடு நின்றுவிடாமல் அதைச் செயலாக்குவதில் முழு மூச்சோடு இறங்கினார். சுந்தரி இதை என்றோ நடக்கவேண்டிய ஒரு நிகழ்ச்சியாக ஏற்றுக் கொண்டு விட்டாள். ஆனால் பருவ மங்கையின் மனதில் எழும் இனிய கனவுகள், கற்பனைகள் அவள் மனதில் காணப் பெறவில்லை. ஆசையை அன்றி வேறொன்றையும் ஆண்களின் கண்களில் கண்டறியாது அருவருப்புக் கொண்ட சுந்தரியின் மனதில் காதல் நினைவுகள் எழவில்லை. ஆனால் கல்யாணமாகி விட்டால், தான் ஒருவனுக்குச் சொந்தமாகிவிட்ட அந்த நிலை மற்ற ஆடவரின் எண்ணங்களிலிருந்து தனக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்றொரு நம்பிக்கை துளிர்விட்டது.

ராமசுந்தரமும் சுந்தரிக்கேற்ற வரனைத் தேடிவிட்டார்.

சந்திரசேகரன் விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தில் உயர்ந்த பதவி வகித்து வந்தான். இத்தனை இளம்

வயதில் தன் ஆற்றலைப் பலவிதத்திலும் காட்டிவிட்டான். அவன் எதிர்காலத்தில் உயர்ந்த நிலை அடைவான் என்று கூறினார்கள். தற்பொழுதும் ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான். சந்துரு சுந்தரியைக் கண்டதும் சம்மதம் தெரிவித்துவிட்டான். சுந்தரியின் கல்யாணமும் நடந்தது. சந்துரு முழுவதும் அவள் அழகில் கட்டுண்டு கிடந்தான். ஓய்வு நேரமெல்லாம் ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடப்பவன், சுந்தரியைச் சுற்றி வந்தான். அவளைப் பல இடங்களுக்கும் தன் மனைவியெனப் பெருமையோடு அழைத்துச் செல்வதில் பூரித்தான். சந்துருவிடம் ஆசையோடு அன்பையும் உணர்ந்த சுந்தரி கணவனிடம் பாசத்தால் கட்டுண்டு நிம்மதியான இன்பத்தை அனுபவித்தாள். அன்று சந்துருவின் நண்பன் வீட்டில் விருந்து. தாத்தாவிற்குச் சாப்பாடு போட்டுவிட்டுப் பாலைக் காய்ச்சிக் கொடுத்து விட்டு உடுத்திக் கொள்ள வந்தவள் அறையிலிருந்து வெளியேறிய சந்துருவோடு முட்டிக் கொண்டாள். அவன் மடிப்புக் கலையாத உடையில் காட்சியளித்தான்.

"நீங்கள் உடுத்தி விட்டீர்களா?" என்றாள் சுந்தரி. ஒரு கண நேரம் அவன் முகத்தில் சங்கடம் பாய்ந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டு, 'சுந்தரி' என்றான் தயக்கத்தோடு. "அந்த அழைப்பு எனக்கு மட்டும்தான். அது ஆடவர்கள் விருந்தாம். இருவருக்கும் என்று நினைத்து உன்னையும் ஆயத்தமாய் இருக்கச் சொல்லிக் காலையில் சொல்லிவிட்டேன் . . . . . ." இழுத்தான் சந்துரு.

"அதற்கென்ன? நீங்கள்போய் வாருங்கள்" அமைதியாகச் சொன்னாள் சுந்தரி. நிம்மதியாக மூச்சு விட்ட சந்துரு போய் விட்டான். சுந்தரி நேரே போய் மேஜையின் மேல் பார்த்தாள். பிறகு கீழேயிருந்த குப்பைக் கூடைக்குள் குனிந்து துளாவினாள்.

— அதற்குள் அந்த அழைப்பிதழ் கிழிந்து கிடந்தது. துண்டுகளைச் சேர்த்துப் பிடித்துப் பார்த்தாள். அவள் நினைத்ததுபோல் அழைப்பு இரண்டு பேருக்கும்தான். அப்படியானல் சந்துரு . . . . ஏன் பொய் சொன்னன்? நெற்றியைச் சுருக்கினுள் சுந்தரி. அன்றிரவு விருந்திலிருந்து திரும்பியதும் சந்துரு வீட்டிலமைத்திருந்த தன் ஆராய்ச்சிக் கூடத்திற்குள் புகுந்துகொண்டான். இரவு வெகுநேரம் வரை அங்கேயே இருந்தான். எப்பொழுது வந்து படுத்தானே தெரியாது.

அன்றிலிருந்து சந்துருவிடம் உள்ளூர ஏதோவொரு மாற்றம் புலனுகத் தொடங்கியது. சிறிது காலத்திற்குப் பின் சந்துரு பொய் சொல்லிக் கஷ்டப்படவில்லை. "நீ வரவேண்டாம்" என்று வெளிப்படையாகவே சொல்லிவிடுவான். ஒரு நாள் அவன் விருந்திலிருந்து திரும்பிய போது தான் அவளுக்கு விஷயம் விளங்கியது. நெற்றி நரம்பு புடைக்கச் சிவந்த முகத்தோடு வந்தான் சந்துரு. சுந்தரியைக் கண்டதும் அவன் எரிச்சல் பொத்துக்கொண்டு வந்தது. "மனைவியாம் மனைவி! மண்ணுங்கட்டி! எத்தனை வருஷத்திய நண்பன் நான் நிற்கிறேன். என்னைக் கவனிக்கிருனு? மனைவியை ஏன் அழைத்து வரவில்லை என்று உயிரை விடுகிருன்! ஏமாற்றி விட்டேனும் ஏமாற்றி" பொரிந்து தள்ளினன்! ...... சுந்தரி அப்பொழுது தான், சந்துரு பொருமை பிடித்து அலைந்தான் என்றறிந்தாள். 'அதுவும் தன் அழகு தூண்டிய பொருமை! எந்த அழகை வெறுத்தாளோ, எந்த அழகுக்கு வேலியமைத்துவிட்டதாக நினைத்தாளோ அந்த அழகால் எரிந்த பொருமை' என்று நினைக்க அவளுக்குத் தாங்க முடியவில்லை. சந்துரு எதிலும் மனதைச் செலுத்த முடியாமல் நிலைகொள்ளாமல் தவித்தான். அவனுடைய ஆராய்ச்சிக் கூடத்தில் தூசி படிந்தது. அவனுடைய நடத்தை வரவர விபரீதமாகிக்கொண்டு வந்தது.

வீட்டிற்கு யாராவது வந்தால் சுந்தரியை அவர்கள் கண்ணில் பட விடமாட்டான். அவள் வீட்டில் இருக்கவே எங்கோ போய்விட்டாள் என்று கூசாமல் பொய் சொல்லுவான். அவளை வீட்டிற்கு வெளியே செல்ல அனுமதிக்க மாட்டான். ஓரிருவர் அவளைக் களங்கமான மனதோடு பார்க்கலாம். ஆனுல், சந்துருவின் சந்தேக மனத்திற்கு எல்லாமே அப்படித் தோன்றிற்று. யாராவது சாதாரணமாக, "உன் மனைவியை அழைத்து வரவில்லையா?" என்று கேட்டால் போதும். அது அவன் மனதிற்கு விகற்பமாகவே் பட்டது. அதன் பிறகு அவன் மனம் வேறெதிலும் ஓடாது.

அன்றிரவு மூன்று மணியிருக்கும். சுந்தரி யன்னல் வழியே வானத்தை வெறித்துப் பார்த்தவாறு நின்ருள். சந்துருவின் மெல்லிய மூச்சு அவளுக்குக் கேட்டது. அமைதியாகத் தூங்குகிருன். இவன்தான் சிறிது நேரத்திற்கு முன் கனல் கக்கும் எரிமலையாகக் குமுறினுன் என்று அவளால் நம்பமுடியவில்லை. அன்று சந்துருவின் பெரியப்பா பிள்ளையின் கலியாணம். அவர்கள் சுந்தரியைக் கையோடு அழைத்துப் போய்விட்டார்கள். சந்துருவால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இரவு விருந்திற்குப் பின்தான் அவர்கள் வீட்டிற்குத் திரும்ப முடிந்தது. வந்ததும் அவன் போட்டுவிட்ட சத்தம்! கண்டபடி திட்டினுன். அவற்றைச் சுந்தரி ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. ஆனுல் அவன் சொன்ன சில வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவள் மனதில் சம்மட்டி கொண்டு அறைந்தன.

"நீ குறுக்கும் நெடுக்கும் அவசியமில்லாமல் நூறுதரம் நடக்கவும், அந்த மடையன்கள் உன்னைப் பார்த்துப் பல்லை யிளிக்கவும்..... அவர்களைச் சொல்லியென்ன? நீ ஒழுங்காக இருந்தால் அவர்கள் ஏன் நெருங்குகிருர்கள்? உனக்கென்ன பல்லிளிப்பு வேண்டியிருக்கிறது?......" சுந்தரி இடிந்துபோய்

அப்படியே உட்கார்ந்து விட்டாள். ஏசட்டும் திட்டட்டும் பரவாயில்லே. ஆனல் தன் கணவனே தன் நடத்தைக்கு மாசு கற்பிப்பதா? இதென்ன விபரீதம்? கணவன் என்று ஒருவன் வந்தால் தனக்குக் காப்பு என்று நினைத்தாள். அவள் எண் ணியதில் தவறில்லே. மற்றவர்களின் எண்ணங்களிலிருந்து அவளுக்குக் காப்பாக அமைந்தான். ஆனல் அவனுடைய தடம் புரண்ட மனத்திலிருந்து, எண்ணங்களிலிருந்து என்ன காப்பு இருக்கிறது? எல்லாவற்றிற்கும் என் அழகு தானே காரணம்? இந்த அழகைத் தவிர்த்து என் உள்ளத்தை ஒரு வரும் உணரவில்லேயே? என்னே என் அழகுக்காக அல்லாமல் உள்ளத்திற்காக மதிக்கும் ஒருவரைக் கண்டால் போதும்! என்று பலவாறு எண்ணி ஏங்கி நைந்தாள் சுந்தரி.

அதிர்ச்சியிலிருந்து மீண்ட சுந்தரி வந்து பார்த்தபொழுது சந்துரு படுத்துவிட்டான் ...... ஜன்னலே விட்டு மேசைக்கடி யில் போய் உட்கார்ந்தாள் சுந்தரி. நான்கு மணியிருக்கும், மெல்லிய உதய ஒளி ஜன்னல் வழியே புகுந்தது. அதன் வெளிச்சத்தில் சுந்தரி என்னவோ வேகமாக எழுதிக்கொண் டிருந்தாள். அடிக்கடி சந்துருவை நோக்கினுள். அவன் அசை யாமல் படுத்திருந்தான்......வானம் வெளுத்துவிட்டது. சுந் தரி கடிகாரத்தைப் பார்த்தாள். ஆறு மணியாகி விட்டது. அவள் பேனேயை மூடிவிட்டுக் கையிலிருந்த சிறு புத்தகத் தைக் கொண்டுபோய்த் தன் சேலேகள் அடுக்கி வைக்கப்பட் டிருந்த அலமாரி லாச்சியினுள் ஓசைப்படாமல் வைத்துவிட்டு வெளியேறினுள்.

அவள் அடுப்பு மூட்டிப் பால் காய்ச்சிக் காப்பி போட்டு எடுத்துக் கொண்டு வந்த போது சந்துருவைப் படுக்கையில் காணவில்லே. பல் துலக்கப் போய்விட்டான் போலும் என

நினைத்தவள், மேசை மீது காப்பியை வைத்து மூடினாள். நேற்றிரவுக்குப் பின் சந்துருவைப் பார்க்க அஞ்சினாள். சிறிது நேரம் தயங்கிவிட்டு, ராமசுந்தரத்துக்குக் காப்பி கொடுக்க வில்லை என்ற நினைவு வரப் போய் விட்டாள்.

சந்துரு ஐந்து நாட்களாக எட்டிப் பார்க்காத தன் ஆராய்ச்சிக் கூடத்தில் உற்சாகத்தோடு வேலை செய்து கொண்டிருந்தான். தன் குறிப்புக்களை வைத்துக் கொண்டு அதைப் பார்த்து ஏதோ ஒரு கூட்டுத் திராவகத்தை ஒரு குழாயில் தயாரித்தான். அடுப்பை(Burner)மூட்டிக் குழாயை அதன்மேல் பொருத்தினான். அவன் செய்து வந்த ஆராய்ச்சியில் இதுவரை எடுத்த குறிப்புக்கள் இவை. இவ்வளவு நாளுமில்லாத உற்சாகத்தோடு இருக்கிறானே! — ஆராய்ச்சியின் முடிவு காணப் போகிறானோ? சந்துரு குழாயில் கொதித்துக் கொண்டிருந்த திராவகத்தை உற்று நோக்கியபடி அருகில் நின்றான். அவனுடைய முகத்தில் ஒரு அலாதியான திருப்தி நிலவிற்று.

இன்னொரு குழாயைக் கையிலெடுத்தான். அதிலிருந்த திராவகத்தை அடுப்பின் மேலிருந்த குழாயில் விட்டான். அவனுடைய மெல்லிய உதடுகளில் ஒரு விசித்திரமான புன்னகை நெளிந்தது. நெற்றியில் வியர்வை முத்துக்கள் மின்னின. குழாய்த் திராவகம் கொதித்துப் பொங்கி ஒரு வித ஆவி எழுந்தது. சந்துரு அசையாமல் கட்டுண்டவன் போல் குழாயில் நடனமிடும் திராவகத்தைப் பார்த்தவாறு நின்றான்.

'படீர்!' குழாய் வெடித்துத் திராவகம் நான்கு திக்கும் சிதறியது. சந்துருவின் கண்களில், முகத்தில் தெறித்து வழிந்தது......கொல்லும் வேதனையைத் தாங்கமுடியாத சந்துரு தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டு, ''சுந்தரி! சுந்தரி!

என்று கத்தினன். இந்தக் கூப்பாட்டைக் கேட்ட சுந்தரி ''இரவுக் கூத்தின் தொடர்ச்சிக்குத்தான் கத்துகிருரோ ?'' என்று நினைத்துப் பயத்தால் மனம் வெலவெலக்க ஓடிவந்தாள். ஆராய்ச்சிக் கூடத்துக்குள் அடி எடுத்து வைத்தவள் திகைத்து நின்ருள். ''கிறீச்'' சென்று அவள் தொண்டையிலிருந்து பரிதாப ஓலம் ஒன்று எழுந்தது.

கண்களைச் சுற்றிக் கட்டோடு சந்துரு படுத்திருந்தான். பழரசத்தோடு சுந்தரி அறையினுள் பிரவேசித்தாள். காலடியோசை கேட்டதும் சந்துரு "சுந்தரி ?......" கேள்விக் குறியோடு கேட்டான். "இதைக் குடிக்கிறீர்களா?" என்று கேட்டவாறு அருகில் வந்தாள்.

''குடிக்கிறேன், முதலில் இப்படி உட்கார்'', என்று கட்டிலைத் தட்டினன். சுந்தரி மௌனமாக உட்கார்ந்தாள்.

''சுந்தரி, டாக்டர்......என்ன சொன்ருர் ? எனக்குக் கண்......மீண்டும்......தெரியுமா ?''.

சுந்தரியின் கண்ணீர் சந்துருவின் கையில் பட்டுத் தெறித்தது. "சுந்தரி !" அவன் தட்டித் தடவி அவள் முகத்தைத் தொட்டான். கண்ணீரில் தோயும் கன்னங்களைத் தடவினன் ......அவனுடைய காய்ந்த உதடுகளில் ஒரு புன்னகை தோன்றிற்று. ''அப்படியானல்......அப்படியானல் எனக்கு இனிமேல் கண் தெரியாது ! அதுதானே -- ஒரு நிமிஷம் பயந்துவிட்டேன் - எங்கே என்......'' தனக்குத் தானே பேசுவது போல் முணுமுணுத்தான்.

''அத்தான் !'' சுந்தரி வேதனையோடு அச்சத்தோடு குறுக்கிட்டாள். ''என்ன சொல்கிறீர்கள் அத்தான் ?''

"என்ன சுந்தரி! என் கண்கள் போய் விட்டாலும் உன் கனவு பலித்துவிடும். வேண்டுமென்று தான் அந்தத் திராவகத்தை என் கண்களுக்குள் தெறிக்கவிட்டேன். அந்தத்திராவகம் என் கண்ணின் மணிகளைச் சுட்டெரித்து விடும். நான் அதற்காகவே அதைத் தயாரித்தேன்......"

"ஐயோ அத்தான்! என்னைப் பார்க்கக் கூடாதென்று உங்கள் கண்களைப் பறித்து விட்டீர்களா? நான் உங்களுக்கு அத்தனை பாவியாகவா தெரிகிறேன்?"

"உன்னைப் பார்க்கக் கூடாதென்று அல்ல சுந்தரி. உன் அழகைப் பார்க்கக் கூடாதென்றுதான். நீ உன் குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தாயே? 'மனிதனின் கடையான குணங்களைத் தூண்டி விடுகிறதே யொழிய இதனால் உயர்ந்த எண்ணம் கொண்டவர் ஒருவருமில்லை. புற அழகைத் தவிர்த்து உள்ளேயிருக்கும் பெண்ணை மதிக்கும் ஒருவரைக் கண்டாலாவது கொஞ்சம் நிம்மதி யேற்படும் என்று"

"அத்தான்! ஐயோ! நீங்கள் அதைப் படித்து விட்டீர்களா? உங்களை இந்த முடிவுக்கு விரட்டியது நானா?"

"சட்! சுந்தரி! நான் தூங்கி விட்டேன் என்று நீ நினைத்தாய். ஆனால் ஏதோ எழுதிக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். உன் மேல் கொண்ட சந்தேகத்தால் தான் நீ போனபின் அந்தப் புத்தகத்தை அலமாரியிலிருந்து எடுத்து முழுவதும் படித்தேன். அதுதான் என் அறிவுக் கண்களைத் திறந்து விட்டது. எவ்வளவு கீழ்த்தரமாக நடந்துகொண்டிருந்தேன் என்றறிந்தேன். ஆனால் தெளிந்த குளத்திலும் கற்கள் விழுந்தால் கலங்கிச் சேறாகிவிடும். இப்பொழுது தெளிந்துவிட்ட என் அறிவு மீண்டும் கலங்கி விடுமோ என்று அஞ்சி

னேன். ஒன்று எனக்கு உறுதியாய்ப் பட்டது. உனக்கும் எனக்கும் நிம்மதி வேண்டுமென்றால் என் புறக்கண்கள் தெரியக்கூடாது. அவை தெரிந்தால் தானே என் புத்தி விகல்பமடையும்? உனக்கிழைத்த அநீதிகளுக்கு என் பிராயச்சித்தம் இது. உன் பரிபூரண அழகை அறிய, உன்னை உணர எனக்குக் கண்கள் தேவையில்லை......எங்கே ஏதோ குடிக்கக் கொண்டு வந்தாயே ?"

சுந்தரி தன் உடலழகுக்காக அன்றி உள்ளத்திற்காகத் தன்னை மதிக்கும் ஒருவனுக்காக ஏங்கினாள் - அவன் அவள் கணவனாகவே அமைந்து விட்டான். இதை விடப் பேறு உண்டா! ஆனால்..... ஆனால் இந்த முறையிலா பெறவேண்டும்? அட கடவுளே!

24-5-62.



# சரியா தப்பா?

"நீ வரமாட்டாயென்று எனக்குத் தெரியும் விமலா! காதலுக்கு நான் வேண்டும்! கற்புக்கு உன் கணவன் வேண்டும்! அப்படித்தானே?" வார்த்தைகளைக் கக்கிவிட்டு சுந்தர் புயலெனப் போய்விட்டான். ஆனால் அந்தக் குத்தல் மொழிகள் மட்டும் விமலாவின் காதில் சுழன்று சுழன்று ஒலித்தன. அவள் செயலிழந்து சிலையென உட்கார்ந்திருந்தாள்.

சுந்தர் விமலாவிடம் இத்தனை கடுமையாகக் கசப்போடு இதுவரை பேசியதேயில்லை. அவள் இதயம் நொந்தது. 'கணவனும்......கணவன்!' என்று முணுமுணுத்த விமலா ஆனந்தனை நினைத்துப் பார்த்தாள். அருவருப்பால் அவள் முகம் சுருங்கியது! அழகுக்கு அவள் இலக்கணமென்றால் ஆனந்தனோடு அவளை இணைத்து வைத்தது விதியின் குறும்புதான்.

ஆனந்தனை விமலா விரும்பவில்லை. ஆனால் அவனிடம் இல்லாத கவர்ச்சி அவனுடைய பணத்தில் இருந்தது. அற்ப ஆசைகளைக்கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத வறுமையோடு போராடிய விமலாவுக்குப் பணமொன்றே பெருந்தெய்வமாகத் தோன்றியது. அந்த மயக்கத்தில் ஆனந்தனை மணந்தாள். பணமிருந்தால் வாழ்வைப் படைத்துக் கொள்ளலாம் என்று நம்பினாள் — சுந்தர் அவள் வாழ்வில் குறுக்கிடும்வரை.

ஆனந்தன்தான் தன் நண்பன் சுந்தரை வீட்டிற்கு அழைத்து வந்தான். ஆனால் விதியின் குறும்புகளை ரசிக்கும் நிலையிலா விமலா இருந்தாள்? அன்றுதான் விமலா உண்மையில் தான் இழந்துவிட்ட செல்வத்தை உணர்ந்தாள். தான் இழந்துவிட்ட இன்ப வாழ்வின் உருவமாக சுந்தர் அவள் கண்களுக்குத் தோன்றினான். விமலா சுந்தரைக் காதலித்தாள்; உள்ளத்தின் ஒவ்வொரு அணுவாலும் காதலித்தாள். சுந்தரையும் அவன் அளித்து நின்ற இன்பத்தையும் தனதாக்கிக் கொள்ள விமலாவின் உள்ளம் துடித்தது ...... ஆனால் அவள் கால்களைப் பிணைத்து நின்ற பெரு விலங்கு ஒன்று அவளை அசையவொட்டாது தடுத்து நிறுத்தியது — ஆனந்தன் — அவள் கணவன்! ......... அல்ல கொடும் பேய்!

ஆனந்தனும் தன் இரண்டு வருட மணவாழ்க்கையும் குழந்தை உஷாவும் ஒரு கெட்ட கனவாகக் கலைந்து விடக் கூடாதா என்று விமலா ஏங்கினாள். அதைக் கனவாகவே மாற்றிவிடச் சுந்தர் அவளை உந்தினான்; வழிகாட்டினான்.

"என்னோடு வந்துவிடு விமலா! இதைவிட வேறு சமயம் வாய்க்காது. நாளை ஆனந்தன் திரும்புமுன் நாம் வெகு தூரம் போய்விடலாம்! நம் வாழ்வைத் தொடங்கலாம்! வந்துவிடு......" சிறிது முன்புதானே சொன்னான். இதோ அவன் குரல் விமலாவின் காதில் ரகசியமாக வற்புறுத்திக் கொண்டிருந்தது. அவன் கண்களில் தெறித்த அழைப்புத் தான் எப்படி அவள் உள்ளத்தைக் கிறங்கச் செய்தது!

"வந்துவிடு விமலா! வந்துவிடு!" மீண்டும் மீண்டும் அவள் கைகளைப் பிடித்து உலுக்கினான். அப்பொழுது......விமலா திகைத்தாள்! அவனுக்குமட்டும் எவ்வளவு துணிச்சல்! இன்று செய்துவிட்டு நாளை மறந்துவிடக்கூடிய காரியமா இது?

நீரோட்டத்தை எதிர்த்து நீந்தும் வல்லமைதான் அவளுக்கு ண்டா? விமலாவின் உள்ளம் அஞ்சி நடுங்கியது. சுந்தரோடு செல்ல அல்ல! ஆனந்தனே நினைத்தல்ல! உலகம் தூற்றுமே யென்று பயந்தாள்! சமூகம் பழி சொல்லுமேயென்று அஞ்சி ஞள்!

"உனக்கு என் காதலும் வேண்டும்! உன் கணவனும் வேண்டும். இல்லையா விமலா? ஆனல் எனக்கு உன்னை மட்டுமே வேண்டும். முழுவதும் எனக்குச் சொந்தமாக வேண்டும்! அது முடியாவிட்டால் என்னை மறந்துவிடு!"

சுந்தர் ஒரு நாளும் அவளைப் புரிந்துகொள்ளத் தவறியதில்லை; அவள் உள்ளத்தைச் சந்தேகிக்கவில்லை. இன்றுமட்டும் ஏன் இப்படிப் பேசினன்?

விமலா தலையைக் கைகளால் அழுக்கிப் பிடித்துக்கொண்டாள். சுந்தருக்கு என்ன பதில் சொல்லியிருந்தாள்? நினைவுக்கு வரமாட்டேனென்கிறதே ! . . . ஆ . . . மாம் !

"சுந்தர் உன்னை மறப்பதா ? என் உயிரை நான் மறந்தால் உன்னை மறக்க முடியும் சுந்தர் ! ஆனல் ... ஆனல் ..." விமலா மேலும் என்ன சொல்ல நினைத்தாளோ அவளுக்கே தெரியவில்லை. அதற்கிடையில் திடீரென்று குழந்தை உஷா வீறிட்டலறினள், அவளை சமாதானப்படுத்த முற்பட்ட ஆயாவின் குரலும் கேட்டது. விமலா தன்னையறியாது குழந்தையிடம் செல்ல எழுந்தாள். சுந்தர் தாவிவந்து அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

"-ஆனல் உன் குழந்தை வேண்டுமா விமலா ? என்னைக் காதலிப்பதானல் உன் குழந்தையையும் மறந்துவிட வேண்டும் விமலா ! இப்பொழுது நீ குழந்தையிடம் போனல் உன்

வாழ்வை விட்டே நான் போய் விடுவேன்" சுந்தரின் முகத்தில் உறுதி தெறித்தது. தன் கையை மெல்ல விடுவித்துக் கொண்ட விமலா கன்றிவிட்ட மணிக்கட்டைத் தடவியவாறு அப்படியே சோபாவில் உட்கார்ந்து விட்டாள்.

இப்பொழுது நினைத்துப் பார்க்கவும் விமலாவின் கண்களின் விளிம்பில் நீர் கோத்து நின்றது. இமைகளை வெட்டி அதை விழாமல் தடுத்தாள் . . . ஹாம் . . .! பிறகு என்ன?

அ . . . ம்! குழந்தையின் அழுகை அடங்கி ஓய்ந்தது . . .

"திருப்திதானே சுந்தர்?" அவள் குரல் மெதுவாக ஒலித்தது.

"இதற்குமேல் நீ தயங்குவதேன் விமலா?" அவன் ஆத்திரப்பட்டான்.

"சுந்தர், உன்னோடு வருவதால் நான் பெறும் வாழ்வை அனுபவிக்க உலகம் என்னை விடாதே!" என்று ஒருவாறு சொல்லியிருந்தாள்.

"என்ன சொல்லுகிறாய் விமலா?" அவன் புருவத்தைச் சுருக்கினான். அந்த முகத்தின் அழகுதான் எப்படி அவள் இதயத்தைச் சுண்டியிழுத்தது! தன்னை நிலைதடுமாற வைக்கும் அத்தனை மோகத்தை அவனுக்கு அள்ளிக் கொடுத்த கடவுளை எத்தனை நாள் நொந்திருக்கிறாள்?

"ஓடிப் போனவள் என்று உலகம் தூற்றுமே சுந்தர். எந்தச் சமூகத்தின் ஓர் அங்கமாக நாம் வாழ வேண்டுமோ அந்தச் சமூகமே நம்மை ஒதுக்கிவிடும்; இழித்துப் பேசும்.' விமலா அவனை மடக்கிவிட்டதாக நினைத்தாள். ஆனால் சுந்தர் அதற்கும் ஒருவிடை வைத்திருந்தான்.

"சமூகத்தின் கோட்பாடுகள் காலத்தால் மாறுபவை விமலா. இன்று ஓடிப்போனவள் என்னும் அதே வாயால் நாளைக்குக் காதலுக்கு மதிப்புக் கொடுத்தவள் என்று புகழ் பேசும்."

ஆனால் அதை நினைத்துப் பார்க்கவும் விமலாவின் மனம் நடுங்கியது. பழமையில் ஊறிய சமுதாயம்; அதில் வேத மென ஊன்றிவிட்ட வாழ்கை விதிகள். அவற்றை மீறி நடக்கத்துணிவதா? மனதில் இப்படி நினைத்தவள் அதை வாய் விட்டே சொல்லியும் விட்டாள்.

"உன் மனதின் உந்தலுக்கு இடம் கொடுக்கப் பயந்து நீ யாரோ சொல்வதைக் கேட்டு வாழும் கோழையென்றால் உனக்குக் காதலிக்க உரிமையேயில்லை விமலா! அந்த எண்ணத்தையே மறந்து விடு!" இப்படிக் கத்திய சுந்தர் போயே விட்டான்.

"சுந்தர் போகாதே! போகாதே!" அவள் எழுப்பிய குரலின் எதிரொலி இன்னும் முற்றும் அடங்கவில்லை.

விமலா எழுந்து ஜன்னலருகே சென்று வானத்தைப்பார்த்தாள். அது மேகமற்று நிர்மல நீலமாய் விரிந்து கிடந்தது.

விமலாவுக்குத் தன் மனம் முற்றும் புரியவில்லை. மனதின் மூலையில் உறுத்திய உணர்ச்சிக்கு அவளால் உருவம் கொடுக்க முடியவில்லை.

கணவனே கடவுள் என்பது அவள் தாய் கற்றுக் கொடுத்த பாடமா? இரத்தத்தில் ஏற்றிவிட்ட நம்பிக்கையா? இலக்கியங்கள் கண்ட முடிவா?

சீ! வெறும் கருத்துக்களை, கற்பனைகளை நம்பித் தன் உள்ளத்தை, உணர்ச்சிகளை அழித்துக்கொள்வதா?

தோட்டக்கார ரங்கன் வாயசைத்துப் பாடியவாறு பாத்திகளைக் கிண்டிக் கொண்டிருந்தான். பாட்டொலி காற்றில் மிதந்து வந்தது.

"காதல் செய்த குற்றம் எனது கண்கள் செய்த குற்றமானல்
கண்ணைப் படைத்த கடவுள் செய்கை சரியாதப்பா?

கல்யாணம் செய்த குற்றம் எனது நண்பன் செய்த குற்றமானல்
கற்பைப் படைத்த மனிதன் செய்கை சரியா தப்பா?"

அவன் திருப்பித் திருப்பிப் பாடினன். அதற்குமேல் சொற்கள் தெரியாதா என்ன அவனுக்கு? ரங்கனின் குரல் தேய்ந்து மறைந்து விமலாவின் உள்ளக் குரல் அவ்வார்த்தைகளைப் பற்றிக் கொண்டது! திருப்பித்திருப்பி உருப்போட்டது! சுந்தர் தான் சொல்லாமல் சொன்னனே?...... விமலா யோசித்தாள்.

ஆழமறியாமல் காலை விட்டுவிட்டால் குழியின் மண்ணை உதறிவிட்டு மீளும் எண்ணமே கூடாதா? நாளைய சாப்பாட்டை நினைத்து இன்று பட்டினி கிடப்பவர் உண்டா விமலா? கண்முன் காத்து நிற்கும் வாழ்வைக் காணுத சொர்க்க சுகத்திற்காக உதறிவிடுவதா? ...... சொர்க்கம் உண்மை அல்ல விமலா! சுந்தரும் அவன் அளிக்கும் சுகமும் இன்பங்களுமே உண்மை! உன்னை நாடி வரும் இன்பத்தை அனுபவிப்பதொன்றே உண்மை!

விமலா தன் அறைக்கு ஓடினுள். தன் உடமைகளை ஒரு சிறு கைப்பெட்டியில் அடக்கிக் கொண்டு அறையின் நடுவில் இருந்த தொட்டிலை நெருங்கினுள்.

அவள் குழந்தை — அல்ல — அவள் உடைத்தெறியப் போகும் பாசவிலங்கு—நிம்மதியாகத் தூங்கியது. விமலா மெல்ல ஒரு விரலை நீட்டி, அதன் உச்சியைத் தொட்டாள். உஷா சற்று அசைந்து கொடுத்தாள்.

"ம் ... மா!"

விமலாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது 'அம்மா அம்மா!' ஏதோ ஒரு புது வார்த்தையைச் சொல்லிப் பழகிக்கொள்வது போல் திருப்பித்திருப்பிச் சொல்லிக் கொண்டாள். அவள் உறுதி மெல்ல ஆட்டங் கண்டது...அவள் இக்குழந்தையின் தாய்! பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்! உஷா- அவள் உள்ளத்தின் ஒரு கூறு! உதிரத்தின் உதிரம்! முளைவிட்ட கொடியைப் பக்குவமாய்க் காத்துப் படரவிடுவது அவள் கடமையா? கடமைக்குத்தான் முதல் உரிமையா? விமலாவின் உலகம் இனி இக்குழந்தையில் அடங்க வேண்டியது தானா?

இல்லை! இது ஆனந்தனின் குழந்தை. அவளுடையதல்ல. அவள்-விமலா,ஒரு பெண். விருப்பு வெறுப்புக்காளான சாதாரணப் பெண். அவளுக்கு வாழ்வளிக்கக் காத்திருக்கும் சுந்தர் தான் இனி அவள் உலகம்! சுந்தர் தான் அவள் உலகம்! ...... விமலா பெண்ணென்றால் அதனால் உஷா தன் தாயை இழந்து தவிப்பதா? விமலாவிடம் தாய்மை செத்தே விட்டதா?

விமலா ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டாள்..... கைப்பெட்டி மெல்ல நழுவிக் கீழே விழுந்தது.

●

சுந்தர் கையிலிருந்த சிகரட்டை விட்டெறிந்தான். விமலாவின் மனதை அவளைவிடச் சுந்தரே நன்றாக அறிவான். அவள் தன்னிடம் வருவாள் என்று அவன் சந்தேகமற நம்பி

ஞன். இல்லாவிட்டால் இவ்வளவு கடுமையாகப் பேசிவிட்டு வந்திருப்பாஞ? விமலாவின் மனதில் இப்படி எத்தனையோ போராட்டங்கள்! ஆனுல் அவற்றின் முடிவு மட்டும் சுந்தருக்கு முன்பே முடிந்த விஷயமாகவே இருந்து வந்தது. ஆனுல் இன்று நேரம் போனதே தவிர விமலாவைக் காணவில்லை. சுந்தருக்குக் கவலை தொட்டது. பொறுமையிழந்தவன் எழுந்து கூண்டுப் புலியாய் மேலும் கீழும் நடக்கலாஞன்.

விமலா ஆனந்தனை எவ்வளவுக்கு வெறுத்தாளென்பதை அவனறிவான். அதில் சந்தேகம் இல்லை. ஆனுல் குழந்தைப் பாசம் அவள் உள்ளத்தின் உறுதியைக்குலைத்து மனதை மாற்றி விடுமென்று அவன் அஞ்சிஞன்--பெரிதும் அஞ்சிஞன். பாசத்தை முறிக்கக் காதலின் போதை தேவையென்றது அவன் மனம்! இன்றில்லாவிட்டால் இனி என்றுமேயில்லை என்று சுந்தர் உணர்ந்தான். விமலாவிடம் போ, போ என்று அவன் உள்ளம் அவனை உந்தித் தள்ளியது. சுந்தர் சட்டென்று திரும்பிஞன் —— "விமலா!! விமலா??" வியப்போடு உள்ள எழுச்சியோடு கூவிஞன். கதவில் சாய்ந்து நின்றுள் விமலா -- சுந்தர் கேட்காத கேள்விக்குப் பதிலாகத்தன் தலையைமெல்ல அசைத்தவள் கைப்பெட்டியைக் கீழே வைத்தாள். சுவாதீனத்தோடு உள்ளே வந்து ஸோபாவில் சாய்ந்த விமலா கண்களை மூடிஞள். அவள் இதயத்தைத் துடைத்தொரு நெடுமூச்சு எழுந்தது.

ஜூன் 1959.

முற்றும்

முன்னுரையில் கூறியிருப்பது போல, 'மீண்டும் வந்தது வசந்தம்', 'கானல்', 'அர்ப்பணம்', ஆகிய நான்கு கதைகளையும் இத்தொகுதியில் சேர்ப்பதாக முதலில் முடிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனல் இப்புத்தகத்தின் அளவையும் விலையையும் மட்டுப்படுத்துவதற்காக இக்கதைகள் விரைவில் வெளிவரவிருக்கும் இன்னெரு சிறுகதைத் தொகுதியில் சேர்க்கப்படுவன.

Cover designed by Puravijaya and Printed
by Rajeswari Press Colombo 11.

பதினான்கு கதைகளின் தொகுதியான ''கடவுளரும் மனிதரும்'' பவானியின் முதல் புத்தகமாகும். கொழும்பு மகளிர் கல்லூரியிலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்ற பவானி, மூன்று வருடங்களுக்கு முன், மாணவியாய் இருக்கும்போதே, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் இதழான 'இளங்கதிரி'ல் அவரது முதல் கதையான 'அர்ப்பணத்தி'ன் பிரசுரத்தோடு தமிழ் இலக்கியத் துறையில் சிறு கதை எழுத்தாளராகப் பிரவேசித்தார். அதுமுதல் பல்வேறு பத்திரிகைகளிலும், இலக்கிய சஞ்சிகைகளிலும், அவரது கதைகள் பிரசுரமாகியுள்ளன.

''கடவுளரும் மனிதரும்'' என்னும் இத்தொகுதியில் உள்ள கதைகளில் உள்ளமுருக்கும் கவிதைத்தன்மையும் மனித இயல்பை ஆழ்ந்து உணர்ந்து புரிந்து கொண்ட தன்மையும் புலனாகின்றன. இக்கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் சோகத்தையும் அழகையும் கடந்து காருண்ய மனிதத்தன்மை விளங்குகின்றது. இம்மனிதத்தன்மை, இழிந்த நிலைமைகளில் வாழ்பவராய், கடவுள் நிலைக்கு உயருபவர்களுக்கு அருகே நிழல்களில் ஒதுங்கி நிற்கும் வெறும் மனிதர்களுக்கு இரங்கும்படி வேண்டுகின்றது. இக்கதைகளின் கவிதையும் அழகும் எவ்வளவுக்கெவ்வளவு உள்ளத்தைத் தொடுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றில் பொதிந்திருக்கும் செய்தி சிந்தனையைத் தூண்டுகின்றது.

''கடவுளரும் மனிதரும்'' என்ற தலைப்புடன் இப்புத்தகத்தில் ஒரு கதையுமில்லை. ஆனால் இத்தலைப்பு பொதுப்படையாக எல்லாக்கதைகளையும் குறிப்பதோடு ஆசிரியரின் தரிசனத்தையும் பரந்த நோக்



பவானி

விலை 2-75.